# மாணவ தோழன்

# 8 ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

## வினா விடைத் தொகுப்பு

2020-21 கல்வியாண்டு



ஆக்கம்

சி.மகேந்திரன், M.A, B.Ed

Manavathozhan.blogspot.com

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# பாடப்பொருள் அட்டவணை


| அலகு | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | ஐரோப்பியர்களின் வருகை | 3 |
| 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 7 |
| 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 12 |
| 4 | மக்களின் புரட்சி | 16 |
| 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 20 |
| 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 24 |
| 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்புற மாற்றங்கள் | 28 |
| 8 | காலங்கள்தொறும் இந்தியப் பெண்களின் நிலை | 32 |
| | **புவியியல்** | |
| 1 | பாறை மற்றும் மண் | 35 |
| 2 | வானிலையும் காலநிலையும் | 38 |
| 3 | நீரியல் சுழற்சி | 42 |
| 4 | இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 46 |
| 5 | இடர்கள் | 49 |
| 6 | தொழிலகங்கள் | 52 |
| 7 | கண்டங்களை ஆராய்தல் (ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 55 |
| 8 | புவிப்படங்களை கற்றறிதல் | 60 |
| | **குடிமையியல்** | |
| 1 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது? | 63 |
| 2 | குடிமக்களும் குடியுரிமையும் | 65 |
| 3 | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 67 |
| 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 70 |
| 5 | சாலைப் பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 74 |
| 6 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 78 |
| 7 | நீதித்துறை | 82 |
| | **பொருளியியல்** | |
| 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 85 |
| 2 | பொது மற்றும் தனியார் துறைகள் | 89 |

# வரலாறு

## அலகு - 1 ஐரோப்பியர்களின் வருகை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார் ?
அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
**இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்** ஈ) அல்மெய்டா

2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?
அ) நெதர்லாந்து (டச்சு) **ஆ) போர்ச்சுகல்** இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்

3. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி- நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?
அ) பிரான்ஸ் **ஆ) துருக்கி** இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன்

4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ________ நாட்டைச் சேர்ந்தவர்
அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின் **இ) இங்கிலாந்து** ஈ) பிரான்ஸ்

5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை
அ) வில்லியம் கோட்டை **ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை**
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக , இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்
(அ) ஆங்கிலேயர்கள் **(ஆ) பிரெஞ்சுக்காரர்கள்** (இ) டேனியர்கள் (ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ________ வர்த்தக மையமாக இருந்தது
(அ) போர்ச்சுக்கீசியர்கள் (ஆ) ஆங்கிலேயர்கள் (இ) பிரெஞ்சுக்காரர்கள் **(ஈ) டேனியர்கள்**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) ________ ல் அமைந்துள்ளது.
2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் ________ என்பவரால் ஆதரிக்கப்பட்டார் .
3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556ல் ________ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது.
4. முகலாயப் பேரரசர் ________ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார் .
5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ________ என்பவரால் நிறுவப்பட்டது.
6. ________ என்ற டென்மார்க் மன்னர் ,டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார் .

**விடைகள் :** **1. புதுடெல்லி 2. இரண்டாம் ஜான் 3. போர்ச்சுகீசியர் 4. ஜஹாங்கீர் 5. கால்பர்ட் 6. நான்காம் கிரிஸ்டியன்**

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1 | டச்சுக்காரர்கள் | - | 1664 |
| 2 | ஆங்கிலேயர்கள் | - | 1602 |
| 3 | டேனியர்கள் | - | 1600 |
| 4 | பிரெஞ்சுக்காரர்கள் | - | 1616 |

**விடைகள் :** **1, 1602 2. 1600 3. 1616 4. 1664**

**IV. சரியா, தவறா?**

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **சரி**

www.Padasalai.Net


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **சரி**

3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார் . **தவறு**

4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது. **சரி**

**V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (டிக்) செய்க.**

1. கவர்னர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர் .
3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர் .
4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார் .

(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 2 மற்றும் 4 சரி (இ) 3 மட்டும் சரி **(ஈ) 1, 2 மற்றும் 4 சரி**

**2) தவறான இணையைக் கண்டறிக.**

**(அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்**
(ஆ) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
(இ) கேப்டன் ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
(ஈ) கால்பர்ட் - பிரான்ஸ்

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடையளி.**

**1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.**

- வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது.
- இது கடந்த கால நிர்வாக முறைகளைப் புரிந்து கொள்வதற்கான அனைத்துத் தகவல்களுடன் தற்கால மற்றும் எதிர்கால தலை முறையினருக்கும் ஒரு வழிகாட்டியாக இது விளங்குகிறது.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**

- நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன.
- நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது.

**3. இளவரசர் ஹென்றி “மாலுமி ஹென்றி” என ஏன் அழைக்கப்படுகிறார் ?**

- போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.
- இதனால் அவர் “மாலுமி ஹென்றி” என அழைக்கப்படுகிறார்

**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக..**

- பழவேற்காடு, சூரத், சின்சுரா , காசிம்பஜார் , பாட்னா , நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின்

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.**

- சென்னை, பம்பாய், கல்கத்தா, மசூலிப்பட்டினம், சூரத், ஆக்ரா , அகமதாபாத், புரோச்.

**VII. விரிவான விடையளி**

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.**

- நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக - பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன .

- தொடக்க காலத்திலிருந்தே போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் தங்களுடைய அலுவலக செயல்பாடுகளை தங்களது அரசாங்கப் பதிவேடுகளில் பதிவு செய்துள்ளனர் .
- பராமரிக்கப்பட்ட அவர்களது பதிவுகள் இந்தியாவில் அவர்களது தொடர்பு பற்றி அறிய உதவும் மதிப்பு மிக்க ஆதாரங்களாக உள்ளன.
- லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள ஆவணக் காப்பகங்கள் விலை மதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாகும்.

**2. போர்ச்சுகீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர் ?**

- வாஸ்கோடகாமா ஒருவரின் உதவியோடு கி.பி.(பொ .ஆ) 1498ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார் . கண்ணனூர் கள்ளிக்கோட்டை , கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார் .
- இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சோ டி-அல்புகர்க் ஆவார் . கோவா மற்றும் ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார். இந்தியப் பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை ஊக்குவித்தார் .
- அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530ல் தலை நகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார் .
- இவ்வாறு போர்ச்சுக்கீசியர் 16 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளையும் வங்காள கடற்கரையில் ஹுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளையும் கைப்பற்றினர் .

**3. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர் ?**

- இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்ட ன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதிப் பட்டயம் வழங்கினார் .
- பேரரசர் ஜஹாங்கீர், 1613ல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார் .
- பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் வாயிலாக சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது..
- பின்னர் பம்பாய்,கல்கத்தா ஆகிய பகுதிகளில் வர்த்தக மையங்களை விரிவுப்படுத்தினர்.
- 1757ல் பிளாசி போர் மற்றும் 1764ல் பக்சார் போருக்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது.

**IX. உயர் சிந்தனை வினா**

**கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?**

- கி.பி.(பொ .ஆ) 1453ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது.
- இது ஐரோப்பிய நாடுகளின் வணிகத்தை பாதித்தது.
- இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

www.Padasalai.Net www.CBSEtips.in


VIII. வரைபடதிறன்: இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக 1. கள்ளிக்கோட்டை 2. கொச்சின் 3. மெட்ராஸ் 4. பாண்டிச்சேரி 5. சூரத் 6. சின்சுரா 7. பழவேற்காடு 8. கல்கத்தா





Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# அலகு - 2 வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. 1757ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்
அ) சுஜா-உத்- தௌலா **ஆ) சிராஜ்- உத் - தௌலா** இ) மீர்காசிம் ஈ) திப்பு சுல்தான்

2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு
**அ) 1757** ஆ) 1764 இ) 1765 ஈ) 1775

3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை
**அ) அலகாபாத் உடன்படிக்கை** ஆ) கர்நாடக உடன்படிக்கை
இ) அலிநகர் உடன்படிக்கை ஈ) பாரிசு உடன்படிக்கை

4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி __________ கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
அ) முதல் **ஆ) இரண்டாம்** இ) மூன்றாம் ஈ) ஏதுமில்லை

5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு __________
அ) 1756 **ஆ) 1761** இ) 1763 ஈ) 1764

6. மங்களூர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது
அ) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் திப்பு சுல்தான்
ஆ) ஹைதர் அலி மற்றும் கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின்
**இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்**
ஈ) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்

7. மூன்றாம் ஆங்கிலேய - மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர்____
அ) இராபர்ட் கிளைவ் ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ் **இ) காரன்வாலிஸ்** ஈ) வெல்லெஸ்லி

8. ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்து கொண்டவர்_________
**அ) இரண்டாம் பாஜிராவ்** ஆ) தௌலத்ராவ் சிந்தியா
இ) ஷாம்பாஜி போன்ஸ்லே ஈ) ஷாயாஜி ராவ் கெய்க்வாட்

9. மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா ____
அ) பாலாஜி விஸ்வநாத் **ஆ) இரண்டாம் பாஜிராவ்** இ) பாலாஜி பாஜிராவ் ஈ) பாஜிராவ்

10. துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய அரசு எது?
அ) அயோத்தி **ஆ) ஹைதராபாத்** இ) உதய்பூர் ஈ) குவாலியர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு **1757**
2. சிராஜ் உத் - தௌலாவின் தலைமை படைத்தளபதி **மீர்ஜாபர்**
3. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் **கர்நாடக மற்றும் ஹைதராபாத் வாரிசுரிமை பிரச்சனை**
4. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் **டல்ஹௌசி பிரபு**
5. திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் **வெல்லெஸ்லி பிரபு**
6. திப்பு சுல்தான் இறப்புக்கு பின் **மூன்றாம் கிருஷ்ணராஜ உடையார்** வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.
7. 1800ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் **வெல்லெஸ்லி பிரபு**

**III. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1 | அய் - லா - சப்பேல் உடன்படிக்கை | - | முதல் ஆங்கிலேய மைசூர் போர் |
| 2 | சால்பை உடன்படிக்கை | - | முதல் கர்நாடகப் போர் |
| 3 | பாரிசு உடன்படிக்கை | - | மூன்றாம் கர்நாடகப் போர் |
| 4 | ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை | - | முதல் மராத்திய போர் |
| 5 | மெட்ராஸ் உடன்படிக்கை | - | மூன்றாம் ஆங்கிலே மைசூர் போர் |

**விடைகள்** : **1. முதல் கர்நாடகப் போர் 2. முதல் மராத்திய போர் 3. மூன்றாம் கர்நாடகப் போர் 4. மூன்றாம் ஆங்கிலே மைசூர் போர் 5. முதல் ஆங்கிலேய மைசூர் போர்**

**IV. சரியா, தவறா ?**

1. அலிவர்திகான் மறைவுக்கு பின்னர் சிராஜ்- உத் - தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார். **- சரி**
2. பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார்.**- தவறு**
3. ஐரோப்பாவில் வெடித்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இரண்டாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது. **- தவறு**
4. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார். **- சரி**
5. காரன்வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார். **- சரி**

**V. கீழ்க்கண்டவைகளுள் சரியாக பொருந்தியுள்ளது எது?**

1. அடையாறு போர் - 1748
2. ஆம்பூர் போர் - 1754
3. **வந்தவாசிப் போர் - 1760**
4. ஆற்காட்டுப் போர் - 1749

**VI. கீழ்க்கண்டவைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி**

**1. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.**

- சிராஜ்-உத்-தௌலாவின் படை வீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைப்பிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டறையில் ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர்.
- மறுநாள் காலை அறையை திறந்தபோது அவர்களுள் 123 பேர் மூச்சு திணறி இறந்தனர்.
- இது வரலாற்றில் 'இருட்டறை துயரச் சம்பவம்' என்றழைக்கப்படுகிறது.

**2. பிளாசிப் போருக்குபின் ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் யாவை ?**

- பிளாசிப் போர் வெற்றி ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு அவர்களது ஆதிக்கத்தை நீடிக்கவும் செய்தது.

**3. பக்சார் போருக்கான காரணங்களை குறிப்பிடுக.**

- வங்காள நவாப் மீர்காசிம் தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்க வரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது கோபமடைந்து கலகத்தில் ஈடுபட்டார்.
- ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட மீர்காசிம், சுஜா-உத்- தௌலா, இரண்டாம் ஷா ஆலம் ஆகியோருடன் இணைந்து போரில் இறங்கினார்.

**4. முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் யாவை ?**

- ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாயின.

- ❖ ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

**5. மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை ?**

- ❖ மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது மற்றும் பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.
- ❖ தோற்கடிக்கப்பட்ட மராத்திய கூட்டமைப்பு அரசுகளின் பகுதிகள் ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.
- ❖ மராத்தியரின் கடைசி பேஷ்வாவான இரண்டாம் பாஜிராவிற்கு வருடாந்திர ஓய்வூதியம் 8 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**6. துணைப்படைத்திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக**

- ❖ ஹைதராபாத், தஞ்சாவூர், அயோத்தி, பேஷ்வா, போன்ஸ்லே, குவாலியர், இந்தூர், ஜெய்பூர், உதய்பூர் மற்றும் ஜோத்பூர்.

**VII. விரிவான விடையளி**

**1. இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

**காரணங்கள்:**

- ❖ கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வாரிசுரிமை பிரச்சனையே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது.
- ❖ இப்போர் மூலம் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்ட ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எண்ணினர்.

**ஆம்பூர் போர் (1749)**

- ❖ ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே , சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். சந்தாசாகிப்பை பிரெஞ்சுக்கார்கள் கர்நாடக நவாப் ஆக்கினர்.
- ❖ நாசிர் ஜங்-ன் சகோதரர் சலபத் ஜங் பிரெஞ்சுப் படைத்தளபதி புஸ்ஸியின் உதவியுடன் ஹைதராபாத் நிசாம் ஆனார்.

**ஆற்காட்டுப் போர் (1751)**

- ❖ டியூப்ளே , முகமது அலி தஞ்சம் புகுந்த திருச்சி கோட்டையை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினார். இம்முயற்சியில் சந்தா சாகிப்பும் (கர்நாடக நவாப்) தன்னை பிரெஞ்சுப் படைகளோடு இணைத்துக் கொண்டார்.
- ❖ இச்சமயத்தில் ஆற்காட்டை இராபர்ட் கிளைவ் கைப்பற்றினார். அன்வாருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார்.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை (1755)**

- ❖ டியூப்ளேவைத் தொடர்ந்து பிரெஞ்சு ஆளுநராக பதவியேற்ற கோதேயு ஆங்கிலேயருடன் பாண்டிச்சேரி உடன்படிக்கையினை செய்து கொண்டார்.
- ❖ இதன் படி இரு நாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும்,
- ❖ போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்பட்டது. மேலும் புதிய கோட்டைகளை கட்டக் கூடாது எனவும் கூறப்பட்டது.
- ❖ இவ்வுடன்படிக்கை மூலம் ஆங்கிலேயர் மேலும் வலிமை பெற்றனர்.

**2. நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் பற்றி எழுதுக.**

**காரணங்கள்**

- ❖ திப்பு சுல்தானின் ஆங்கிலேயருக்கு எதிரான வெளிநாட்டு கூட்டணிக்கான முயற்சி.
- ❖ ஸ்ரீரங்கப்பட்டிண உடன்படிக்கையின் மூலம் காரன்வாலிஸ் பிரபுவால் ஏற்பட்ட அவமரியாதை.
- ❖ பிரெஞ்சு மற்றும் நெப்போலியனுடனான திப்புவின் தொடர்பு.

**போரின் போக்கு**

- ❖ 1799ல் வெல்லெஸ்லி பிரபு திப்புவின் மீது போர் தொடுத்தார்.
- ❖ 1799 மே 4ஆம் நாள் ஸ்ரீரங்கபட்டிணம் கைப்பற்றப்பட்டது.
- ❖ திப்பு சுல்தான் வீரதீரமாக போரிட்டாலும் இறுதியில் கொல்லப்பட்டார்.
- ❖ மேலும் ஒட்டுமொத்த மைசூரும் ஆங்கிலேயர் முன்பாக சரணடைந்தது.

**விளைவுகள்**

- ❖ கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்து கொண்டனர்.
- ❖ மீண்டும் இந்து உயர் குடும்பத்தை சேர்ந்த மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார் மைசூர் அரியணை ஏறினார்.
- ❖ திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டைக்கு அனுப்பட்டனர்.

**3. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி?**

- ❖ டல்ஹௌசி பிரபு ஆங்கிலேய பேரசை விரிவுபடுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கை என்ற புதிய கொள்கையை கொண்டு வந்தார்.
- ❖ 1848ஆம் ஆண்டு அவர் அறிவித்த இக்கொள்கையின் படி, சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளை தத்தெடுக்க நேரிடும் போது, மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும், மன்னரின் ஆட்சிப்பகுதி ஆங்கிலேயரின் தலையாய சக்திக்கும் செல்ல நேரிடும் எனப்பட்டது.
- ❖ இக்கொள்கையினை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர்.
- ❖ 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.

**4. வெல்லெஸ்லி பிரபு எவ்வாறு ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுபடுத்தினார்?**

- ❖ இந்தியாவில் இருந்த சுதேச அரசுகளை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்ப ட்ட திட்டமே துணைப்படைத் திட்டமாகும்.
- ❖ ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, இந்திய சுதேச அரசர்களின் செலவிலேயே தன்னுடைய படையை பராமரித்தது.
- ❖ ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பிய அலுவலர்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.
- ❖ கம்பெனி, சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையினை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.
- ❖ வெல்லெஸ்லி பிரபுவின் இந்த இராஜதந்திர முயற்சி ஆங்கிலேயரை இந்தியாவில் தலையாய சக்தியாக மாற்றியது.
- ❖ இவர் 'இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு' என்பதை 'இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு' என்று மாற்றினார்.


**VIII. உயர் சிந்தனை வினா**

**இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றிக்கான காரணங்களை விளக்குக**

- ❖ மிகப்பெரிய கடல் வலிமை .
- ❖ நெசவுத் தொழில் வளர்ச்சி.
- ❖ அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்.
- ❖ பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமை மிக்க இராஜதந்திரம்.
- ❖ இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்.
- ❖ இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

**IX. வரைபட பயிற்சி** இந்திய- நதிகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிப்பிடுக.

1. பிளாசி 2. பக்சார் 3. புரந்தர் 4. ஆற்காடு 5. வந்தவாசி



# அலகு - 3 கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?

அ) மகல்வாரி முறை ஆ) இரயத்துவாரி முறை
**இ) ஜமீன்தாரி முறை** ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. எந்த கவர்னர் ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் செய்து கொள்ளப்பட்டது?

அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு **ஆ) காரன்வாலிஸ் பிரபு**
இ) வெல்லெஸ்லி பிரபு ஈ) மிண்டோ பிரபு

3. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன ?

அ) வீடு ஆ) நிலம் **இ) கிராமம்** ஈ) அரண்மனை

4. மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்து கொள்ளப்பட்டது?

அ) மகாராஷ்டிரா ஆ) மதராஸ் இ) வங்காளம் **ஈ) பஞ்சாப்**

5. கீழ்க்காணும் கவர்னர்களுள் மகல்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆ) காரன்வாலிஸ் பிரபு
இ) வெல்லெஸ்லி பிரபு **ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு**

6. ஆங்கிலே யரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?

அ) பம்பாய் ஆ) மதராஸ் **இ) வங்காளம்** ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?

அ) மகாத்மா காந்தி ஆ) கேசப் சந்திரராய்
**இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்** ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல்

8. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?

**அ) சர்தார் வல்லபாய் பட்டேல்** ஆ) மகாத்மா காந்தி
இ) திகம்பர் பிஸ்வாஸ் ஈ) கேசப் சந்திர ராய்

**II.கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. **மகல்வாரி முறை** என்பது ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறையாகும்.
2. மகல்வாரி முறை **ஹோல்ட் மெகன்சி** என்பவரின் சிந்தனையில் உதித்த திட்டம்.
3. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி **வங்காளத்தில்** நடைபெற்றது.
4. மாப்ளா கலகம் **கேரளாவில்** நடைபெற்றது.
5. 'சம்பரான் விவசாயச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட ஆண்டு **1918**

**III. பொருத்துக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நிரந்தர நிலவரி திட்டம் | - | அ. | மதராஸ் |
| 2 | மகல்வாரி முறை | - | ஆ. | இண்டிகோ விவசாயிகளின் துயரம் |
| 3 | இரயத்துவாரி முறை | - | இ. | வடமேற்கு மாகாணம் |
| 4 | நீல் தர்பன் | - | ஈ. | வங்காளம் |
| 5 | சந்தால் கலகம் | - | உ. | முதல் விவசாயிகள் கிளர்ச்சி |

**விடைகள் :** 1 - ஈ, 2 - இ, 3 - அ, 4 - ஆ, 5 - உ

**IV. சரியா, தவறா?**

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். - **சரி**
2. இரயத்துவாரி முறை, தாமன் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது. - **சரி**

3. குஜராத்தின் யூசுப்ஷாகி என்ற பர்கா னாவில் பாப்னா கலகம் ஏற்பட்டது. - **தவறு**
4. "பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்" 1918ல் நிறைவேற்றப்பட்டது. - **தவறு**

**V. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையை ( )செய்யவும்**

1. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்.
   அ) இந்த முறை 1793 ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
   ஆ) ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர் ஆவர் .
   **இ) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது.**
   ஈ) இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19% நிலப்பரப்பில் நடமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

2. கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் நடைபெற்ற விவசாய புரட்சி பற்றிய சரியான கூற்று எது?
   அ) சந்தால் கலகம் வங்காளத்தில் நடைபெற்றது.
   **ஆ) நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது.**
   இ) தக்காண கலகம் 1873 ல் பூனாவில் உள்ள கிராமம் ஒன்றில் துவங்கியது.
   ஈ) மாப்ளா கலகம் தமிழகத்தில் நடைபெற்றது.

**VI. பின்வருவனவற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடை தருக.**

**1. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.**
- ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.
- விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்பட்டனர்.

**2. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை ?**
- வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்துகொள்ளப்பட்டது.
- நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது.
- அரசு, விளைச்சலில் 45 லிருந்து 50 சதவீதம் வரை வரியாக நிர்ணயம் செய்தது.

**3. மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக.**
- கிராமத் தலைவர், சலுகைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினார்.
- இம்முறையானது விவசாயிகளுக்கு இலாபகரமானதாக இல்லை.
- மேலும் இது கிராமத்தின் உயர் வகுப்பினருக்கு இலாபகரமானதாக அமைந்தது.

**4. 1859-60 ல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம் என்ன ?**
- விவசாயிகளுக்கு மிகவும் தீமை தரும் வகையில் இண்டிகோவை வளர்ப்பதற்கு குத்தகை விவசாயிகளை கட்டாயப்படுத்தினர்.
- மேலும் குத்தகை விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் அவுரியை தங்களுக்கு குறைந்த விலைக்கு விற்கும்படியும், வற்புறுத்தப்பட்டனர்.

**5. சம்பரான் சத்தியாகிரகத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை குறிப்பிடுக?**
- சம்பரான் விவசாயிகளின் பிரச்சினையை அறிந்து கொண்ட மகாத்மா காந்தி அவர்களுக்கு உதவ முன்வந்தார் .
- அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, மகாத்மா காந்தியை அக்குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொண்டது.
- விவசாயிகளின் குறைகள் விசாரிக்கப்பட்டு இறுதியில், மே, 1918ல் "சம்பரான் விவசாயச் சட்டம்" நிறைவேற்றப்பட்டது.

**6. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக.**
- 1928ல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது அதனால், பர்தோலி (குஜராத்) விவசாயிகள் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

- ❖ விவசாயிகள், உயர்த்தப்பட்ட நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து பிப்ரவரி 12, 1928ல் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர். இதில் பல பெண்களும் கலந்து கொண்டனர்.

**VII. விரிவான விடையளி**

**1. நிலையான நிலவரி திட்டத்தின் நிறை , குறைகளை விவாதிக்க.**

**நிறைகள்**

- ❖ தரிசு நிலங்கள் மற்றும் காடுகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன.
- ❖ ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளராயினர்.
- ❖ நீதி வழங்கும் பொறுப்பிலிருந்து ஜமீன்தார்கள் விடுவிக்கப்பட்டனர்.
- ❖ ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக மாறினர்.
- ❖ ஆங்கில அரசுக்கு நிலையான வருவாயை கிடைப்பதை உறுதி செய்தது.

**குறைகள்**

- ❖ ஆங்கிலேய அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.
- ❖ விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, ஜமீன்தார்களின் பொறுப்பில் விடப்பட்டனர்.
- ❖ விவசாயிகள் பெரும்பாலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.
- ❖ இந்த திட்டத்தினால் ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பரப் பிரியர்களாவும் மாறினர்.
- ❖ வங்காளத்தின் பல கிராமப்புறங்களில் ஜமீன்தார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே பல மோதல்கள் ஏற்பட்டன.

**2. ஆங்கிலேயர்களின் நிலவரி திட்டங்கள் இந்திய விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன?**

- ❖ அனைத்து நிலவரி முறைகளும் பொதுவாக, நிலத்திலிருந்து அதிகபட்ச வருமானம் பெறுவதாகவே இருந்தது. இதனால் நில விற்பனை அதிகரிப்பு மற்றும் விவசாயத் தொழில் அழிவிற்கு வழிவகுத்தது.
- ❖ விவசாயிகள் அதிக வரிவிதிப்பினால் பாதிக்கப்பட்டனர். அதிக வரிச்சுமை மற்றும் பஞ்சத்தினால் மக்கள் வறுமையாலும், கடன்சுமையாலும் அவதிப்பட்டனர்
- ❖ ஜமீன்தார்கள், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களால் ஏழை விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.
- ❖ இந்திய கிராமங்களுக்கான நிலைப்புத் தன்மையும் தொடர்ச்சியான நிலையும் அசைக்கப்பட்டன.
- ❖ ஆங்கிலேய இறக்குமதி பொருட்களால் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன. விவசாயிகள் வருமானத்திற்கு வேறு வழியின்றி தவித்தனர்.

**3. மாப்ளா கிளர்ச்சி பற்றி ஒரு பத்தியில் எழுதுக.**

- ❖ மாப்ளா என்று அழைக்கப்பட்ட முஸ்லீம் விவசாயிகள் (கேரளா), இந்து ஜமீன்தார்கள் (ஜென்மிஸ்) மற்றும் ஆங்கில அரசால் அடக்கப்பட்டு, சுரண்டப்பட்டனர்.
- ❖ ஆகஸ்ட் 1921ல் மாப்ளா விவசாயிகள், ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- ❖ கிளர்ச்சியின் ஆரம்பத்தில் மாப்ளா விவசாயிகள் காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், செய்தி தொடர்பு சாதனங்கள், அடக்குமுறையில் ஈடுபட்ட நிலக்கிழாரின் வீடுகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட அனைவரையும் தாக்கினர்.
- ❖ ஆனால் 1921 டிசம்பர் வாக்கில் அரசு இரக்கமின்றி மாப்ளா கிளர்ச்சியை அடக்கியது.
- ❖ அரசின் அதிகாரப்பூர்வ மதிப்பீட்டின்படி, அரசு தலையீட்டின் விளைவாக 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.
- ❖ 1650 பேர் காயமடைந்தனர் மற்றும் 45,000க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

**VIII. உயர்சிந்தனை வினா.**

**வரிகள் மட்டும் அல்லாமல் வேறு எந்த வகைகளில் ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளின் நிலங்களை சுரண்டினர்.**

- இந்தியாவில் ஆங்கில ஆட்சியானது வேளாண்மை முறையில் பல மாற்றங்களை கொண்டு வந்தது.
- புதிய வேளாண்மை யுக்திகளால் பழைய வேளாண் முறை மறைந்து போனது.
- ஜமீன்தார்கள் நில உரிமையாளர்களாக மாறினர். எந்தளவிற்கு முடியுமோ அந்தளவிற்கு, விவசாயிகளின் உழைப்பு ஜமீன்தார்களால் சுரண்டடப்பட்டது.
- மேலும் விவசாயிகளின் வாழ்க்கை முறை மிகவும் துயரமானதாக இருந்தது.

www.Padasalai.Net

# அலகு - 4 மக்களின் புரட்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1519 ஆ) 1520 **இ) 1529** ஈ) 1530

2. பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர்
**அ) பூலித்தேவன்** ஆ) யூசுப்கான் இ) கட்டபொம்மன் ஈ) மருது சகோதரர்கள்

3. காலின் ஜாக்சன் எந்தப் பகுதியின் ஆட்சியாளர்
அ) மதுரை ஆ) திருநெல்வேலி **இ) இராமநாதபுரம்** ஈ) தூத்துக்குடி

4. வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்க்கண்ட எந்த கோட்டையின் முன்பு தூக்கிலிடப்பட்டார் ?
அ) பாஞ்சாலங்குறிச்சி ஆ) சிவகங்கை இ) திருப்பத்தூர் **ஈ) கயத்தாறு**

5. வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?
அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி **இ) சிவகங்கை** ஈ) விருப்பாச்சி

6. 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' யாரால் வெளியிடப்பட்டது.
**அ) மருது பாண்டியர்கள்** ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர்
இ) வேலு நாச்சியார் ஈ) தீரன் சின்னமலை

7. கீழ்க்கண்டவைகளுள் தீரன் சின்னமலையோடு தொடர்புடைய பகுதி எது?
அ) திண்டுக்கல் ஆ) நாகலாபுரம் இ) புதுக்கோட்டை **ஈ) ஓடாநிலை**

8. ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?
**அ) மத்திய இந்தியா** ஆ) டெல்லி இ) கான்பூர் ஈ) பரெய்லி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. கிழக்குப்பகுதி பாளையங்கள் **கட்டபொம்மன்** கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.
2. விஸ்வநாத நாயக்கர் அவரது அமைச்சர் **அரியநாதர்** உடன் கலந்தாலோசித்து பாளையக்கார முறையை ஏற்படுத்தினார்.
3. கட்டபொம்மனின் முன்னோர்கள் **ஆந்திரா** பகுதியைச் சார்ந்தவர்கள்.
4. **வேலுநாச்சியார்** தமிழர்களால் 'வீர மங்கை ' எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார் .
5. **சின்னமருது** 'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுகிறார்.
6. 1857 புரட்சியை **வி.டி.சவார்க்கர்** என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப்போர் ' என விவரிக்கிறார்.

**III. பொருத்துக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | டெல்லி | - | அ. | கன்வர் சிங் |
| 2 | கான்பூர் | - | ஆ. | கான் பகதூர் கான் |
| 3 | ஜான்சி | - | இ. | நானா சாகிப் |
| 4 | பரெய்லி | - | ஈ. | லட்சுமி பாய் |
| 5 | பீகார் | - | உ. | இரண்டாம் பகதூர் ஷா |

**விடைகள்** : **1 - உ, 2 - இ, 3 - ஈ, 4 - ஆ, 5 - அ**

**IV. சரியா/ தவறா?**

1. விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். - **சரி**
2. சிவசுப்பிரமணியம் என்பவர் மருது பாண்டியர்களின் அமைச்சர் ஆவார். - **தவறு**
3. 1799 அக்டோபர் 17 ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார் . - **சரி**

4. திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் ஆவார். - **சரி**

**V. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்.**

I. வேலூர் புரட்சி 1801 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

II. நான்காம் மைசூர் போருக்குப்பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.

III. வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னையின் ஆளுநராக இருந்தார் .

IV. ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்.

a) I & II சரி b) II & IV சரி **c) II & III சரி** d) I, II, & IV சரி

**a) தவறான இணையைக் கண்டுபிடிக்கவும்**

**1. மருது பாண்டியர் - எட்டயபுரம்**
2. கோபால நாயக்கர் - திண்டுக்கல்
3. கேரளவர்மன் - மலபார்
4. துண்டாஜி - மைசூர்

**b) மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி**

கட்டபொம்மன், ஊமத்துரை , செவத்தையா, **திப்பு சுல்தான்**

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி**

**1. பாளையக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயரைக் கூறுக?**

- விஸ்வநாதர் நாயக்கர் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தினார்.
- அதன் மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- **சில பாளையக்காரர்கள்:** பூலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை , மருது சகோதரர்கள் மற்றும் தீரன் சின்னமலை

**2. பாளையக்கார புரட்சியில் வேலு நாச்சியாரின் பங்கு என்ன ?**

- இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார்.
- இவர் தமிழர்களால் 'வீரமங்கை ' எனவும் 'தென்னிந்தியாவின் ஜான்சி ராணி' எனவும் அறியப்படுகிறார்.

**3. தென்னிந்திய புரட்சியில் பாளையக்கார கூட்டமைப்பின் தலைவர்கள் யாவர்?**

- சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர் , மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்ப நாயக்கர் மற்றும் துண்டாஜி

**4. 'திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின்' முக்கியத்துவம் யாது?**

- ஜூன் 1801ல் மருது சகோதரர்கள் 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' என்றழைக்கப்பட்ட 'சுதந்திரப் பிரகடனம்' ஒன்றை வெளியிட்டனர்.
- இதன் மூலம் மருது சகோதரர்கள், ஆங்கிலேயர்களுக்கெதிரான எதிர்ப்புணர்ச்சியை நாடெங்கும் பரப்பினர்.
- 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது.

**5. வேலூர் கலகத்தின் விளைவுகளை எழுதுக?**

- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார் .


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**6. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான உடனடிக் காரணம் என்ன ?**

- ❖ இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டுரக துப்பாக்கியே உடனடிக் காரணமாக இருந்தது.
- ❖ பசுவின் கொழுப்பு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாயிற்று.

**VII. விரிவான விடையளி**

**1. பூலித்தேவர் பற்றி உனக்குத் தெரிந்தவற்றை எழுதுக?**

- ❖ இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர் ஆவார்.
- ❖ அவர் திருநெல்வேலியின் அருகிலிருந்த நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார்.
- ❖ இந்தியாவில், ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்த முதல் இந்திய மன்னர் பூலித்தேவரே ஆவார்.
- ❖ பூலித்தேவர் நவாப் மற்றும் ஆங்கிலேயரை எதிர்க்க பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்க முயன்றார் .
- ❖ விடுதலைக்கான அவரது துணிச்சலான போராட்டம் தென்னிந்திய வரலாற்றில் நிலைத்து நிற்கிறது.

**2. தீரன் சின்ன மலைக்கும் ஆங்கிலேயருக்கும் இடையேயான போராட்டத்திற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவரி?**

- ❖ தீரன் சின்ன மலை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார்.
- ❖ மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது.
- ❖ திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலையில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார்.
- ❖ 1800ல் கோயம்புத்தூரில் ஆங்கிலேயரைத் தாக்க , அவர் மராத்தியர் மற்றும் மருதுசகோதரர்களின் உதவியை ப் பெற முயன்றார் .
- ❖ இச்சூழ்நிலைகள் தீரன் சின்ன மலைக்கும் ஆங்கிலேயருக்கும் இடையேயான போராட்டத்திற்கு வழிவகுத்தது.

**3. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களை எழுதுக?**

- ❖ ஆங்கிலேயரின் பொருளாதாரரீதியான சுரண்டல் கொள்கை
- ❖ வாரிசு இழப்புக் கொள்கை , துணைப்படைத் திட்டம் மற்றும் பல கட்டுப்பாடுகள்
- ❖ கிறித்துவ சமய பரப்பு குழுவினரின் மதமாற்ற நடவடிக்கைகள்
- ❖ சதி ஒழிப்பு, பெண்சிசுக் கொலை ஒழிப்பு, விதவை மறுமணம் மற்றும் பெண் கல்விக்கான ஆதரவு போன்ற ஆங்கிலேயரின் நடவடிக்கைகள்
- ❖ இந்திய சிப்பாய்கள், ஆங்கில அதிகாரிகளால் தாழ்வாகவும் அவமரியாதையாகவும் நடத்தப்பட்டனர். குறைவான ஊதியம் மற்றும் பதவி உயர்வு மறுக்கப்பட்டது.
- ❖ இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு ரக துப்பாக்கியே புரட்சிக்கான உடனடிக் காரணமாக இருந்தது.

**4. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.**

- ❖ சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவானதிட்டம், மையப்படுத்தப்பட்ட தலைமை , நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை புரட்சியாளர்களிடையே இல்லை .
- ❖ கலகத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாக இல்லை.

- வங்காளம், பம்பாய் , சென்னை , மேற்கு பஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை .
- நவீனக் கல்வி கற்ற இந்தியர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை .
- சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர்.

**VIII. உயர் சிந்தனை வினா**


**1. 1857 ஆம் ஆண்டு புரட்சியில் தலைவர்களிடையே ஒரு பொதுவான குறிக்கோள் இல்லை - நிரூபி.**

- படைவீரர்கள் இராணுவத்தில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களை எதிர்த்துப் போரிட்டனர்.
- சுதேச அரசுகள் தங்கள் இராஜ்ஜியத்தை மீட்டெடுக்க கலகத்தில் ஈடுபட்டனர்.
- புரட்சியில் தலைவர்களிடையே ஒரு பொதுவான குறிக்கோள் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**XI. வரைபடதிறன்**

இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

1. டெல்லி 2. லக்னோ 3. மீரட் 4. பாரக்பூர் 5. ஜான்சி 6. குவாலியர் 7. கான்பூர்



# அலகு - 5 இந்தியாவில் கல்வி வளர்ச்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. வேதம் என்ற சொல்லிருந்து வந்தது.
**அ) சமஸ்கிருதம்** ஆ) இலத்தீன் இ) பிராகிருதம் ஈ) பாலி

2. பின்வருவனவற்றுள் எது பண்டைய காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது?
அ) குருகுலம் ஆ) விகாரங்கள் இ) பள்ளிகள் **ஈ) இவையனைத்தும்**

3. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்
அ) உத்திரப்பிரதேசம் ஆ) மகாராஷ்டிரம் **இ) பீகார்** ஈ) பஞ்சா ப்

4. தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரிய தளமாக எப்போது அறிவித்தது?
அ) 1970 ஆ) 1975 **இ) 1980** ஈ) 1985

5. இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது?
அ) இங்கிலாந்து ஆ) டென்மார்க் இ) பிரான்சு **ஈ) போர்ச்சுக்கல்**

6. இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் மானியமாக 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினை செய்த சாசன சட்டம் எது?
**அ) 1813 ஆம் ஆண்டு சாசன சட்டம்** ஆ) 1833 ஆம் ஆண்டு சாசன சட்டம்
இ) 1853 ஆம் ஆண்டு சாசன சட்டம் ஈ) 1858 ஆம் ஆண்டுச் சட்டம்

7. பின்வரும் குழுக்களில் எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப் பரிந்துரைத்தது?
அ) சார்ஜண்ட் அறிக்கை , 1944 **ஆ) இராதாகிருஷ்ணன் கல்விக்குழு, 1948**
இ) கோத்தாரி கல்விக்குழு, 1964 ஈ) தேசியக் கல்விக் கொள்கை , 1968

8. இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1992 ஆ) 2009 **இ) 1986** ஈ) 1968

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. வேதம் என்ற சொல்லின் பொருள் **அறிவு**
2. தட்சசீல இடிபாடுகளை கண்டறிந்தவர் **அலெக்சாண்டர் கன்னிங்காம்**
3. டில்லியில் மதரஸாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் **இல்த்துமிஷ்** ஆவார்.
4. புதிய கல்விக் கொள்கை திருத்தப்பட்ட ஆண்டு **1992**
5. 2009 ஆம் ஆண்டு இலவசக் கட்டாய கல்வி சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு **RMSA** ஆகும்.
6. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு **1956**

**III. பொருத்துக**

1. இட்சிங் - சரஸ்வதி மகால்
2. பிரான்சிஸ் சேவியர் - இந்திய கல்வியின் மகா சாசனம்
3. உட்ஸ் கல்வி அறிக்கை - மதராஸில் மேற்கத்தியகல்வி
4. இரண்டாம் சரபோஜி - கொச்சி பல்கலைக்கழகம்
5. சர் தாமஸ் மன்றோ - சீன அறிஞர்

**விடை:** **1. சீன அறிஞர் 2. கொச்சி பல்கலைக்கழகம் 3. இந்திய கல்வியின் மகா சாசனம் 4. சரஸ்வதி மகால் 5. மதராஸில் மேற்கத்தியகல்வி**

**IV. சரியா தவறா எனக் குறிப்பிடுக**

1. சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் குறிப்புகள் மருத்துவத்தைக் கற்றுக்கொள்ள

ஆதாரங்களாக இருந்தன. **சரி**

2. கோயில்கள் கற்றல் மையங்களாக திகழ்ந்ததோடு அறிவைப் பெருக்கிகொள்ளும் இடமாகவும் இருந்தது. **சரி**

3. கல்வியை ஊக்குவிப்பதில் அரசர்களும், சமூகமும் தீவிர அக்கறை காட்டியதாக ஜாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன. **சரி**

4. இடைக்கால இந்தியாவில் பெண் கல்வி நடைமுறையில் இல்லை **தவறு**

5. RMSA திட்டமானது பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்டது. **தவறு**

**V. பின்வருவனவற்றுள் சரியானவற்றை தேர்ந்தெடு**

1. i) நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. (பொ .ஆ.) ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

ii) பண்டைய இந்தியாவில் மாணவர்களை தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டத்தினை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள் முழுமையான சுயாட்சி கொண்டிருந்தனர்.

iii) பண்டைய காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.

iv) சோழர்கள் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரியாக காந்தளூர் சாலை இருந்தது.

அ) i மற்றும் ii சரி ஆ) ii மற்றும் iv சரி

இ) iii மற்றும் iv சரி **ஈ) i, ii மற்றும் iii சரி**

**2. சரியான இணையை கண்டுபிடி**

அ. மக்தப்கள் - இடைநிலைப் பள்ளி

**ஆ. 1835 ஆம் ஆண்டின் மெக்காலேயின் குறிப்பு - ஆங்கிலக் கல்வி**

இ. கரும்பலகைத் திட்டம் - இடைநிலைக் கல்வி குழு

ஈ. சாலபோகம் - கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள்

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளி**

**1. குருகுலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.**

- பண்டைய காலத்தில் மாணவர்கள் குருவின் வீட்டில் குடும்ப உறுப்பினர் போல வந்து தங்கி கல்வி பயின்றனர். இதுவே குருகுலக் கல்விமுறை எனப்பட்டது.

**2. பண்டைய இந்தியாவில் உருவான மிகவும் குறிப்பிடத்தக்க பல்கலைக்கழகங்களின் பெயர்களை எழுதுக.**

- தட்சசீலம், நாளந்தா , வல்லபி, விக்கிரமசீலா, ஓடண்டா புரி மற்றும் ஜகத்தாலா

**3. தட்சசீலம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

- பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது.
- இதனை 1980இல் யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாக அறிவித்தது.
- இப்பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்.

**4. சோழர் காலத்தில் தழைத்தோங்கிய கல்வி நிலையங்களை குறிப்பிடுக.**

- சதுர்வேதி மங்கலம் - வேதக் கல்லூரி
- திருபுவனை - வேதக் கல்லூரி
- திருவிடைக்காளை - நூலகம்
- திருவாடுதுறை - மருத்துவப் பள்ளி

**5. SSA மற்றும் RMSA விரிவாக்கம் தருக.**

- **SSA - Sarva Shiksha Abhiyan** (அனைவருக்கும் கல்வி இயக்கம்)
- **RMSA - Rashtriya Madhyamik Shiksha Abhiyan** (அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்)

**6. கல்வி பெறும் உரிமைச் சட்டம் (RTE) பற்றி நீவிர் அறிவதென்ன?**

- கல்வி உரிமைச் சட்டமானது (RTE) 6 முதல் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழிசெய்கிறது.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி**

**1. பண்டையகால இந்தியாவின் கல்வி பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் யாவை?**

- பாணினி, ஆர்யபட்டா , காத்யாயனா மற்றும் பதாஞ்சலி ஆகியோரின் எழுத்துக்களும் சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் மருத்துவ குறிப்புகளும் கற்றலுக்கான ஆதாரங்களாக இருந்தன.
- வரலாறு, தர்க்கம், பொருள் விளக்கம், கட்டிடக்கலை , அரசியல், விவசாயம், வர்த்தகம், வணிகம், கால்நடை வளர்ப்பு மற்றும் வில்வித்தை போன்ற பல்வேறு துறைகள் கற்பிக்கப்பட்டன.
- கற்றலின் அனைத்து அம்சங்களிலும் வல்லுநராவதற்கு குருக்களும், அவரது மாணவர்களும் மனசாட்சிக்கு கட்டுப்பட்டு இணைந்து பணியாற்றினர்.
- மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்வதற்காக இலக்கிய விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**2. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கல்வி பற்றி ஒரு பத்தி எழுதுக.**

- தொடக்க காலங்களில், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி கல்வியில் அலட்சியம் மற்றும் குறுக்கீடு இன்மை என்ற கொள்கையைப் பின்பற்றியது.
- 1813இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது.
- 1835 ஆம் ஆண்டின் மெக்காலே -வின் குறிப்பினால் உயர் கல்வியில் ஆங்கிலக் கல்வியானது உயர் வகுப்பினருக்காக ஊக்கப்படுத்தப்பட்டது.
- உட்ஸ் கல்வி அறிக்கை (1854) இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் "மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அனைத்து நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வியை வழங்கும், ஆங்கில கல்விக் கொள்கையின் முதல் அறிக்கை இதுவாகும்.
- 1935 ஆம் ஆண்டுச் சட்டம் நாடு முழுவதும் கல்வியின் முன்னேற்றத்திற்கான புதிய சகாப்தத்தை உருவாக்கியது.
- சார்ஜண்ட் அறிக்கை (1944) - இக்கல்விக் கொள்கை சமகால கல்வியின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

**3. தேசியக் கல்விக் கொள்கை பற்றி விவரி?**

- சுதந்திரத்திற்கு பிறகு, 1968 ஆம் ஆண்டின் முதல் தேசியக் கல்விக் கொள்கையானது இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
- இது தேசத்தின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, பொதுவான குடியுரிமை , கலாச்சாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.
- 1986ஆம் ஆண்டு இந்திய அரசு புதிய கல்விக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது. இதன் நோக்கம் ஒரு நிலையான சமுதாயத்தை , மேம்பாட்டுடன் கூடிய துடிப்பான சமுதாயமாக மாற்றுவதாகும்.
- புதிய கல்விக் கொள்கையானது 1992ஆம் ஆண்டு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.

**4. சோழர் காலத்தில் கல்வியின் நிலையைப் பற்றி விரிவாக எழுதுக.**

- சோழர்களின் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் அறிவார்ந்த மற்றும் புதுமைகளைப் புகுத்திய காலம் எனலாம்.
- தமிழ்வழிக் கல்வியானது கோயில் மற்றும் சமயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது.
- மக்களுக்கு இலவச கல்வி அளிக்கப்பட்டது.
- கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டிருந்தது.
- அக்கால கல்வெட்டுகளிலிருந்து ஆசிரியர்களின் தகுதிகள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

மற்றும் பள்ளிகளுக்கு அளித்த நிலங்கள் குறித்த பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது.


**VIII. உயர் சிந்தனை வினா**

**1. பொது தொடக்கக் கல்வியில் முதன்மைத் திட்டமான அனைவருக்கும் கல்வி இயக்கம் எவ்வாறு இலக்கை அடைந்துள்ளது?**

- அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), பள்ளிகள் தொடர்பான பல்வேறு வகையான புதுமைகளையும், செயல்பாடுகளையும் துவக்கி வைத்துள்ளது.
- சில முக்கிய செயல்பாடுகளான மதிய உணவு வழங்குதல், மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், பள்ளி மேலாண்மைக் குழு அமைத்தல், வகுப்பறைக்கான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் ஆகியவைகள் இவற்றுள் அடங்கும்.

**IX. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்**

1. நாளந்தா 2. தட்சசீலம் 3. வல்லபி 4. காஞ்சி 5. விக்கிரமசீலா 6. டெல்லி 7. லக்னோ 8. அலகாபாத் 9. கொச்சி 10. கல்கத்தா 11. மதராஸ் 12. சிதம்பரம்



# அலகு - 6 இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. பின்வருவனவற்றில் மக்களின் எந்த செயல்பாடுகள் கைவினைகளில் சாராதவை?
அ. கல்லிருந்து சிலையை செதுக்குதல் ஆ. கண்ணாடி வளையல் உருவாக்குதல்
இ. பட்டு சேலை நெய்தல் **ஈ. இரும்பை உருக்குதல்**

2. ................ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
**அ. நெசவு** ஆ. எஃகு இ. மின்சக்தி ஈ. உரங்கள்

3. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம்
அ. பம்பாய் ஆ. அகமதாபாத் **இ. கான்பூர்** ஈ. டாக்கா

4. இந்தியாவின் முதல் , மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன?
அ. மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துதல் ஆ. எழுத்தறிவின்மையைக் குறைத்தல்
**இ. வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்** ஈ. பெண்களுக்கு அதிகாரமளித்தல்

5. இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது?
அ. அரச ஆதரவின் இழப்பு ஆ. இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி
**இ. இந்தியாவின் தொழிற்துறை கொள்கை** ஈ. பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. **கைவினைப் பொருட்கள்** இந்திய மக்களின் வாழ்க்கையில் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.
2. தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் **இங்கிலாந்து**
3. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு **1839**
4. கொல்கத்தா அருகிலுள்ள ஹூக்ளி பள்ளத்தாக்கில் **ரிஷ்ரா** இடத்தில் சணல் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டது.
5. **சூயஸ் கால்வாய் திறப்பு** ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது.

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. டவேர்னியர் | - செல்வச் சுரண்டல் கோட்பாடு |
| 2. டாக்கா | - காகித ஆலை |
| 3. தாதாபாய் நௌரோஜி | - கைவினைஞர் |
| 4. பாலிகன்ஜ் | - மஸ்லின் துணி |
| 5. ஸ்மித் | - பிரெஞ்சு பயணி |

விடை: **1. பிரெஞ்சு பயணி 2. மஸ்லின் துணி 3. செல்வச் சுரண்டல் கோட்பாடு 4. காகித ஆலை 5. கைவினைஞர்**

**IV. சரியா, தவறா எனக் குறிப்பிடுக**

1. இந்தியா பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு புகழ்வாய்ந்தது. **சரி**
2. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டது. **சரி**
3. நவீன முறையில் முதன்முதலாக இரும்பு ஜாம்ஷெட்பூரில் உற்பத்தி செய்யப்பட்டது. **தவறு**
4. 1948 ஆம் ஆண்டு தொழிலக கொள்கையானது கலப்பு பொருளாதாரத்தை கொண்டு வந்தது. **தவறு**
5. பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் தீவிர வேளாண்மை உற்பத்தி வளர்ச்சிக்கு சான்றாக உள்ளது. **தவறு**

**V. சரியான கூற்றை கண்டுபிடி**

1. பின்வருவனவற்றில் சரியானவைகளை தேர்ந்தெடுத்து குறியிடவும்.

i. எட்வர்ட் பெய்ன்ஸ் கருத்துப்படி 'பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இங்கிலாந்து'.

ii. இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைக்கு முன்னால் இந்தியாவில் கிராம கைவினை தொழில் இரண்டாவது பெரிய தொழிற்சாலையாக அமைந்தது.

iii. சௌராஷ்டிரா தகர தொழிற்சாலைக்கு பெயர் பெற்றது.

iv. சூயஸ் கால்வாய் கட்டப்பட்டதால் இந்தியாவில் பிரிட்டிஷாரின் பொருட்கள் மலிவாக கிடைக்க வழிவகை உருவானது.

A (i) மற்றும் (ii) சரி — **B (ii) மற்றும் (iv) சரி**

C (iii) மற்றும் (iv) சரி — D (i), (ii) மற்றும் (iii) சரி

2. கூற்று: இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனிய ஆதிக்கத்தில் நலிவுற்றனர். காரணம்: பிரிட்டிஷார் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருட்களுக்கான சந்தையாகவும் கருதினர்.

**அ. கூற்று சரி. காரணம் கூற்றுக்கான விளக்கம்**

ஆ. கூற்று சரி. ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

இ. கூற்றும் காரணமும் சரி

இ. கூற்றும் காரணமும் தவறானவை (தவறு)

3. பின்வருவனவற்றுள் சரியாக பொருந்தாது ஒன்று எது?

a. பெர்னியர் - ஷாஜகான்

b. பருத்தி ஆலை - அகமதாபாத்

c. TISCO - ஜாம்ஜெட்பூர்

**d. பொருளாதார தாரளமயமாக்கல் - 1980**

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளி**

**1. இந்தியாவின் பாரம்பரிய கைவினை பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை?**

❖ நெசவு, மரவேலை , தந்தவேலை , மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைபாடுகள் செய்தல் , உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல்

**2. செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.**

❖ ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதுமே இந்திய மக்களின் வறுமைக்கு காரணம்
- தாதாபாய் நௌரோஜி

**3. பெரிய அளவில் நெசவு உற்பத்திக்கு பயன்படுத்திய கண்டுபிடிப்புகளின் பெயர்களை எழுது.**

❖ காட்டன் ஜின், பறக்கும் எறிநாடா, நூற்கும் ஜென்னி மற்றும் நீராவி இயந்திரம்

**4. இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

❖ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு என்பது இந்தியாவில் உள்ள ஒரு வணிக சங்கம் ஆகும்.

❖ இது ஒரு அரசு சாரா, இலாப நோக்கமற்ற, தொழிற்துறை வழிநடத்துதல் மற்றும் தொழிற்துறையை நிர்வகிக்கும் ஒரு அமைப்பாகும். இது 1985 இல் நிறுவப்பட்டது.

**5. தொழில்மயமழிதல் என்றால் என்ன?**

❖ பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் வீழ்ச்சி ஆகியன தொழில்மயமழிதல் என குறிப்பிடப்படுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**VII. பின்வருவனவற்றிற்கு விரிவான விடையளி**

**1. இந்தியத் தொழில்மயமழிதலுக்கு பிரிட்டிஷாரின் வர்த்தகக் கொள்கை எவ்வாறு காரணமானது?**

- ❖ கிழக்கிந்திய கம்பெனியால் பின்பற்றப்பட்ட தடையில்லா வாணிபக் கொள்கை , இந்திய வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை சந்தை விலைக்கு குறைவாக விற்க கட்டாயப்படுத்தியது.
- ❖ கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கமானது மலிவான விலையில் இந்திய தயாரிப்பு பொருட்களை பெருமளவிற்கு வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் லாபத்திற்கு விற்க வேண்டும் என்பதாகும்.
- ❖ இந்தியாவின் வர்த்தக நலன்களுக்கெதிரான பாதுகாப்பு கட்டணங்களின் கொள்கையை ஆங்கிலேயர்கள் பின்பற்றினர்.
- ❖ இது இந்தியப் பாரம்பரிய தொழில்களை வெகுவாக பாதித்தது.

**2. தோட்டத் தொழில்கள் பற்றி விரிவாக எழுதுக?**

- ❖ தோட்டத் தொழில் முதன் முதலில் ஐரோப்பியர்களை ஈர்த்தது.
- ❖ இது பிரிட்டிஷ் சமுதாயத்தால் அதிகரித்து வரும் தேநீர், காபி மற்றும் கருநீலச்சாயம் (இண்டிகோ ) ஆகியவற்றிற்கான தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்தது. .
- ❖ அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- ❖ தேயிலைத் தோட்டம் கிழக்கிந்திய பகுதிகளில் மிக முக்கியமான தொழிலாக இருந்தது போலவே காபி தோட்டம் தென்னிந்தியாவின் நடவடிக்கைகளின் மையமாக மாறியது.
- ❖ மூன்றாவது முக்கிய தோட்டத் தொழிலான சணல் பல தொழிற்சாலைகள் உருவாக வழிவகுத்தது.
- ❖ இந்த தொழில்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்கள் பலரால் கட்டுப்படுத்தப்பட்டன .

**3. 1991 ஆம் ஆண்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகு தொழிற்துறையின் வளர்ச்சியை விளக்குக?**

- ❖ 1991ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது.
- ❖ பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தொழிற்துறை உற்பத்தியில் உயர் வளர்ச்சி விகிதத்தைக் கண்டன .
- ❖ தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல் , விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல் , சிறு தொழில்களுக்கான கொள்கைகளை நீர்த்து போகச் செய்தல் மற்றும் ஏகபோக சட்டத்தின் மாயயை ஒழித்தல் ஆகியவை இந்தியத் தொழிற்துறை செழிக்க உதவியது.
- ❖ புதிய பொருளாதார கொள்கை வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறது.


**VIII. உயர் சிந்தனை வினா**

**எவ்வாறு கைவினைப்பொருட்களும், இயந்திர தயாரிப்பு பொருட்களும் வேறுபடுகின்றன.**

| | கைவினைப்பொருட்கள் | இயந்திர தயாரிப்பு பொருட்கள் |
|---|---|---|
| i | உற்பத்திக்கான காலம் அதிகம் | விரைவான உற்பத்தி |
| ii | ஒவ்வொரு தயாரிப்பிலும் வேறுபாடு | ஒரே மாதிரியான தயாரிப்புகள் |
| iii | கலைத்திறன்மிக்கவர்களால் மட்டுமே உருவாக்க இயலும். | தொழில்நுட்ப அறிவுபெற்ற யாராக இருந்தாலும் ஈடுபடலாம். |
| iv | குறைவான முதலீடு | அதிக முதலீடு தேவை. |

IX. பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. பம்பாய் 2. அகமதாபாத் 3. கல்கத்தா 4. கான்பூர் 5. டாக்கா 6. குல்டி
7. ஜாம்ஷெட்பூர் 8. புது டெல்லி 9. ரிஷ்ரா 10. அஸ்ஸாம்



# அலகு - 7 ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. பழங்கால நகரங்கள் எனப்படுவது
 **அ) ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ** ஆ) டெல்லி மற்றும் ஹைதராபாத்
 இ) பம்பாய் மற்றும் கல்கத்தா ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

2. ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம் / நகரங்கள்
 அ) சூரத் ஆ) கோவா **இ) பம்பாய்** ஈ) மேற்கண்ட அனைத்தும்

3. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய நகரமயமாக்கலின் ஒரு புதிய நடைமுறை
 அ) சூயஸ் கால்வாய் திறப்பு ஆ) நீராவிப் போக்குவரத்து அறிமுகம்
 இ) ரயில்வே கட்டுமானம் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

4. ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தது
 **அ) வர்த்தகத்திற்காக** ஆ) தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காக
 இ) பணி புரிவதற்காக ஈ) ஆட்சி செய்வதற்காக

5. புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம்
 அ) பம்பாய் ஆ) கடலூர் **இ) மதராஸ்** ஈ) கல்கத்தா

6. 1744ஆம் ஆண்டு வரை கிழக்கிந்திய கம்பெனியின் முதன்மை குடியிருப்பாக இருந்தது எது?
 அ) புனித வில்லியம் கோட்டை ஆ) புனித டேவிட் கோட்டை
 **இ) புனித ஜார்ஜ் கோட்டை** ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. இந்தியாவில் இருப்புப் பாதை போக்குவரத்து அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு **1853**
2. இந்தியாவின் 'உள்ளாட்சி அமைப்பின் தந்தை ' என்று அழைக்கப்படுபவர் **ரிப்பன் பிரபு**
3. 1919ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் **இரட்டையாட்சி முறையை** அறிமுகப்படுத்தியது.
4. நகராட்சி உருவாவதற்கு பொறுப்பாக இருந்தவர் **சர் ஜோசியா சைல்டு**
5. **1639** இல் பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரூ கோகன் ஆகியோர் மதராசபட்டினத்தில் ஒரு தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனத்தை நிறுவதற்கு அனுமதி பெற்றனர்.

**III. பொருத்துக.**

1. பம்பாய் - சமய மையம்
2. இராணுவ குடியிருப்புகள் - மலை வாழிடங்கள்
3. கேதர்நாத் - பண்டைய நகரம்
4. டார்ஜிலிங் - ஏழு தீவு
5. மதுரை - கான்பூர்

**விடை:** **1. ஏழு தீவு 2. கான்பூர் 3. சமய மையம் 4. மலை வாழிடங்கள் 5. பண்டைய நகரம்**

**IV. சரியா / தவறா என்று குறிப்பிடுக.**

1. இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து நகரங்கள் செழித்து வளர்ந்தன. **சரி**
2. பிளாசிப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் அரசியல் ஆதிக்கம் பெற்றனர். **சரி**
3. புனித வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது. **தவறு**
4. குடியிருப்புகளில் இராணுவ வீரர்கள் வாழத் தொடங்கினர். **சரி**
5. மதராஸ் 1998இல் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது. **தவறு**

**V. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

1. **கூற்று:** இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.

**காரணம்:** பிரிட்டிஷாரின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகக் கொள்கை மற்றும் தொழில்துறை புரட்சி இந்திய உள்நாட்டு தொழில்களை அழித்தன.

அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

2. பின்வரும் எந்த அறிக்கை / அறிக்கைகள் உண்மையற்றவை ?

i) ஸ்ரீரங்க ராயலு ஆங்கிலேயர்களுக்கு மதராசபட்டணத்தை மானியமாக வழங்கினார்.

ii) டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் புனித ஜார்ஜ் கோட்டை கட்டியதற்கு பொறுப்பானவர்கள்.

iii) 1969ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.

அ) i மட்டும் **ஆ) ii மற்றும் ii** இ) ii மற்றும் iii ஈ) iii மட்டும்

3. **கூற்று:** ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.

**காரணம்:** அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.

அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. நகர்ப்புற பகுதி என்றால் என்ன?**

- ஒரு நகர்ப்புற பகுதி என்பது அதிக மக்கள் தொகை அடர்த்தியோடு உணவு உற்பத்தியல்லாத தொழில்களில் ஈடுபடுவதும் நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வதும் ஆகும்.

**2. மலைப்பிரதேசங்கள் காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியில் தனித்துவமான அம்சமாக இருந்தன. ஏன்?**

- மலைப்பிரதேசங்கள் படைகள் தங்குமிடமாகவும் எல்லைகளை பாதுகாக்கவும் தாக்குதலை தொடங்கும் இடமாகவும் இருந்தன.
- மலைவாழிடங்கள் வட மற்றும் தென் இந்தியாவில் வளர்ச்சி பெற்றன.
- எ.கா. சிம்லா, நைனிடால், டார்ஜிலிங், உதகமண்டலம், கொடைக்கானல்.

**3. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக?**

- மதராஸ், கல்கத்தா, பம்பாய்

**4. 19ஆம் நூற்றாண்டில் நகரமயமாக்கலின் புதிய போக்குக்கு ஏதேனும் நான்கு காரணங்களைக் கூறுக.**

- சூயஸ் கால்வாய் திறப்பு, நீராவிப் போக்குவரத்து அறிமுகம், ரயில்வே சாலைகள் அமைத்தல், கால்வாய்கள், துறை முகங்கள், தொழிற்சாலைகள் வளர்ச்சி.

**5. இராணுவ குடியிருப்பு நகரங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

- ஆங்கிலேயர்க்கு வலுவான இராணுவ முகாம்கள் தேவைப்பட்டதால் இரணுவக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.
- இராணுவ வீரர்கள் இந்த பகுதிகளில் வசிக்கத் தொடங்கினர். மேலும் இப்பகுதிகள் படிப்படியாக நகரங்களாக வளர்ந்தன. எடுத்துகாட்டு: கான்பூர், லாகூர்.

**6. பிரிட்டிஷ் ஆட்சியின் போது மதராஸ் மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள் யாவை?**

- தமிழ்நாடு, லட்சத்தீவு, வடக்கு கேரளா, ராயலசீமா, கடலோர ஆந்திரா, கர்நாடகா மற்றும் தெற்கு ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்கள்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**VII. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியை பற்றி விளக்குக.**

**அ) துறைமுக நகரங்கள்**

- துறைமுகங்களைச் சுற்றி மாகாணங்களின் தலைநகரங்கள் வளர்ச்சியடைந்ததது.
- எ.கா: மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய்

**ஆ) இராணுவக் குடியிருப்பு நகரங்கள்**

- பெருவழிச் சாலைகள் மற்றும் போர்த் திறன்வாய்ந்த பகுதிகளில் உள்மாகாணங்களின் தலைநகரங்கள் வளர்ச்சியடைந்ததது.
- எ.கா: கான்பூர், லாகூர்.

**இ) மலை வாழிடங்கள்**

- காலனித்துவ சமூகம் சுகாதாரம் மற்றும் பொழுதுபோக்குக்காக உருவாக்கிய நகரங்கள்.
- எ.கா. சிம்லா , நைனிடால், டார்ஜிலிங், உதகமண்டலம், கொடைக்கானல்.

**ஈ) இரயில்வே நகரங்கள்**

- படைகள் மற்றும் பொருட்களின் விரைவான போக்குவரத்து சமவெளிகள் உருவாக்கப்பட்டது

**2. மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை பற்றி எடுத்துரைக்கவும்.**


- கிழக்கிந்திய கம்பெனியை சேர்ந்த சர் பிரான்சிஸ் டே விற்கு 1639இல் தொழிற்சாலை கட்டுவதற்காக நிலம் மானியமாக வழங்கப்பட்டு, அது பின்னர் மதராஸ் என பெயரிடப்பட்டது.
- புனித ஜார்ஜின் தினமான ஏப்ரல் 23, 1640 அன்று இதன் முதல் தொழிற்சாலை கட்டிமுடிக்கப்பட்டு அதற்கு புனித ஜார்ஜ் கோட்டை என்று பெயரிடப்பட்டது.
- புனித ஜார்ஜ் கோட்டையை கட்டப்பட்டதற்கு டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் கூட்டாக பொறுப்பாவார்கள்.
- இது 1774 வரை கிழக்கிந்திய கம்பெனியின் முதன்மை குடியிருப்பாக இருந்தது.
- 1947ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு மதராஸ் மாகாணமானது மதராஸ் மாநிலமாக மாறியது.
- பின்னர் 1969இல் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.
- ஜூலை 17, 1996இல் மதராஸ் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.

**3. இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது. எப்படி?**

- பிரிட்டிஷாரின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகத்தின் விளைவாக இந்திய உற்பத்தித் தொழில்கள் அழிக்கப்பட்டன.
- பாரம்பரியத் தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்த இந்திய கைவினைத் தொழில் பொருட்கள், உற்பத்தி செய்யும் நகரங்கள் தொழிற்புரட்சியின் விளைவாக அழிந்தன.
- அதிகப்படியான இறக்குமதி வரி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பிற கட்டுப்பாடுகள் காரணமாக இந்தியப் பொருட்கள் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படுவது குறையலாயின.
- இவ்வாறு இந்தியா, பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

இந்திய வரை படத்தில் துறைமுக நகரங்கள், இராணுவ குடியிருப்புகள், மலைவாழிடங்களைக் குறிக்கவும். (ஒவ்வொன்றிலிருந்தும் ஏதாவது நான்கு இடங்கள்).



# அலகு - 8 காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ............சமூகமானது தனக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் மாற்றங்களை உட்கிரகித்தும் வெளிப்படுத்தியும் நீக்கியும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது.
   **அ) மனித** ஆ) விலங்கு இ) காடு ஈ) இயற்கை

2. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்
   அ) தர்மாம்பாள் **ஆ) முத்துலட்சுமி அம்மையார்**
   இ) மூவலூர் ராமாமிர்தம் ஈ) பண்டித ரமாபாய்

3. சதி எனும் நடைமுறை ஒழிக்கப்பட்ட ஆண்டு
   அ) 1827 ஆ) 1828 **இ) 1829** ஈ) 1830

4. பி.எம். மலபாரி என்பவர் ஒரு
   அ) ஆசிரியர் ஆ) மருத்துவர் இ) வழக்கறிஞர் **ஈ) பத்திரிகையாளர்**

5. பின்வருவனவற்றில் எவை/எது சீர்திருத்த இயக்கம் (ங்கள் )?
   அ) பிரம்ம சமாஜம் ஆ) பிரார்த்தனை சமாஜம்
   இ) ஆரிய சமாஜம் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

6. பெதுன் பள்ளி ......................இல் J.E.D பெதுன் என்பவரால் நிறுவப்பட்டது.
   அ) 1848 **ஆ) 1849** இ) 1850 ஈ) 1851

7. 1882ஆம் ஆண்டில் சிறுமிகளுக்கான ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க எந்த ஆணையம் பரிந்துரைத்தது?
   அ) வுட்ஸ் ஆ) வெல்பி **இ) ஹண்டர்** ஈ) முட்டிமன்

8. சாரதா குழந்தை திருமண மசோதாவானது சிறுமிகளுக்கான குறைந்தபட்ச திருமண வயதை என நிர்ணயித்தது.
   அ) 11 ஆ) 12 இ) 13 **ஈ) 14**

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. **பெண் சிறார் சங்கம்** 1819 இல் கிறித்தவ சமயப்பரப்பு குழுக்களால் அமைக்கப்பட்டது.
2. சிவகங்கையை சேர்ந்த **வேலுநாச்சியார்** என்பவர் பிரிட்டிஷாரை எதிர்த்து வீரமாக போராடினார்.
3. இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவியவர் **கோபால கிருஷ்ண கோகலே**
4. தமிழ்நாட்டின் மிகப்பெரிய சமூக சீர்திருத்தவாதிகளில் ஒருவர் **ஈ.வெ.ரா. பெரியார்** ஆவார்.
5. கந்துகூரி வீரசலிங்கம் வெளியிட்ட பத்திரிக்கையின் பெயர் **விவேகவர்தினி** ஆகும்.

**III. பொருத்துக.**

1. பிரம்மஞான சபை - இத்தாலிய பயணி
2. சாரதா சதன் - சமூக தீமை
3. வுட்ஸ் கல்வி அறிக்கை - அன்னிபெசன்ட்
4. நிக்கோலோ கோண்டி - பண்டித ரமாபாய்
5. வரதட்சணை - 1854

**விடை:** 1. அன்னிபெசன்ட் 2. பண்டித ரமாபாய் 3. 1854 4. இத்தாலிய பயணி 5. சமூக தீமை

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.**

1. ரிக் வேத காலத்தில் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். **சரி**
2. தேவதாசி முறை ஒரு சமூக தீமை. **சரி**
3. இந்திய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடி ராஜா ராம் மோகன் ராய். **சரி**

4. பெண்களுக்கான 23 சதவீத இட ஒதுக்கீடு என்பது பெண்களின் சமூக - அரசியல் நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கிறது. **தவறு**

5. 1930ஆம் ஆண்டு சாரதா சட்டம் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கான திருமண வயதை உயர்த்தியது. **சரி**

**V. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

1. சரியான இணையை கண்டுபிடி.

அ) மகளிர் பல்கலைக்கழகம் - பேராசிரியர் D.K. கார்வே
ஆ) நீதிபதி ரானடே - ஆரிய சமாஜம்
இ) விதவை மறுமணச் சட்டம் - 1855
ஈ) ராணி லட்சுமிபாய் - டெல்லி

2. மாறுபட்ட ஒன்றினைக் கண்டுபிடி.

அ) குழந்தை திருமணம் ஆ) சதி இ) தேவதாசி முறை **ஈ) விதவை மறுமணம்**

3. பின்வரும் கூற்றுகளை கவனிக்கவும்.

i) பேகம் ஹஸ்ரத் மஹால், ராணி லட்சுமி பாய் ஆகியோர் ஆங்கிலேயர் மீது ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

ii) தமிழ்நாட்டின் சிவகங்கையைச் சேர்ந்த வேலுநாச்சியார், பிரிட்டிஷாருக்கு எதிராக வீரமாக போராடினார்.

மேலே கொடுக்கப்பட்ட எந்த வாக்கியம் (ங்கள் ) சரியானவை?

அ) i மட்டும் ஆ) ii மட்டும் **இ) i மற்றும் ii** ஈ) இரண்டுமில்லை

4. **கூற்று:** ராஜா ராம் மோகன்ராய் அனைத்து இந்தியர்களாலும் மிகவும் நினைவு கூறப்படுகிறார்.

**காரணம்:** இந்திய சமுதாயத்தில் இருந்த சதி என்ற தீயபழக்கத்தை ஒழித்தார் .

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை.
ஆ) கூற்று சரியானது. காரணம் தவறு.
**இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.**
ஈ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை .

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. பெண்களின் முன்னேற்றத்திற்காக போராடிய முக்கிய தலைவர்களின் பெயரினை குறிப்பிடுக.**

- ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, கேசவ சந்திர சென், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், பண்டித ரமாபாய், டாக்டர். முத்துலட்சுமி அம்மையார், ஜோதிராவ் பூலே, பெரியார் ஈ.வெ.ரா., டாக்டர் தர்மாம்பாள்

**2. சமூக தீமைகளில் சிலவற்றை பட்டியலிடுக.**

* பெண் சிசுக்கொலை
* பெண் சிசு கருக்கொலை
* குழந்தைத் திருமணம்
* சதி
* தேவதாசி முறை

**3. இடைக்கால இந்தியாவில் குறிப்பிடத்தக்க பெண்கள் யாவர்?**

- ரசியா சுல்தானா, ராணி துர்காவதி, சாந்த் பீபி, நூர்ஜஹான், ஜஹனாரா, ஜீஜாபாய் மற்றும் மீராபாய்

**4. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமான பெண்களை குறிப்பிடுக.**

- பேகம் ஹஸ்ரத் மஹால், ராணி லட்சுமி பாய், வேலுநாச்சியார்

**5. 'சதி' பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- இந்திய சமூகத்தில் நிலவிய மற்றொரு சமூகதீமை சதி ஆகும். குறிப்பாக ராஜபுத்திரர்களிடையே இப்பழக்கம் காணப்பட்டது.

- 1829 ல் ராஜாராம் மோகன்ராய் அவர்களின் முயற்சியால் சதி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**VII. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கினைக் கண்டறியவும்.**

- தொடக்க கால காலனிய எதிர்ப்பு போராட்டத்தில் பெண்கள் பல்வேறு வகைகளில் முக்கிய பங்காற்றினர்.
- பேகம் ஹஸ்ரத் மஹால், ராணி லட்சுமி பாய், வேலுநாச்சியார் ஆகியோர் குறிப்பிடதக்கவர்களாவர்.
- விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் அயல்நாட்டு பொருட்களை புறக்கணித்தல், ஊர்வலங்களில் கலந்துகொள்வது, சட்டங்களை மீறுதல் மூலம் தடியடி பெற்று சிறைக்கு சென்றனர்.
- விடுதலைப் போராட்டத்தில் அவர்களது பங்களிப்பு வெகுஜன தன்மையில் புதிய பரிணாமத்தை சேர்த்தது.

**2. சமூக தீமைகளை ஒழிப்பதில் சமூக சீர்திருத்தவாதிகளின் பங்களிப்பை விளக்குக.**

- சமூக தீமைகளை ஒழிப்பதற்காக பல சமூக சீர்திருத்தவாதிகள் பல்வேறு சமூக சீர்திருத்த இயக்கங்களை உருவாக்கினர்.
- இவை பெண்களுக்கு கல்வி அளிப்பது, அவர்களின் திருமண வயதை உயர்த்துவது, விதவைகளை கவனித்துக்கொள்வது, அதே போன்று சாதிமுறையின் இறுக்கமான தன்மையை நீக்குவது மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பை சமத்துவநிலைக்கு உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க முயன்றது.
- இவ்வியக்கங்களை வழிநடத்திய சீர்திருத்தவாதிகளே நவீன இந்தியாவின் முன்னோடிகள் ஆவர் .
- ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, கேசவ சந்திர சென், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், எம்.ஜி.ரானடே, பி.எம்.மலபாரி, கோபால கிருஷ்ண கோகலே, அன்னிபெசன்ட், பண்டித ரமாபாய், டாக்டர்.முத்துலட்சுமி அம்மையார், ஜோதிராவ் பூலே, பெரியார் ஈ.வெ.ரா, டாக்டர்.தர்மாம்பாள் முக்கிய சீர்திருத்தவாதிகள் ஆவர்.

**3. சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம் குறித்து விரிவாக விடையளிக்கவும்.**

- பெண்களின் விடுதலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
- இது மக்களிடையே தேசிய விழிப்புணர்வை உருவாக்கியது.
- தியாகம், சேவை மற்றும் பகுத்தறிவு உணர்வு ஆகியவற்றை உருவாக்கியது.
- சதி மற்றும் பெண் சிசுக்கொலை ஆகியவை சட்டவிரோதமாக்கப்பட்டது.
- விதவை மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# புவியியல்

## அலகு - 1 பாறை மற்றும் மண்

**I சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக்கோளம் என அழைக்கப்படுகிறது.
அ) வளிமண்டலம் ஆ) உயிர்க்கோளம் **இ) நிலக்கோளம்** ஈ) நீர்க்கோளம்

2. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 **ஈ) டிசம்பர் 5**

3. உயிரினப் படிமங்கள் ------------- பாறைகளில் காணப்படுன்றன.
**அ) படிவுப் பாறைகள்** ஆ) தீப்பாறைகள் இ) உருமாறியப் பாறைகள் ஈ) அடியாழப் பாறைகள்

4. மண்ணின் முதல்நிலை அடுக்கு
**அ) கரிசல் மண் (கரிம மண் அடுக்கு)** ஆ) பாறைப்படிவு
இ) சிதைவடையாத பாறைகள் ஈ) பாதியளவு சிதைவடைந்த பாறைகள்

5. பருத்தி வளர ஏற்ற மண்
அ) செம்மண் **ஆ) கரிசல் மண்** இ) வண்டல் மண் ஈ) மலை மண்

6. மண்ணின் முக்கிய கூறு.
அ) பாறைகள் ஆ) வாயுக்கள் இ) நீர் **ஈ) கனிமங்கள்**

7. கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?
**அ) வண்டல் மண்** ஆ) கரிசல் மண் இ) செம்மண் ஈ) மலை மண்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு **பாறையியல்**
2. **கரிசல்** மண் பருத்தி விளைவிப்பதற்கு ஏற்றதாகும்.
3. 'புவியின் தோல்' **மண் அடுக்கு** என்று அழைக்கப்படுகிறது
4. உருமாறிய பாறைகளின் ஒரு வகையான **வெள்ளை பளிங்கு** பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது
5. **தீப்பாறை** 'முதன்மை பாறை' என்று அழைக்கப்படுகிறது.

**III. சரியா தவறா?**

1. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது. - **சரி**
2. களிமண் பாறையிலிருந்து பலகைக்கல் (Slate) உருவாகிறது. - **தவறு**
3. செம்மண் சுவருதல் (Leaching) செயல்முறைகளில் உருவாகிறது. - **தவறு**
4. இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு "செயற்கை மணல்" (M-Sand) பயன்படுகிறது. - **சரி**
5. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன. - **தவறு**

**IV. பொருத்துக.**

1. அ) கிரானைட் - 1. அடிப்பாறை
ஆ) மண் அடுக்கு - 2. அடியாழப் பாறைகள்
இ) பாரன் தீவு - 3. பட்டைப் பயிரிடல் வேளாண்மை
ஈ) மண் வளப்பாதுகாப்பு - 4. செயல்படும் எரிமலை
**அ) 2 1 4 3** ஆ) 2 1 3 4 இ) 4 3 2 1 ஈ) 3 4 2 1

2. அ) பசால்ட் (கருங்கல்) - 1. ஆந்த்ரசைட்
ஆ) சுண்ணாம்புப் பாறை - 2. வெளிப்புற தீப்பாறைகள்
இ) நிலக்கரி - 3. உருமாறியப் பாறைகள்

ஈ) ஜெனிஸ் (நைஸ்) - 4. படிவுப்பாறைகள்

**அ) 2 4 1 3** ஆ) 2 4 1 3 இ) 3 1 2 4 ஈ) 3 1 4 2

**V கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க.**

1. அ) தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.
   ஆ) பாறைகள் வானிலை சிதைவினால் மண்ணாக உருமாறுகிறது.
   **இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.**
   ஈ) தக்காண பீடபூமி பகுதிகள் தீப்பாறைகளால் உருவானவை.

2. அ) மண்ணரிப்பு மண் வளத்தை குறைக்கிறது.
   **ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.**
   இ) மண் ஒரு புதுப்பிக்கக் கூடிய வளம்.
   ஈ) இலைமக்குகள் மேல் மட்ட மண்ணின் ஒரு பகுதியாகும்.

**VI கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்றைக் கண்டுபிடித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**கூற்று 1** - படிவுப் பாறைகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்டவை

**கூற்று 2** - படிவுப் பாறைகள் பல்வேறு காலங்களில் உருவானவை.

**அ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1 க்கு சரியான விளக்கம்.**

ஆ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1 க்கு சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று 1 சரி ஆனால் கூற்று 2 தவறு.

ஈ) கூற்று 2 சரி ஆனால் கூற்று 1 தவறு.

**VII காரணம் கூறுக**

**1. நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.**

- ❖ பாறைகளில் உள்ள கனிமங்கள் நீரில் கரைந்து, இரசாயன கலவையாக மாறுகிறது.
- ❖ இக்கனிமங்கள் நீர்த்தேக்கப் படுகைகளில் படிவதால் இரசாயன படிவுப் பாறைகள் உருவாகின்றன.

**2. தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.**

- ❖ தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து எரிமலை மூலம் வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு (Magma) உறைந்து உருவானதாகும்.
- ❖ ஆகையால் தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.

**VIII வேறுபடுத்துக.**

**1. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்**

| | உருமாறிய பாறைகள் | படிவுப்பாறைகள் |
|---|---|---|
| 1. | அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப்பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது. | அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு (காற்று, நீர், பனியாறுகள்) படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் உருவாகின்றன. |

**2. மண் வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு**

| | மண் வள பாதுகாப்பு | மண்ணரிப்பு |
|---|---|---|
| 1. | மண் வளப்பாதுகாப்பு என்பது மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல் முறையாகும். | மண்ணரிப்பு என்பது இயற்கை காரணிகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் மண்ணின் மேலடுக்கு நீக்கப்படுதல் அல்லது அரிக்கப்படுதல் ஆகும். |

**IX சுருக்கமாக விடையளிக்கவும்.**

**1. தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?**

❖ தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து எரிமலை மூலம் வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு (Magma) உறைந்து உருவானதாகும்.

❖ இப்பாறைகளிலிருந்து மற்ற பாறைகள் உருவாகின்றதால் இவற்றை முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப் பாறைகள் என்று அழைக்கிறோம்.

**2. பாறைகளின் கூட்டமைப்பு பற்றி விவரி?**

❖ பாறைகள் என்பது கனிமங்கள் தனித்த கூறுகளாகவோ அல்லது கூட்டுக்கலவையாகவோ உருவாகின்றன.

❖ கனிமங்கள் வேதி மூலங்களின் தொகுதிகளால் ஆனவை.

**3. 'பாறைகள்' வரையறு.**

❖ பாறைகள் என்பது திட கனிம பொருட்களால் புவியின் மேற்பரப்பில் மற்ற கோள்களில் உள்ளது போல் உருவானதாகும்.

❖ இது ஒரு திடநிலையில் உள்ள ஒரு முக்கியமான இயற்கை வளம் ஆகும்.

**4. மண்ணின் வகைகளைக் கூறுக.**

❖ 1. வண்டல் மண் 2. கரிசல் மண் 3. செம்மண் 4. சரளை மண் 5. மலை மண் 6. பாலை மண்

**5. மண்வளப் பாதுகாப்பு என்றால் என்ன ?**

❖ மண் வளப்பாதுகாப்பு என்பது மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல் முறையாகும்.

**X விரிவான விடையளிக்கவும்**

**1. மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி.**

❖ மண் என்பது பல்வகை கரிமப் பொருள்கள், கனிமங்கள், வாயுக்கள், திரவப் பொருள்கள் மற்றும் பல உயிரினங்கள் கலந்த கலவையாகும்.

❖ பாறைகள், வானிலை சிதைவு மற்றும் அரித்தல் செயல்முறைகளுக்கு உட்படுத்தபடும் பொழுது மண்ணாக உருவாகிறது.

❖ நீர், காற்று, வெப்ப நிலை மாறுபாடு, புவி ஈர்ப்பு விசை , வேதிபரிமாற்றம், உயிரினங்கள் மற்றும் அழுத்த வேறுபாடுகளால் தாய்ப்பாறைகள் சிதைவுறுகின்றன.

❖ இந்தச் செயல்முறைகள் பாறைத்துகள்களிலிருந்து தாதுக்கள் வெளிப்பட்டு மண் உருவாக காரணமாகின்றன.

**2. பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்**

**பாறைகளின் வகைபாடுகள்**

❖ (1) தீப்பாறைகள் (2) படிவுப் பாறைகள் (3) உருமாறியப் பாறைகள்

**(1) தீப்பாறைகள்**

❖ தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து எரிமலை மூலம் வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு (Magma) உறைந்து உருவானதாகும்.

**(2) படிவுப் பாறைகள்**

❖ அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு (காற்று, நீர், பனியாறுகள்) படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் உருவாகின்றன.

**(3) உருமாறியப் பாறைகள்**

❖ அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப்பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

3. **மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.**

- **இலை மக்கு அடுக்கு:** இலைகள், சருகுகள், கிளைகள், பாசிகள் போன்ற கரிமப் பொருட்களால் உருவானவை.
- **மேல்மட்ட அடுக்கு:** கரிம மற்றும் கனிமப் பொருட்களால் ஆன அடுக்கு.
- **உயர்ம ட்ட அடுக்கு:** அதிக அளவு சுவர்தலுக்கு (*Leaching*), உட்பட்ட அடுக்கு. களிமண், இரும்பு மற்றும் அலுமினிய ஆக்ஸைடு போன்ற தாதுக்கள் இவ்வடுக்கில் கனிசமாக காணப்படுகின்றன.
- **அடி மண்:** இவ்வடுக்கு தாய்பாறையின் இரசாயன, (அ) பௌதீக மாற்றத்திற்கு உட்பட்டவை. இரும்பு, களிமண், அலுமினிய ஆக்ஸைடு மற்றும் கனிமப் பொருட்களால் தோன்றிய அடுக்கு அல்லது திரள் மண்டலம் என அழைக்கப்படுகிறது.
- **தாய்பாறை அடுக்கு:** இதில் தாய்ப்பாறைகள் குறைந்த அளவே சிதைக்கப்படுகின்றன.
- **சிதைவடையாத தாய்ப்பாறை:** இவ்வடுக்கு சிதைவடையாத அடிமட்ட பாறையாகும்.

4. **மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்**

1. **வண்டல் மண்:** வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள், வெள்ளச் சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது.
2. **கரிசல் மண்:** கரிசல் மண், தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.
3. **செம்மண்:** செம்மண் , உருமாறியப் பாறைகள் மற்றும் படிகப் பாறைகள் ஆகியவை சிதைவடைவதால் உருவாகிறது.
4. **சரளை மண்:** சரளை மண் அயனமண்டல பிரதேச காலநிலையில் உருவாகிறது.
5. **மலை மண்:** மலைமண், மலைச்சரிவுகளில் காணப்படுகிறது.
6. **பாலை மண்:** பாலை மண் அயன மண்டல பாலைவனப் பிரதேசங்களில் காணப்படுகிறது.

## அலகு - 2 வானிலையும் காலநிலையும்

**I சரியான விடையைத் தேர்வு செய்க**

1. புவியின் வளிமண்டலம் ஆக்சிஜன் மற்றும் நைட்ரஜன் அளவைக் கொண்டுள்ளது.
**அ. 78% மற்றும் 21%** ஆ. 22% மற்றும் 1% இ. 21% மற்றும் 0.97% ஈ. 10 மற்றும் 20%

2. ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.
அ. புவி ஆ. வளிமண்டலம் **இ. காலநிலை** ஈ. சூரியன்

3. புவி பெறும் ஆற்றல்
அ. நீரோட்டம் ஆ. மின்காந்த அலைகள் இ. அலைகள் **ஈ. வெப்பம்**

4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.
அ. சமவெப்பக்கோடு ஆ. சம சூரிய வெளிச்சக் கோடு
இ. சம காற்றழுத்தக் கோடு **ஈ. சம மழையளவுக் கோடு**

5. ---------------- என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.
அ. காற்றுமானி ஆ. அழுத்தமானி **இ. ஈரநிலைமானி** ஈ. வெப்பமானி

**II கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. **வானிலை** என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.
2. வானிலையைப் பற்றிய அறிவியல் ஆய்வு **வானிலையியல்**
3. புவியில் அதிகபட்ச வெப்பம் பதிவான இடம் **கலிபோர்னியா**
4. காற்றில் உள்ள அதிக பட்ச நீராவிக் கொள்ளளவுக்கும் உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம் **ஒப்பு ஈரப்பதம்**

5. அனிமாமீட்டர் மற்றும் காற்றுமானி மூலம் **காற்றின் வேகம்** மற்றும் **திசை** ஆகியவை அளக்கப்படுகின்றன.

6. சம அளவுள்ள வெப்பநிலையை இணைக்கும் கற்பனைக் கோடு **சமவெப்பக் கோடு**

**III பொருத்துக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | காலநிலை | - | அ. | புயலின் அமைவிடத்தையும் அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது |
| 2 | ஐசோநிப் | - | ஆ. | சூறாவளி |
| 3 | ஈரநிலைமானி | - | இ. | சம அளவுள்ள பனிபொழிவு |
| 4 | ரேடார் | - | ஈ. | நீண்ட நாளைய மாற்றங்கள் |
| 5 | குறைந்த அழுத்தம் | - | உ. | ஈரப்பதம் |

**விடைகள்** : **1 - ஈ, 2 - இ, 3 - உ, 4 - அ, 5 - ஆ**

**IV சரியா தவறா**

1. புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும். - **சரி**
2. வானிலை பற்றிய அறிவியல் பிரிவிற்கு காலநிலை என்று பெயர். - **தவறு**
3. சமமான சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளை இணைக்கும் கோட்டிற்கு சம சூரிய வெளிச்சக் கோடு என்று பெயர். - **சரி**
4. ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அனிராய்டு அழுத்த மானி. - **தவறு**

**V குறுகிய விடையளி**

**1. காலநிலை - வரையறு**

- ❖ காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலை சராசரியைக் குறிப்பதாகும்.
- ❖ இது வளிமண்டலத்தின் வானிலைக் கூறுகளின் சராசரி தன்மையினை நீண்ட காலத்திற்கு அதாவது 35 வருடங்களுக்கு கணக்கிட்டுக் கூறுவதாகும்.

**2. "வெயிற் காய்வு" என்றால் என்ன ?**

- ❖ புவியும் அதன் வளி மண்டலமும் சூரியனின் வெப்ப கதிர்வீசலால் வெப்பம் அடைகின்றன.
- ❖ "வெயிற் காய்வு" ஆனது புவியை வந்தடையும் கதிர்வீச்சின் காலத்தைப் பொறுத்தும் புவி வெப்ப கதிர்வீச்சலின் அளவை பொறுத்தும் வெப்பம் இடத்திற்கு இடம் மாறுப்படுகிறது.

**3. "வளிமண்டலக் காற்றழுத்தம்" என்றால் என்ன ?**

- ❖ புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள உள்ள காற்றின் எடையே வளிமண்டல அழுத்தம் அல்லது காற்றழுத்தம் எனப்படும்.
- ❖ காற்றின் அழுத்தம் காற்றழுத்த மானியால் அளவிடப்படுகிறது.

**4. சிறு குறிப்பு வரைக: கோள் காற்று / நிரந்தரக்காற்று**

- ❖ ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் அல்லது நிலையான காற்று என்று அழைப்பர்.
- ❖ எ.கா. வியாபாரக் காற்று, மேலைக்காற்று, துருவக்காற்று.

**5. சம அளவுக்கோடுகள் - "ஐசோ லைன்ஸ்" என்றால் என்ன ?**

- ❖ சம அளவுக் கோடு என்பது சம அளவுள்ள இடங்களை இணைப்பதாகும்.
- ❖ நிலவரைபடங்களில் வானிலைக் கூறுகளின் பரவலைச் சம அளவுக் கோட்டு வரைபடம் மூலம் காண்பிக்கப்படுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

VI வேறுபடுத்துக

1. காலநிலை மற்றும் வானிலை

| | காலநிலை | வானிலை |
|---|---|---|
| 1. | இது வளிமண்டலத்தின் வானிலைக் கூறுகளின் சராசரி தன்மையினை நீண்ட காலத்திற்கு அதாவது 35 வருடங்களுக்கு கணக்கிட்டுக் கூறுவதாகும். | வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டலத்தில் நிலவும் சூரிய வெளிச்சம், வெப்பம், மேகமூட்டம், காற்றின்திசை, காற்றழுத்தம், ஈரப்பதம், மழைப்பொழிவு மற்றும் பிறகூறுகளின் தன்மைகளை குறிப்பதாகும். |

2. முழுமையான ஈரப்பதம் மற்றும் ஒப்பு ஈரப்பதம்

| | முழுமையான ஈரப்பதம் | ஒப்பு ஈரப்பதம் |
|---|---|---|
| 1. | ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் உள்ள நீராவியின் எடைக்கு உண்மையான ஈரப்பதம் என்று பெயர். | ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் எவ்வளவு நீராவி இருக்க முடியுமோ அந்த அளவிற்கும், அதேசமயம் அக்காற்றில் தற்போது எவ்வளவு நீராவி உள்ளதோ அந்த அளவிற்கும் உள்ள விகிதம் ஒப்பு ஈரப்பதம் எனப்படும். |

3. கோள் காற்று மற்றும் பருவகாலக் காற்றுகள்

| | கோள் காற்று | பருவகாலக் காற்றுகள் |
|---|---|---|
| 1 | ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் அல்லது நிலையான காற்று என்று அழைப்பர். | பருவக்காலக் காற்று என்பது பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும். |
| 2 | எ.கா. வியாபாரக் காற்று, மேலைக்காற்று, துருவக்காற்று | எ.கா. தென்மேற்கு பருவக்காற்று, வடகிழக்கு பருவக்காற்று |

VII காரணம் கூறுக

1. **காலநிலையும் வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன.**
   - ❖ காலநிலையையும், வானிலையையும் தீர்மானிக்கும் காரணிகள் இடத்திற்கு இடம் வேறுபடுவதால் காலநிலையும் வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன.
2. **உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.**
   - ❖ உயரம் அதிகமுள்ள பகுதிகளில் காற்றழுத்தம் குறைவாக இருக்கும்.
   - ❖ காற்றிலுள்ள மூலக்கூறுகளின் அளவு குறைவதால் வெப்பமும் குறைகிறது.
3. **மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும் போது ஆக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றனர்.**
   - ❖ மிக உயரமான இடங்களில் காற்றில் ஆக்ஸிஜனின் அளவும் காற்றின் அழுத்தமும் மிகவும் குறைவாக உள்ளது.
   - ❖ இதனால் மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும் போது ஆக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றனர்.

VIII ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

1. **வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது?**
   - ❖ வெப்பநிலை என்பது ஒரு குறிப்பிட்ட கனஅளவு காற்றில் குறிப்பிட்ட நேரத்தில் அளவிடப்படுகிறது.

- ❖ இது செல்சியஸ், பாரன்ஹீட் மற்றும் கெல்வின் அளவுகளால் அளவிடப்படுதாகும்.
- ❖ வானிலை ஆய்வாளர்கள் வெப்பநிலையை அளக்க வெப்பமானி, ஸ்டீவன்சன் திரை வெப்பமானி, மற்றும் குறைந்தபட்ச - அதிகபட்ச வெப்பமானி மூலமும் கணக்கிடுகிறார்கள்.

**2. காற்றையும், அதன் வகைகளைப் பற்றியும் விவரி.**

**காற்று**

- ❖ கிடைமட்டமாக நகரும் வாயுவிற்கு காற்று என்று பெயர்.

**காற்றின் வகைகள்**

**1. கோள் காற்றுகள் அல்லது நிரந்தர காற்றுகள் :**

- ❖ ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் அல்லது நிலையான காற்று என்று அழைப்பர்.

**2. பருவக்காலக் காற்றுகள் :**

- ❖ பருவக்காலக் காற்று என்பது பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும்.

**3. தலக் காற்றுகள் அல்லது பிரதேசக்காற்றுகள் :**


- ❖ ஒரு நாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிறியபகுதியில் வீசும். எ.கா. நிலக்காற்று, கடல் காற்று.

**3. வானிலைக் கூறுகளையும் அதை அளக்க உதவும் கருவிகளையும் பட்டியலிடுக.**


| | வானிலைக் கூறுகள் | அளக்க உதவும் கருவிகள் |
|---|---|---|
| 1 | வெப்பநிலை | வெப்பமானி (தெர்மோமீட்டர்) |
| 2 | மழைப்பொழிவு | மழைமானி |
| 3 | காற்றழுத்தம் | காற்றழுத்தமானி (அனிராய்டு) |
| 4 | ஈரப்பதம் | ஈரநிலைமானி (ஹைக்ரோமீட்டர்) |
| 5 | காற்று | காற்றுமானி (அனிமாமீட்டர்) |

**கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**

**1. வெப்ப மண்டலங்கள்**



2. காற்றழுத்த மண்டலமும், கோள் காற்றுகளும்




## அலகு - 3 நீரியல் சுழற்சி

**I சரியான விடையைத் தேர்வு செய்க**

1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு ________ என்று பெயர்.
   அ) ஆற்றின் சுழற்சி **ஆ) நீரின் சுழற்சி** இ) பாறைச் சுழற்சி ஈ) வாழ்க்கைச் சுழற்சி

2. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் ________.
   அ) 71% ஆ) 97% **இ) 2.8%** ஈ) 0.6%

3. நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு ________ என்று பெயர்.
   **அ) ஆவி சுருங்குதல்** ஆ) ஆவியாதல் இ) பதங்கமாதல் ஈ) மழை

4. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு ________.
   அ) ஆவி சுருங்குதல் ஆ) ஆவியாதல்
   இ) நீர் உட்கசிந்து வெளியிடுதல் **ஈ) நீர் வழிந்தோடல்**

5. நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு ____ என்று அழைக்கின்றனர்.
   **அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்** ஆ) நீர் சுருங்குதல்
   இ) நீராவி சுருங்குதல் ஈ) பொழிவு

6. குடிப்பதற்கு உகந்த நீரை ________ என்று அழைப்பர்.
   அ) நிலத்தடி நீர் ஆ) மேற்பரப்பு நீர் **இ) நன்னீர்** ஈ) ஆர்ட்டீசியன் நீர்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு **ஈரப்பதம்** என்று அழைக்கப்படுகிறது.
2. நீர்ச் சுழற்சியில் **மூன்று** நிலைகள் உள்ளன.
3. வளிமண்டலத்திற்கு புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் **நீர் சுருங்குதல்** என்று பெயர்.
4. மழைத்துளியின் அளவு 0.5 மீ குறைவாக இருந்தால், அம்மழை பொழிவின் பெயர் **தூறல்**
5. மூடுபனி **அடர் மூடுபனி** ஐ விட குறைவான அடர்த்தி கொண்டது.

**III. பொருத்துக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தாவரங்கள் | - | அ. | மேகங்கள் |
| 2 | நீர் சுருங்குதல் | - | ஆ. | கல்மழை |
| 3 | பனித்துளி மற்றும் மழைத்துளி | - | இ. | புவியின் மேற்பரப்பு |
| 4 | நீர் ஊடுருவுதல் | - | ஈ. | நீர் உட்கசிந்து வெளியிடுதல் |

**விடைகள் : 1 - ஈ, 2 - அ, 3 - ஆ, 4 - இ**

**IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்:**

1. நீராவியாதல் என்பது

(i) நீராவி நீராக மாறும் செயலாக்கம்

(ii) நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

(iii) நீர் 100°C. வெப்பநிலையில் கொதிக்கிறது. ஆனால் 0°C வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

(iv) ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைகிறது.

அ) i, iv சரி **ஆ) ii சரி** இ) ii, iii சரி ஈ) அனைத்தும் சரி

**V. சரியா, தவறா ?**

1. 212 °F வெப்பநிலையில் நீர் கொதிக்கிறது. ஆனால் 32 °F வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது. **- தவறு**
2. மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகளைப் பெற்றிருப்பதில்லை. **- தவறு**
3. அடிப்பரப்பு நீர் வழிந் தோடல் பொதுவாக இடை நீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.**- சரி**

**VI குறுகிய விடையளி**

**1. நீர் கொள் பரப்பு பற்றி குறிப்பு வரைக.**

**2. நீர் சுழற்சி - வரையறு.**

- நீரியில் சுழற்சி என்பது உலக அளவிலான ஒரு நிகழ்வு ஆகும்.
- இது கடலிலிருந்து நீரை வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து புவிக்கும், புவியிலிருந்து மீண்டும் கடலுக்கு எடுத்து செல்லும் ஒரு சுழற்சி ஆகும்.

**3. பனி உருவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?**

- நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது.
- பொருட்களின் வெப்பநிலை பனிநிலையின் வெப்பநிலையை விடக் குறைவாக இருக்கும் பொழுது பனி உருவாகிறது.

**4. "மேல் மட்ட நீர் வழிந்தோடல்" குறிப்பு வரைக.**

- நிலநீர் ஓட்டம் ஆறுகள், சிறு ஓடைகள் மற்றும் கடல்களில் இணைவதால் இது மேல்மட்ட நீர் வழிந்தோடல் என அழைக்கப்படுகிறது.
- இது மழைப்பொழிவு அதிகமாவும் நீண்ட காலத்திற்கும் ஊடுருவலை விட அதிகமாக இருக்கும் பொழுதும் ஏற்படுகிறது.

**VII. காரணம் கூறுக.**

**1. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.**

- ❖ நிலத்தில் நீர் ஊடுருவ மண்துகள்கள் மற்றும் பாறைகளுக்கிடையே இடைவெளி அவசியமாகிறது.
- ❖ இவ்விடைவெளி குறைவாக மற்றும் நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.

**2. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.**


- ❖ புவியில் உள்ள மொத்த நீரில் 97.2% உவர்ப்பு நீராகவும் மற்றும் 2.8% நன்னீராகவும் உள்ளது .

**3. துருவப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் பனிப்பொழிவு பொதுவான நிகழ்வாக உள்ளது.**

- ❖ துருவப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் மேகத்திலுள்ள வெப்பம் குறைவதன் காரணமாக பனிப்பொழிவு பொதுவான நிகழ்வாக உள்ளது.

**VIII. பத்தியளவில் விடையளிக்கவும்:**

**1. நீர்ச் சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி.**




**ஆவியீர்ப்பு**

- ❖ ஆவியீர்ப்பு என்பது புவியின் மேற்பரப்பு நீர் நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் மற்றும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமாகவும் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பாகும்.

**நீர் ஆவியாதல்**

- ❖ நீர், திரவநிலையிலிருந்து வாயுநிலைக்கு மாறுவதற்கு ஆவியாதல் என்று பெயர்.

**நீர் உட்கசிந்து வெளியிடுதல்**

- ❖ தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கமே நீர் உட்கசிந்து வெளியிடுதல் ஆகும்.

**நீர் சுருங்குதல்**

- ❖ நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு நீர் சுருங்குதல் என்று பெ யர்.

**மழைப்பொழிவு**

- ❖ மழைப்பொழிவு என்பது மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.

**நீர் ஊடுருவல்**

- ❖ புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர்ப் புகுவதற்கு நீர் ஊடுருவல் என்று பெயர்.

**நீர் உட்கசிதல்**

- ❖ நீர் உட்கசிவு என்பது மண்ணடுக்கு மற்றும் பாறை அடுக்குகளின் வாயிலாக ஊடுருவிய நீர் கீழ்நோக்கி நிலத்திற்கு அடியில் செல்வதாகும்.

**நீர் வழிந்தோடல்**

- ❖ நீர் வழிந்தோடல் என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.

**2. தாவரங்களின் நீர் உட்கசிந்து வெளியேறுதலுக்கும் ஆவியாதலுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறு.**

| | நீர் உட்கசிந்து வெளியிடுதல் | ஆவியாதலுக்கும் |
|---|---|---|
| 1 | தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கமே நீர் உட்கசிந்து வெளியிடுதல் ஆகும். | நீர், திரவநிலையிலிருந்து வாயுநிலைக்கு மாறுவதற்கு ஆவியாதல் என்று பெயர். |
| 2 | வெப்பநிலை , காற்று, ஈரப்பதம் ஆகியவை நீர் உட்கசிந்து வெளியாகும் விதத்தை நிர்ணயிக்கின்றன. | ஆவியாதலின் விகிதத்தை பாதிக்கும் முக்கிய காரணியாக வெப்ப நிலை உள்ளது. |
| 3 | பயிர்களின் தன்மை , பயிர்களின் பண்புகள், அதன் சூழல் மற்றும் பயிர் சாகுபடி முறைகள் நீர் உட்கசிந்து வெளியேறும் செயலைத் தீர்மானிக்கின்றன. | புவியில் மேற்பரப்பில் உள்ள பரந்த நீர்ப்பரப்பு, காற்று, வளிமண்டல ஈரப்பதம் போன்ற காரணிகள் ஆவியாதலின் விகிதத்தை பாதிக்கின்றன. |

**3. மழைபொழிவின் பல வகைகளை விவரி.**

- **மழை** நீர்த் துளிகள் 0.5 மி.மீ விட்டத்திற்கு அதிகமாக இருந்தால் மழைப் பொழிவு எனவும் 0.5 மி.மீட்டருக்கு குறைவாக இருப்பதால் அதைத் தூறல் எனவும் அழைக்கப்படுகிறது.
- **கல்மழை** நீர்த்துளிகளும், 5 மி.மீ விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு கல்மழை என்று பெயர்.
- **உறைபனி மழை** மழைத்துளிகள் குளிர்ந்த புவிப்பரப்பைத் தொடும்பொழுது உறைந்து விடுகின்றன. இவையே உறைபனி எனப்படுகிறது.
- **ஆலங்கட்டி மழை** மழை பொழிவானது 5 மி.மீ விட்டத்தை விட பெரிய உருண்டையான பனிக்கட்டிகளைக் கொண்டிருந்தால் ஆலங்கட்டி மழை என்று பெயர்.
- **பனி** மேகத்திலுள்ள வெப்பம் குறைவதின் காரணமாக நீராவி அடிக்கடி நேரடியாக பனிக்கட்டிகளாக மாற்றப்படுகிறது. இந்தப் பனித்திரள்துகள்கள் பொழிவதைப் பனிப்பொழிவு என அழைக்கிறோம்.

**4. நீர் வழிந்தோடல் மற்றும் அதன் வகைகளை விவரி.**

**நீர் வழிந்தோடல்**

- நீர் வழிந்தோடல் என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.

**நீர் வழிந்தோடலின் வகைகள்**

**அ) மேல்மட்ட மழை நீர் வழிந்தோடல்:**

- நிலநீர் ஓட்டம் ஆறுகள், சிறு ஓடைகள் மற்றும் கடல்களில் இணைவதால் இது மேல்மட்ட நீர் வழிந்தோடல் என அழைக்கப்படுகிறது.

**ஆ) அடிப்பரப்பு நீர் வழிந்தோடல்**

- நீரானது அடிமண் அடுக்கினுள் நுழைந்து நிலத்தடி நீரில் கலக்காமல் பக்கவாட்டு திசையில் நகர்ந்து ஓடைகள், ஆறுகள் மற்றும் கடலுடன் கலப்பதால் இதற்கு அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் என்று பெயர்.

**இ) அடிமட்ட நீர் ஓட்டம்**

- செறிவடைந்த நிலத்தடி நீர் மண்டலத்திலிருந்து நீர் பாதை வழியாக நிலத்தடி நீராக ஓடுவதே அடிமட்ட நீர் ஓட்டமாகும்.

# அலகு - 4 இடம்பெயர்தல் மற்றும் நகர்புற மாற்றங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. மக்கள் ............................ லிருந்து ...................... க்கு நல்ல வேலை வாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்.
   **அ. கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு** ஆ. நகர் புறத்திலிருந்து கிராமப்புறத்திற்கு
   இ. மலையிலிருந்து சமவெளிக்கு ஈ. சமவெளியிலிருந்து மலைப்பகுதிக்கு
2. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் ...... எனப்படுகிறது.
   அ. குடிபுகுபவர் ஆ. அகதி **இ. குடியேறுபவர்** ஈ. புகலிடம் தேடுபவர்
3. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது
   **அ. கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு** ஆ. கிராமத்தில் இருந்து நகரத்திற்கு
   இ. நகரத்தில் இருந்து கிராமத்திற்கு ஈ. நகரத்தில் இருந்து நகரத்திற்கு
4. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ......................... ஐ சார்ந்தது.
   அ. மக்களியல் ஆ. சமூக மற்றும் கலாச்சாரம் **இ. அரசியல்** ஈ. பொருளாதாரம்
5. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம்
   **அ. உணவு தானிய உற்பத்தி** ஆ. கால்நடை வளர்ப்பு
   இ. மீன் பிடித்தல் ஈ. வேட்டையாடுதல்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நகரமயமாதல் **மூன்று** எண்ணிக்கையிலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன.
2. **வேலைவாய்ப்பின்மை** என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.
3. இந்தியாவின் **புது டெல்லி** மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.
4. ஒரு நபர் தன்னார்வத்துடனும் விருப்பத்துடனும் நல்ல வசிப்பிடம் தேடி இடம் பெயர்தல் **தன்னார்வ** இடம்பெயர்வு எனப்படும்.
5. நவீன காலத்தில் நகர்ப்புற வளர்ச்சி **மக்கள்தொகை** வளர்ச்சியால் அதிகரிக்கிறது.

**III. பொருத்துக.**

1. குடியேற்றம் - குடிபுகுபவர்
2. குடியிறக்கம் - வெளியேறுதல்
3. இழுக்காரணி - வேலை வாய்ப்பின்மை
4. உந்து காரணி - சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு
5. திருமணம் - வேலைவாய்ப்பு

**விடை: 1. வெளியேறுதல் 2. குடிபுகுபவர் 3. வேலைவாய்ப்பு 4. வேலை வாய்ப்பின்மை 5. சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு**

**IV. சரியா? தவறா ?**

1. குடிசைப்பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது. **சரி**
2. நவீன காலத்தில், ஒரே சமயத்தில் அதிக மக்களின் இடம்பெயர்வு நடைபெறுவதில்லை **தவறு**
3. நகரமயமாக்கம் குறுகியக் கால வரலாறுடையது. **தவறு**
4. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன. **சரி**
5. மேய்ச்சலுக்காக கால்நடைகளை இடமாற்றம் செய்வது, பருவகால இடம் பெயர்வு எனவும் அழைக்கப்படுகிறது. **சரி**


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**V. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க.**

**கூற்று**: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.

**காரணம்**: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல

**அ. கூற்று சரி ஆனால் காரணம் தவறு** ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

இ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஈ. கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**VI. சுருக்கமாக விடையளி**

**1. 'இடம் பெயர்தல்' - வரையறு.**

- ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக தம் இருப்பிடத்தை விட்டு குறிப்பிடத்தக்க தூரத்திற்கு வசிக்கும் இடத்தை மாற்றுவதே இடம் பெயர்தல் எனப்படும்.

**2. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்கள் யாவை?**

- வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிக்காக மக்கள் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்கின்றனர்

**3. சுற்றுச்சூழல் அல்லது இயற்கையால் இடம் பெயர்வதற்கான காரணங்களைக் கூறுக.**

- எரிமலை வெடிப்பு, நிலஅதிர்வு, வெள்ளம், வறட்சி போன்றவை இவ்வகை இடம் பெயர்வுக்கான முக்கிய காரணிகளாகும்.

**4. இடம்பெயர்வுக்கான இழுகாரணிகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

- இயற்கை வளங்கள் மற்றும் கனிமங்கள் மிகுந்த பகுதிகள் (எடுத்துக்காட்டு: நீர், எண்ணெய், யுரேனியம்)
- வேலை வாய்ப்பிற்கேற்ற சூழல்கள் மற்றும் அரசியல் பாதுகாப்பு

**5. நகரமயமாக்கம் என்றால் என்ன?**

- நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள் தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பதே நகரமயமாதல் எனப்படுகிறது.

**6. உலகில் அதிக மக்கள் தொகைக் கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக.**

- 1. டோக்கியோ (ஜப்பான்) 2. புது தில்லி (இந்தியா) 3. சாங்காய் ( சீனா)
- 4. மெக்சிகோ நகரம் (மெக்சிகோ ) 5. சா பாலோ (பிரேசில்)

**VII. விரிவான விடையளி**

**1. இடம் பெயர்தலின் பல்வேறு வகைகள் யாவை? அவைகளை விளக்குக.**

I. நிர்வாக எல்லை அடிப்படையில் இடம் பெயர்வுகள்

அ. உள்நாட்டு இடம் பெயர்வு ஆ. சர்வதேச இடம் பெயர்வு

II. இடம் பெயர்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் இடம் பெயர்தல்

1. தன்னார்வ இடம் பெயர்வு 2. தன்னார்வமில்லா (அ) கட்டாய இடம் பெயர்வு

III. இடம் பெயர்ந்த இடத்தில் தங்கும் கால அளவின் அடிப்படையில் இடம் பெயர்தல்.

1.குறுகிய கால இடம் பெயர்வு 2.நீண்டகால இடம் பெயர்வு 3.பருவகால இடம் பெயர்வு

**2. இடம் பெயர்தலுக்கான பல்வேறு காரணங்களை விரிவாக விளக்குக.**

**அ. சூழியல் அல்லது இயற்கை காரணங்கள்**

- எரிமலை வெடிப்பு, நிலஅதிர்வு, வெள்ளம், வறட்சி

**ஆ. பொருளாதார காரணங்கள்**

- வளமான வேளாண் நிலம், வேலை வாய்ப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி

**இ. சமூக மற்றும் பண்பாட்டுக் காரணங்கள்**

❖ பெண்களின் திருமணத்திற்கு பின் இடம்பெயர்வு,
❖ புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம்பெயர்தல்

**ஈ. மக்கள்தொகை சார்ந்த காரணங்கள்**

❖ வயது, பாலினம், அதிக மற்றும் குறைந்த மக்கள் தொகை

**உ. அரசியல் காரணங்கள்**

❖ காலனி ஆதிக்கம், போர்கள், அரசாங்கக் கொள்கைகள்

3. **நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க.**

**அ. குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதிகள்** :

❖ விரைவான நகரமயமாக்கலால் தரமற்ற குடியிருப்புகள் மற்றும் குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உருவாகின்றன.

**ஆ. மக்கள் நெரிசல்** : -

❖ சுகாதாரமற்ற சுற்றுப்புற சூழல், பல நோய்கள் மற்றும் கலவரங்களுக்கு காரணமாகிறது.

**இ. தண்ணீர் விநியோகம், வடிகால் மற்றும் சுகாதாரம்** : -

❖ முறையாக நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு மோசமான நிலையில் உள்ளது.

**ஈ. போக்குவரத்து மற்றும் நெரிசல்** : -

❖ இரு சக்கர வாகனங்கள் மற்றும் மகிழுந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பினால் ஏற்படுகிறது. வாகனப் பெருக்கம், காற்று மாசு அடைய காரணமாகின்றன.


**உ. மாசடைதல்** : -

❖ நகரங்கள், தொழிலகங்களிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நீர் நிலைகளையும் புகை மற்றும் நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தையும் மாசுபடுத்துகின்றன.

VIII. **நில வரைபடப்பயிற்சி**

**உலக வரைபடத்தில் கீழக்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

1. டோக்கியோ 2. புது தில்லி 3. மெக்சிகோ நகரம் 4. ஷாங்காய் 5. சா-பாலோ
6. ஓசியானியோ 7. இலத்தீன் அமெரிக்கா 8. பாரிஸ் 9. இலண்டன் 10.கெய்ரோ



# அலகு - 5 இடர்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் ..................
   **அ. 78.09%** ஆ. 74.08% இ. 80.07% ஈ. 76.63%

2. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ............... ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
   அ. 1990 **ஆ. 2004** இ. 2005 ஈ. 2008

3. சுனாமி என்ற சொல் .................. மொழியிலிருந்து பெறப்பட்டது.
   அ. ஹிந்தி ஆ. பிரெஞ்சு **இ. ஜாப்பனிய** ஈ. ஜெர்மன்

4. புவி மேற்பரப்பு நீருக்கு ........................எடுத்துக்காட்டாகும்.
   அ. ஆர்டீசியன் கிணறு ஆ. நிலத்தடி நீர் இ. அடி பரப்பு நீர் **ஈ. ஏரிகள்**

5. பருவமழை பொய்ப்பின் காரணமாக ...................ஏற்படுகிறது.
   அ. ஆவி சுருங்குதல் **ஆ. வறட்சி** இ. ஆவியாதல் ஈ. மழைப்பொழிவு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இடர்கள் .**பேரழிவு**க்கு வழிவகுக்கிறது.
2. நிலச்சரிவு **இயற்கையால் ஏற்படும்** இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
3. இடர்கள் தோன்றுவதன் அடிப்படையில் இடர்களை **எட்டு** வகைகளாகப் பிரிக்கலாம்.
4. தீவிரவாதம் **மனித தூண்டுதலால் ஏற்படும்** இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
5. நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் **முதன்மை** மாசுபடுத்திகளாகும்.
6. செர்னோபில் அணு விபத்து **1986** ஆண்டில் நடைபெற்றது.

**III. பொருத்துக.**

1. முதல் நிலை மாசுபடுத்திகள் - தீவிரவாதம்
2. அபாயகர கழிவுகள் - சுனாமி
3. நில அதிர்வு - காலாவதியான மருந்துகள்
4. வானிலையியல் வறட்சி - சல்பர் ஆக்சைடுகள்
5. மனிதனால் தூண்டப்பட்ட இடர் - மழைப் பொழிவு குறைதல்

**விடை:** **1. சல்பர் ஆக்சைடுகள் 2. காலாவதியான மருந்துகள் 3. சுனாமி 4. மழைப் பொழிவு குறைதல் 5. தீவிரவாதம்**

**IV. சுருக்கமாக விடையளி.**

**1. 'இடர்' - வரையறு.**

❖ மக்கள், பொருளாதார வளங்கள் அல்லது கட்டமைப்புகளை அச்சுறுத்தக்கூடிய நிகழ்வுகள் இடர்கள் எனப்படுகிறது.

**2. இடரின் முக்கிய வகைகள் யாவை?**

❖ இயற்கை இடர்கள்
❖ மனிதனால் உருவாக்கும் இடர்கள்
❖ சமூக - இயற்கை இடர்கள்

**3. அபாயகரக் கழிவுகள் பற்றி குறிப்பு எழுதுக.**

❖ சுற்றுச்சூழல் மற்றும் மனிதர்களுக்கு பெருத்த சுகாதார தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய நச்சுக் கழிவுகள் அபாயகர கழிவுகள் எனப்படுகிறது.
❖ எ.காட்டு: மருத்துவ கழிவுகள், கதிரியக்க பொருள்கள், இரசாயனங்கள்.

4. **நமது நாட்டில் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் முக்கியப் பகுதிகளைப் பட்டியலிடுக.**
- ❖ பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், வட பீகார், மேற்கு வங்காளத்தை உள்ளடக்கிய கங்கைச் சமவெளி மற்றும் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு பகுதிகள்.
- ❖ கடலோர ஆந்திரம், ஒடிசா, குஜராத் போன்றவை அடிக்கடி வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகும் இதர பகுதிகளாகும்.

5. **வறட்சியின் வகைகளைக் குறிப்பிடுக.**
- ❖ வானிலையியல் வறட்சி, நீரியியல் வறட்சி, வேளாண் வறட்சி

6. **மலை அடிவாரப் பகுதிகளில் நாம் ஏன் குடியிருப்புகளை அமைக்க கூடாது?**
- ❖ நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதால் மலை அடிவாரப் பகுதிகளில் நாம் குடியிருப்புகளை அமைக்க கூடாது.

V. **வேறுபடுத்துக:**

1. **இடர் மற்றும் பேரிடர்**

| | இடர் | பேரிடர் |
|---|---|---|
| 1 | புவியிலுள்ள உயிர் மற்றும் உயிரற்ற பொருட்களைப் பாதிக்கக்கூடிய நிகழ்வை இடர் என்கிறோம். | வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வை பேரிடர் என்கிறோம். |
| 2 | குறைவான இழப்பு மற்றும் மீள்வதற்கு குறைவான காலமே தேவைப்படுகிறது | பேரிழப்பு மற்றும் மீள்வதற்கு நீண்ட காலமும் தேவைப்படுகிறது |

2. **இயற்கை மற்றும் செயற்கை இடர்கள்**

| | இயற்கை இடர்கள் | செயற்கை இடர்கள் |
|---|---|---|
| 1 | இயற்கைக் காரணிகளால் உருவாகின்றன. இவ்வகையான இடர்களில் மனிதனின் பங்கு இருப்பதில்லை . | மனிதர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகள் மூலமும் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளின் விளைவாகவும் ஏற்படுகின்றன . |
| 2 | **எ.காட்டு:** நில அதிர்வு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல்கள், வறட்சி, நிலச்சரிவு, சுனாமி மற்றும் எரிமலை வெடிப்பு | **எ.காட்டு:** அபாயகரமான கழிவுகள், காற்று, நீர், நிலம் மாசடைதல், அணைக்கட்டு உடைதல், போர், கலவரங்கள், தீவிரவாத செயல்கள் |

3. **வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி**

| | வெள்ளப்பெருக்கு | வறட்சி |
|---|---|---|
| 1 | கனமழை மற்றும் கடல்களில் உருவாகும் பேரலைகளால் புவியின் மேற்பரப்பில் உள்ள ஒரு பகுதி நீரினால் மூழ்கடிக்கப்படுதல் வெள்ளப்பெருக்கு எனப்படுகிறது. | வேளாண்மை , கால்நடை வளர்ப்பு, தொழில் துறை மற்றும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நீர் பற்றாக்குறையே வறட்சி எனப்படுகிறது. |

4. **நில அதிர்வு மற்றும் சுனாமி**

| | நில அதிர்வு | சுனாமி |
|---|---|---|
| 1 | நில அதிர்வு என்பது புவியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடும் அதிர்வாகும். | கடலடி நில அதிர்வு, கடலடி நிலச்சரிவு மற்றும் எரிமலை வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக கடலில் ஏற்படும் பேரலைக்கு சுனாமி என்று பெயர். |

**VI. விரிவான விடையளி.**

**1. காற்று மாசுபடுதலை பற்றி ஒரு கட்டுரை வரைக.**

**காற்று மாசுபடுதல்:**

- உட்புற அல்லது வெளிப்புறக் காற்றானது சில வாயுக்கள் மற்றும் திடப் பொருட்களின் சேர்க்கையால் அதன் இயற்கை பண்புகள் மற்றும் காற்றின் சதவீதங்கள் மாறுபடுவதை காற்று மாசுபடுதல் என்கிறோம்.

**காற்று மாசுப்படுத்திகளின் வகைகள்:**

**அ. முதன்மை மாசுபடுத்திகள்**

- ஒரு மூலத்தில் இருந்து நேரடியாக வெளியேற்றப்படும் மாசுவாகும்.
- எ.காட்டு: i) சல்பர் டை ஆக்சைடு ii) நைட்ரஜன் ஆக்சைடு iii) கார்பன் டை ஆக்சைடு

**ஆ. இரண்டாம் நிலை மாசுபடுத்திகள்**

- நேரடியாக வெளியேறப்படுவதில்லை ஆனால் மற்ற முதன்மை மாசுக்கள் வளிமண்டலத்தில் வினைபுரிவதால் உருவாகுபவை ஆகும்.
- எ.காட்டு: i) தரை மட்ட ஓசோன் ii) பனிப்புகை

**2. நில அதிர்வை வரையறுத்து அதன் விளைவுகளைப் பட்டியலிடுக.**

**நில அதிர்வு :**

- புவியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடும் அதிர்வாகும். இவ்வதிர்வு தோன்றும் மையத்திலிருந்து அனைத்து திசைகளிலும் தொடர்ச்சியான அதிர்வு அலைகளை ஏற்படுத்துகிறது.

**விளைவுகள்:**

- நில அதிர்வின் காரணமாக உயரமான மலைப்பகுதிகளில் நிலச்சரிவும், கடலடி அதிர்வால் சுனாமியும் ஏற்படுகிறது.
- நில அதிர்வின் அளவினைப் பொறுத்து இழப்பின் தன்மை மாறுபடுகிறது.

**3. நிலச்சரிவிற்கான காரணங்கள் குறித்து விரிவான விளக்கம் தருக.**

- நிலச்சரிவு என்பது புவியீர்ப்பு விசையினால் பாறைகள், மண் மற்றும் தாவரங்கள் கீழ்நோக்கி வேகமாகச் செல்லும் நகர்வைக் குறிப்பதாகும்.
- செங்குத்துச் சரிவு மற்றும் கனமழை நிலச்சரிவுகள் ஏற்பட முக்கியக் காரணங்களாகும்.
- பலவீனமான தளர்ந்த நில அமைப்பு, காடழிப்பு, நில அதிர்வு, எரிமலை வெடிப்பு,
- சுரங்கம் தோண்டுதல் , மலைப்பிரதேசங்களில் சாலைகள் மற்றும் இருப்பு பாதைகளின் கட்டுமானம் ஆகியவை நிலச்சரிவுகள் ஏற்படுவதற்கான மற்ற காரணங்களாகும்.

**4. நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க.**

**நீர்வாழ் உயிரினங்கள் இறப்பு:**

- போதிய ஆக்சிஜன் கிடைக்காமை, சூரிய ஒளியின்மை போன்ற காரணங்களினால் ஏற்படுகிறது.

**உணவுச்சங்கிலியில் மாற்றம்:**

- நீரிலுள்ள மாசுபடுத்திகளை நுண்ணுயிரிகள் உண்ணுகின்றன. அவற்றை உண்ணும் மீன்களின் வழியாக அவை மனிதனை வந்தடைகின்றன. இதனால் பல்வேறு நோய்கள் மற்றும் உயிரிழப்புகள் ஏற்படுகிறது.

**மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு நோய்கள்:**

- மாசடைந்த நீரினை பயன்படுத்துவதால் டைபாய்டு, காலரா, மஞ்சள் காமாலை, தோல் நோய்கள் ஏற்படுகின்றன.

**சுற்றுச்சூழல் சிதைவு:**

- அமில மழை, வேளாண் நிலங்கள் பாதிப்பு காரணமாக சுற்றுச்சூழல் சிதைவு நேர்கிறது.

# அலகு - 6 தொழிலகங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1) பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் பிரிவுகளின் கீழ் வருகின்றன.

**அ) சிறிய அளவிலான தொழிலகம்.** ஆ) பெரிய அளவிலான தொழிலகம்
இ) கடல்வளம் சார்ந்த தொழிலகம் ஈ) மூலதனம் சார்ந்த தொழிலகம்

2) உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள் வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அ) 2 ஆ) 3 **இ) 4** ஈ) 5

3) ஆனந்த் பால் பண்ணைத் தொழிலகம் (அமுல்) துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அ) தனியார் துறை ஆ) பொதுத்துறை **இ) கூட்டுறவுத்துறை** ஈ) கூட்டுத்துறை

4) இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் ......................தொழிலகங்ளுக்கு சிறந்த எ.கா.

அ) வேளாண் சார்ந்த **ஆ) கனிம வளம் சார்ந்த**
இ) வனப்பொருட்கள் சார்ந்த ஈ) கடல் வளம் சார்ந்த

5) சார்புத் துறை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அ) 4 **ஆ) 3** இ) 2 ஈ) 5

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. வங்கித் துறை என்பது **நான்காம் நிலை** பொருளாதார நடவடிக்கையாகும்
2. மூன்றாம் நிலை **தொழில்கள் நான்கு மற்றும் ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகளாக** வகைப்படுத்தப்படுகிறது.
3. அரசாங்க முடிவு எடுக்கும் செயல்முறைகள் **ஐந்தாம்** துறையின் கீழ்வரும் மூன்றாம் நிலை செயல்பாடாகும்.
4. மூலப்பொருட்கள் அடிப்படையில் பருத்தி நெசவாலை ஒரு **வேளாண் சார்ந்த** தொழிலாகும்.
5. பெரிய அளவிலான தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேவையான மூலதனம் **1 கோடிக்கும் மேல்** ஆகும்.

**III பொருத்துக.**

1. நீதித்துறை - தனியார்துறை
2. தொலைக்காட்சி ஒளிபரப்பு - புவியியல் அல்லாத காரணிகள்
3. புவியியல் காரணிகள் - நான்காம் நிலை செயல்பாடு
4. மூலதனம் - மூலப்பொருட்கள்
5. பஜாஜ் ஆட்டோ - ஐந்தாம் நிலை செயல்பாடுகள்

**விடை: 1. ஐந்தாம் நிலை செயல்பாடுகள் 2. நான்காம் நிலை செயல்பாடு 3. மூலப்பொருட்கள் 4. புவியியல் அல்லாத காரணிகள் 5. தனியார்துறை**

**IV. வேறுபடுத்துக.**

**1. இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடு மற்றும் மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடு.**

| | இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடு | மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடு |
|---|---|---|
| 1 | மூலப்பொருட்களை முறைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது | அத்தியாவசிய சேவைகளை அளிக்கிறது. மேலும் தொழிலகங்கள் இயங்குவதற்கு உதவி புரிகின்றது. |
| 2 | எடுத்துக்காட்டு - நூற்பாலைகள் | எடுத்துக்காட்டு - வங்கித்துறை |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**2. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்.**

| | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன. | கடல் மற்றும் பெருங்கடலில் இருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன. |
| 2 | எடுத்துக்காட்டாக உணவுப் பதப்படுத்துதல், தாவர எண்ணெய் உற்பத்தி, பருத்தி நெசவாலைகள், பால் உற்பத்தி பொருட்கள். | எடுத்துக்காட்டு: பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தி அலகுகள் |

**3. பெரிய அளவிலான தொழிலகங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழிலகங்கள்.**

| | பெரிய அளவிலான தொழிலகங்கள் | சிறிய அளவிலான தொழிலகங்கள் |
|---|---|---|
| 1 | ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் மூலதனம் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் | ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான மூலதனத்தைக் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் |
| 2 | இரும்பு மற்றும் எஃகு ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை | பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் |

**V. பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. தொழிற்சாலை - வரையறு.**

❖ மூலப்பொருட்களை இயந்திரங்களின் மூலம் பயன்படுத்த கூடிய பொருட்களாக மாற்றப்படும் இடமே தொழிற்சாலை எனப்படும்.

**2. பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன?**

❖ உற்பத்தி, விநியோகம், நுகர்வு அல்லது சேவைகளில் ஈடுபடும் எந்த ஒரு செயலும் பொருளாதார நடவடிக்கையாகும்.

**3. முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் பெயர்களை எழுதுக.**

1) முதன்மை பொருளாதார செயல்பாடுகள் - (கச்சா பருத்தி உற்பத்தி)
2) இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடுகள் - (நூற்பாலைகள்)
3) மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடுகள் - (வர்த்தகம், போக்குவரத்து)
4) நான்காம் நிலை பொருளாதார செயல்பாடுகள் - (வங்கித்துறை)
5) ஐந்தாம் நிலை பொருளாதார செயல்பாடுகள் - (நீதித்துறை)

**4. இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.**

❖ மூலப்பொருட்களை முறைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். எடுத்துக்காட்டு - நூற்பாலைகள்

**5. ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குக.**

❖ தொழிற்சாலைகள், வணிகம், கல்வி மற்றும் அரசாங்கங்களின் உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகளை குறிப்பிடுகின்றன.

❖ உதாரணமாக அமைச்சரவை குழுவினர் ஒரு மாநிலத்தின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைப் பற்றிய முடிவுகளை அவர்களே எடுக்கின்றனர்.

**6. தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக.**

1. புவியியல் காரணிகள் (Geographical Factors)
2. புவியியல் அல்லாத காரணிகள் (Non - Geographical Factors)


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**7. பின்வருவனவற்றிக்கு சிறு குறிப்பு தருக.**

**அ. பெரிய அளவிலான தொழிலகங்கள்:**

❖ ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் மூலதனம் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் பெரிய அளவிலான தொழிலகங்கள் ஆகும். எடுத்துக்காட்டு: இரும்பு மற்றும் எஃகு ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை

**ஆ. சிறிய அளவிலான தொழிலகங்கள்:**

❖ ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான மூலதனத்தைக் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் சிறிய அளவிலான தொழிலகங்கள் ஆகும். எடுத்துக்காட்டு: பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்

**VI. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக.**

**(i) வேளாண் சார்ந்த தொழிலகங்கள்:**

❖ வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.
❖ எடுத்துக்காட்டாக உணவுப் பதப்படுத்துதல், தாவர எண்ணெய் உற்பத்தி, பருத்தி நெசவாலைகள், பால் உற்பத்தி பொருட்கள்.

**(ii) கனிமவளம் சார்ந்த தொழிற்சாலைகள்:**

❖ இவ்வகை தொழிலகங்கள் கனிமத் தாதுக்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன.
❖ இரும்பு தாதுவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் இரும்பு கனிம வளம் சார்ந்த தொழிலகத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

**(iii) கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்:**

❖ கடல் மற்றும் பெருங்கடலில் இருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.
❖ எடுத்துக்காட்டு: பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தி அலகுகள்

**(iv) வனவளம் சார்ந்த தொழிலகங்கள்:**

❖ இவ்வகை தொழிலகங்களுக்கு வனப்பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.
❖ எடுத்துக்காட்டாக மரக்கூழ் & காகித உற்பத்தி, மரத்தளவாடங்கள் தொழிலகங்களாகும்.

**2. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக.**

1. **மூலப்பொருட்கள்:** அதிக அளவு மூலப்பொருட்கள் மற்றும் எடை இழக்கும் பொருட்களை நீண்ட தூரத்திற்கு கொண்டு செல்ல முடியாது. எனவே அவை கிடைக்கும் இடத்திற்கு அருகிலேயே தொழிலகங்கள் அமைந்துள்ளன. இரும்பு & எஃகு, சர்க்கரை தொழிலகங்கள்.

2.**ஆற்றல் வளம்:** எரிசக்தி, மின்சக்தியை பூர்த்தி செய்யும் பொருட்டு மேற்கண்ட ஏதேனும் ஒரு வளம்அமைந்துள்ள இடங்களுக்கு அருகாமையில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகிறது.

3. **மனித சக்தி** : தொழிலாளர் சார்ந்த தொழில்களுக்கு மலிவான மற்றும் திறமையான தொழிலாளர்கள் அவசியமாகும். எடுத்துக்காட்டு தேயிலை தொழிற்சாலை .

4. **போக்குவரத்து:** எளிதான போக்குவரத்து தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.


5. **சேமிப்பு மற்றும் கிடங்கு** : உற்பத்தியின் முடிவில் முடிவுற்ற பொருள்கள் சந்தைக்கு எடுத்துச் செல்லும் வரை பொருத்தமான கிடங்குகளில் சேமித்து வைக்க வேண்டும்.

6. **நிலத்தோற்றம்** : ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சமமானதாக இருக்க வேண்டும்.

**7. கால நிலை** : தொழிற்சாலை வளர்ச்சிக்கு தீவிர காலநிலை பொருத்தமானது அல்ல. ஒவ்வொரு தொழிலகங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலநிலை தேவைப்படுகிறது.

**8. நீர்வளம்** : ஆறுகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகளுக்கு அருகே பல தொழிலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**3. தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விளக்குக.**




## கண்டங்களை ஆராய்தல்
### ( ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா )

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை

அ) கேப்பிளாங்கா ஆ) அகுல்காஸ் முனை **இ) நன்னம்பிக்கை முனை** ஈ) கேப்டவுன்

2. எகிப்திற்கும் சினாய் தீபகற்பத்திற்கும் இடையில் ஒரு நிலச்சந்தி வழியாக உருவாக்கப்பட்ட செயற்கை கால்வாய்

அ) பனாமா கால்வாய் ஆ) அஸ்வான் கால்வாய்
**இ) சூயஸ் கால்வாய்** ஈ) ஆல்பர்ட் கால்வாய்

3. மத்திய தரைக்கடல் காலநிலையோடு தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொண்டு சரியான விடையை தேர்வு செய்க.

(i) சராசரி மழையளவு 15 சென்டிமீட்டர்.

(ii). கோடைகாலம் வெப்பமாகவும் வறண்டதாகவும் குளிர்காலம் மழையுடனும் இருக்கும்.

(iii) குளிர்காலம் குளிர்ச்சியாகவும், வறண்டும், கோடை வெப்பமாகவும், ஈரப்பத்துடனும் இருக்கும்.
(iv) சிட்ரஸ் வகை பழங்கள் வளர்க்கப்படுகின்றன.
அ) i சரியானது **ஆ) ii மற்றும் iv சரியானவை**
இ) iii மற்றும் iv சரியானவை ஈ) அனைத்தும் சரியானவை

4. ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளை பிரிக்கும் மலைத்தொடர்
**அ) பெரிய பிரிப்பு மலைத்தொடர்** ஆ) இமய மலைத்தொடர்
இ) பிளிண்டர்கள் மலைத்தொடர் ஈ) மெக்டோனெல் மலைத்தொடர்

5. கல்கூர்லி சுரங்கம் கனிமத்திற்கு புகழ்பெற்றது.
அ) வைரம் ஆ) பிளாட்டினம் இ) வெள்ளி **ஈ) தங்கம்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. அட்லஸ் மலை **ஆப்பிரிக்க** கண்டத்தில் அமைந்துள்ளது.
2. ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் **கிளிமஞ்சாரோ** ஆகும்.
3. ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் மரம் **யூக்கலிப்டஸ்**
4. ஆஸ்திரேலியாவில் உள்ள மிதவெப்ப மண்டல புல்வெளிகள் **நல்லார்பார் சமவெளி** என அழைக்கப்படுகின்றன.
5. அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் **தட்சின் கங்கோத்ரி**

**III. பொருத்துக**

1. பின்னாக்கள் - புவியிடைக் கோட்டுக்காடுகள்
2. கிரில் - உப்பு ஏரி
3. நெருப்புக்கோழி - சிறிய செம்மீன்
4. ஐரி ஏரி - பறக்க இயலாத பறவை
5. புவியின் அணிகலன் - சுண்ணாம்பு பாறை தூண்கள்

**விடை:** **1. சுண்ணாம்பு பாறை தூண்கள் 2. சிறிய செம்மீன் 3. பறக்க இயலாத பறவை 4. உப்பு ஏரி 5. புவியிடைக் கோட்டுக்காடுகள்**

**IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

1. **கூற்று:** அரோரா என்பது வானத்தில் தோன்றும் வண்ண ஒளிகள் ஆகும்.
**காரணம்:** அவை வளிமண்டலத்தின் மேலடுக்கு காந்த புயலால் ஏற்படுகின்றன.
**அ) கூற்று மற்றும் காரணம் உண்மை, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.**
ஆ) கூற்று மற்றும் காரணம் உண்மை, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம் அல்ல .
இ) கூற்று உண்மை ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம் உண்மை ஆனால் கூற்று தவறு.

2. **கூற்று:** ஆப்பிரிக்காவின் நிலவியல் தோற்றங்களில் ஒரு முக்கிய அம்சம் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஆகும்.
**காரணம்:** புவியின் உள்விசை காரணமாக புவியின் மேற்பரப்பில் உண்டான பிளவு.
**அ) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுகான காரணம் சரியான விளக்கம்.**
ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் கூற்றுகான காரணம் சரியான விளக்கம் அல்ல .
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு. ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

**V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**1. ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?**

❖ புவியில் மனித இனங்கள் வாழ்ந்த பழமையான கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது '**தாய் கண்டம்**' எனப் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

**2. ஆப்பிரிக்காவின் முக்கியமான ஆறுகள் யாவை?**

- நைல் நதி, காங்கோ ஆறு, நைஜர் ஆறு, சாம்பசி ஆறு, லிம்போபோ, ஆரஞ்சு ஆறு.

**3. ஆஸ்திரேலியாவின் நிலத்தோற்ற பிரிவுகள் யாவை?**

- மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி
- மத்திய தாழ் நிலங்கள்
- கிழக்கு உயர் நிலங்கள்

**4. அண்டார்டிகா கண்டத்தின் தன்மை குறித்து எழுதவும்.**

- அண்டார்டிகா ஒரு தனித்துவம் வாய்ந்த கண்டமாகும்.
- இது தென்கோடியில் அமைந்துள்ள உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாகவும், இது துருவப்பகுதியில் அமைந்துள்ளதால், இப்பகுதி நிரந்தர பனியுடன் மிக குளிர்ந்த பிரதேசமாக உள்ளது.

**5. ஆஸ்திரேலியாவின் பொருளாதார நடவடிக்கைகள் ஏதேனும் நான்கினை குறிப்பிடுக.**

- வேளாண்மை, வளம் சார்ந்த தொழில்கள், மீன்பிடித்தல், உற்பத்தி தொழிலகங்கள், வணிகம் மற்றும் சேவைப்பிரிவு ஆஸ்திரேலியாவின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும்.

**VI. வேறுபடுத்துக.**

**1. சாஹேல் மற்றும் சகாரா**

| | சாஹேல் | சகாரா |
|---|---|---|
| 1 | இது வடக்கில் அமைந்துள்ள சஹாரா பாலைவனத்திற்கும் தெற்கில் உள்ள சவானா புல்வெளிக்கும் இடையில் அமைந்துள்ளது. | ஆப்பிரிக்காவின் வட பகுதியில் அமைந்துள்ளது. |
| 2 | சாஹேல் என்பது ஒரு அரை வறண்ட, வெப்ப மண்டல சவானா(புல்வெளி) பகுதியாகும். | இது உலகின் மிகப்பெரிய வெப்ப மண்டல பாலைவனமாகும். |

**2. மேற்கு அண்டார்டிகா மற்றும் கிழக்கு அண்டார்டிகா**

| | மேற்கு அண்டார்டிகா | கிழக்கு அண்டார்டிகா |
|---|---|---|
| 1 | மேற்கு அண்டார்டகா பகுதி பசிபிக் பெருங்கடலை நோக்கி அமைந்துள்ளது. | அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களை நோக்கி அமைந்துள்ளது. |
| 2 | தென் அமெரிக்காவை நோக்கியுள்ள அண்டார்டிக் தீபகற்பம் ஆண்டிஸ் மலைத்தொடரின் நீட்சி ஆகும். | இப்பகுதியின் ரோஸ் தீவில் அமைந்துள்ள மவுண்ட் எரிபஸ் ஒரு செயல்படும் எரிமலை ஆகும். |

**3. பெரிய பவளத் திட்டு மற்றும் ஆர்டீசியன் வடிநிலம்.**

| | பெரிய பவளத் திட்டு | ஆர்டீசியன் வடிநிலம் |
|---|---|---|
| 1 | பசிபிக் பெருங்கடல் பகுதியில் குயின்ஸ்லாந்தின் கிழக்கு கடற்கரையை ஒட்டிய வடகிழக்கு பகுதியில் உள்ளது. | ஆர்டீசியன் வடிநிலப்பகுதி, பெரும்பிரிப்பு மலைத்தொடருக்கு மேற்கே அமைந்துள்ளது. |
| 2 | இது சிறிய பவள நுண்ணுயிரிகளால் உருவானது. | இது உலகின் மிகப்பெரிய மற்றும் ஆழமான படுகையாகும். |

**VII. காரணம் கூறு.**

**1. எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது ஏன்?**

- நைல் நதி எகிப்தின் வாழ்வாதாரமாக விளங்குவதால் இந்நதி "**எகிப்தின் நன்கொடை** " என அழைக்கப்படுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**2. வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் அமைந்துள்ளன.**

- ❖ இப்பாலைவனங்கள் வியாபாரக் காற்று வீசும் மண்டலத்தில் அமைந்துள்ளன.
- ❖ இக்காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப் பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும்பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாகவும் வீசுகின்றது.
- ❖ எனவே கண்டங்களின் மேற்கு பகுதிகள் பாலைவனங்களாக உள்ளன.

**3. அண்டார்டிகா ஆராய்ச்சியாளர்களின் கண்டம் என அழைக்கப்படுகிறது.**

- ❖ உலகின் எந்த ஒரு நாட்டின் மக்களும் அண்டார்டிகாவில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், தரவுகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.
- ❖ எனவே இக்கண்டம் '**ஆராய்ச்சியாளர்களின் கண்டம்**' என அழைக்கப்படுகிறது.

**VIII. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. ஆஸ்திரேலியாவின் கனிம வளங்கள் குறித்து விரிவாக எழுதவும்.**

- ❖ கனிமங்கள் ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.
- ❖ இவை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 10 சதவீத பங்களிப்பை அளிக்கின்றன.
- ❖ பாக்சைட் , லைமோனைட் , ரூட்டில் மற்றும் சிர்கான் உற்பத்தியில் ஆஸ்திரேலியா உலகின் முன்னணி உற்பத்தியாளராகவும்,
- ❖ தங்கம், ஈயம், லித்தியம், மாங்கனீசு தாது மற்றும் துத்தநாகம் உற்பத்தியில் இரண்டாவது முன்னணி உற்பத்தியாளராகவும்,
- ❖ இரும்புத்தாது மற்றும் யுரேனியம் உற்பத்தியில் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராகவும், நிலக்கரி உற்பத்தியில் நான்காவது பெரிய உற்பத்தியாளராகவும் இந்நாடு திகழ்கிறது.

**2. அண்டார்டிகா கண்டத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றி விவரி?**

- ❖ இக்கண்டத்தில் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் உறை நிலைக்கு கீழே இருப்பதால் பெரிய தாவரங்கள் எதுவும் காணப்படவில்லை.
- ❖ சிறிய வகை தாவரங்களான பாசிகள், மரப் பாசிகள், படர் பாசிச்செடிகள், நுரைப்பாசிகள், நுண்ணிய பூஞ்சைகள் போன்றவைகள் பனியை தாங்கி வளர்கின்றன.
- ❖ சிறியவகை செம்மீன்களான கிரில்கள் பெரிய திரளாக காணப்படுகின்றன.
- ❖ நீலத்திமிங்கலம், கடற்பசு போன்ற விலங்கினங்களும் பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்குவா மற்றும் ஸ்டவுட் போன்ற பறவைகளும் காணப்படுகின்றன.

**3. ஆப்பிரிக்காவின் இயற்கைப் பிரிவுகளை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்கவும்.**

ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பை 8 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. சகாரா 2. சாஹேல் 3. சவானா 4. பெரிய பிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள் 5. கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் 6. சுவாலி கடற்கரை 7. காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம் 8. தென் ஆப்பிரிக்கா

**1. சகாரா (Sahara)**


- ❖ ஆப்பிரிக்காவின் வட பகுதியில் உலகப் புகழ்ப்பெற்ற சகாரா பாலைவனம் அமைந்துள்ளது.
- ❖ இது உலகின் மிகப்பெரிய வெப்ப மண்டல பாலைவனமாகும்.
- ❖ இது 9.2 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது.
- ❖ சகாராவின் மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடலும், கிழக்கில் செங்கடலும், வடக்கில் மத்திய தரைக்கடலும் தெற்கில் சாஹேல் ஆகியன இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593


❖ இப்பாலைவனம் அல்ஜீரியா, சாட் , எகிப்து, லிபியா, மாலி, மோரிடானியா, மொராக்கோ, நைஜர், மேற்கு சஹாரா , சூடான் மற்றும் துனிசியா ஆகிய 11 நாடுகளில் பரவியுள்ளது.

**IX. வரைபடப் பயிற்சி. ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவின் புறஎல்லை வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்**

**ஆப்பிரிக்கா:** புவிநடுக்கோடு, அட்லஸ் மலை, சஹாரா , கிழக்கு உயர் நிலங்கள், மத்திய தரைக்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், சூயஸ் கால்வாய் , கிளிமஞ்சாரோ சிகரம்,



**ஆஸ்திரேலியா:** பெரிய பிரிவு மலைத்தொடர், பெரிய பவளத் திட்டு, பிளவுப் பள்ளத்தாக்கு, டாஸ்மேனியா, மகரரேகை , பசிபிக் பெருங்கடல், பெரிய ஆஸ்திரேலிய மணல் பாலைவனம், இந்தியப் பெருங்கடல், சிட்னி, கான்பெரா .




## புவிப்படங்களை கற்றறிதல்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. புவிப்பட தயாரிப்பு முறை குறித்து கையாளும் பாடப்பிரிவு ..........................ஆகும்.
   அ) மக்களியல் **ஆ) புவிப்படவியல்** இ) இயற்கையமைப்பு ஈ) இடவியல்

2. ஒரு பகுதியின் இயற்கையம்சங்களைக் காட்டும் புவிப்படம்.....................
   அ) நிலக்கனிய புவிப்படம் **ஆ) நிலத்தோற்ற புவிப்படம்**
   இ) காலநிலையியல் புவிப்படம் ஈ) மூலாதார புவிப்படம்

3. ஆழம் குறைந்த நீர்ப்பகுதிகள் .........................வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.
   அ) மஞ்சள் ஆ) பழுப்பு **இ) வெளிர் நீலம்** ஈ) அடர் நீலம்

4. பிளான்கள் என்று அழைக்கப்படும் புவிப்படங்கள் ......................ஆகும்.
   **அ) நிலக்கானி புவிப்படங்கள்** ஆ) தலப்படங்கள்
   இ) சம அளவுக்கோட்டுப் படங்கள் ஈ) போக்குவரத்துப் படங்கள்

5. மக்கட்தொகை பரவலை ......................மூலம் காண்பிக்கலாம்.
   அ) கோடுகள் ஆ) வண்ணங்கள் **இ) புள்ளிகள்** ஈ) சம அளவுக்கோடுகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. புவிக் கோள மாதிரி என்பது **புவியின்** உண்மையான உருவ மாதிரியாக்கமாகும்.
2. புவியின் கோள வடிவத்தை ஒரு சமதளப்பரப்பில் வரையப்படும் முறை **புவிப்படம்** எனப்படும்.
3. சம அளவு உயரமுள்ள இடங்களை இணைக்கும் கோடு **ஐசோலைன் (சம அளவுக்கோடுகள்)**
4. காணிப்படங்கள் பொதுவாக **அரசாங்கத்தால்** பராமரிக்கப்படுகின்றன.
5. **கருத்துப்** புவிப்படங்கள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| அ. புவிப்பட விளக்கம் | - 1. 45° |
| ஆ. வடகிழக்கு | - 2. பழுப்பு நிறம் |
| இ. சம உயரக்கோடு | - 3. கருத்துப்படங்கள் |
| ஈ. காணிப்படங்கள் | - 4. புவிப்படத்தின் திறவுகோல் |
| உ. நிழற்பட்டைப் படம் | - 5. வரி விதிப்பு |

அ) 3,5,1,4,2 **ஆ) 4,1,2,5,3** இ) 2,5,1,3,4 ஈ) 5,2,4,1,3

**IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

1. **கூற்று**: சிறிய அளவை புவிப்படங்களில் பிரதான தோற்றங்களை மட்டுமே காண்பிக்கப்படுகின்றன.

**காரணம்**: குறைந்த அளவு இடமே உள்ளதால், பெரிய பரப்பிலான கண்டங்கள் மற்றும் நாடுகள் போன்றவற்றை மட்டுமே காண்பிக்க இயலும்.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
**இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி** ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

2. **கூற்று**: மரபுக் குறியீடுகளும், சின்னங்களும் வரைபடத்தின் திறவுகோல் ஆகும்.

**காரணம்**: இவை குறைந்த அளவிலான படத்தில் அதிக விவரங்களைத் தருகின்றன.

**அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி** ஆ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**1. "புவிப்பட அளவை" - வரையறு.**

❖ புவிப்பட அளவை என்பது புவிப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் இடையிலான விகிதத்தை குறிப்பதாகும்.

**2. இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?**

❖ ஒரு பகுதியின் பல்வேறு இயற்கை அம்சங்களை காண்பிப்பதற்கு வரையப்படும் படங்கள் இயற்கையமைப்பு அல்லது நிலத்தோற்ற புவிப்படங்கள் எனப்படுகின்றன.

**3. வரைபடக் கோட்டுச் சட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக**

❖ கோள வடிவமான புவியை ஒரு சமதளப் பரப்பில் வரைவதற்கு பின்பற்றப்படும் ஒரு நுணுக்க முறையே வரைபட கோட்டுச் சட்டமாகும்.

**4. இடைநிலைத் திசைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

❖ வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு.

**5. காணிப் புவிப்படங்களின் பயன்கள் யாவை?**

❖ உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, வரிவிதிப்பு, பெரும் பண்ணை , பராமரிப்பு, சட்ட ஆவணங்களில் சொத்து விவரங்களை குறிப்பிடுதல் போன்றவற்றிற்கு பயன்படுகின்றன.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

VI. **வேறுபடுத்துக.**

1. **நிலத்தோற்றப் படங்கள் மற்றும் கருத்துப்படங்கள்**

| | நிலத்தோற்றப் படங்கள் | கருத்துப்படங்கள் |
|---|---|---|
| 1 | ஒரு பகுதியின் பல்வேறு இயற்கை அம்ங்களை காண்பிப்பதற்கு வரையப்படும் படங்கள் | வெப்பநிலை வேறுபாடுகள், மழைப்பரவல், மக்களடர்த்தி போன்ற ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்காகத் தயாரிக்கப்படுபவை |
| 2 | இயற்கையமைப்புகளான பாலைவனங்கள், ஆறுகள், மலைகள், சமவெளிகள் மற்றும் பீடபூமிகள் ஆகியவற்றை குறிப்பிடுவது இதன் முதன்மையான நோக்கமாகும். | உலகளாவிய மக்களடர்த்தி, நோய்த்தாக்கம் போன்றவற்றின் பிரதேச வேறுபாடுகளை காண்பிக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. |

2. **பெரிய அளவை மற்றும் சிறிய அளவை புவிப்படங்கள்**

| | பெரிய அளவை புவிப்படங்கள் | சிறிய அளவை புவிப்படங்கள் |
|---|---|---|
| 1 | சிறிய பகுதிகளான வட்டம் அல்லது மாவட்டம் போன்றவற்றை காண்பிக்க பயன்படுத்தப்படுகின்றன. | கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய நிலப்பகுதிகளைக் காண்பிக்கச் பயன்படுத்தப்படுகின்றன. |
| 2 | அதிக பரப்பில் குறைவான விவரங்களை தருகிறது. | குறைவான பரப்பில் அதிக விவரங்களை தருகிறது. |

3. **புவிக் கோள மாதிரி மற்றும் புவிப்படம்**

| | புவிக் கோள மாதிரி | புவிப்படம் |
|---|---|---|
| 1 | புவிக்கோள மாதிரியானது புவியை முப்பரிமாணத்தில் சித்தரிக்கின்றது. | புவிப்படங்கள் புவியின் இருபரிமாண சித்தரிப்பாகும். |
| 2 | இது புவியின் வடிவிலான ஒரு சிறிய தோற்றமாகும். | முழு புவியையோ அல்லது ஒரு பகுதியையோ சமதளப் பரப்பில் அளவையுடன் பதிலீட்டுக் காட்டும் ஒரு முறை ஆகும். |

VII. **பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

1. **பல்வேறு புவிப்பட அளவைகளை விரிவாக விளக்குக.**

**புவிப்படங்களில் அளவைகள் மூன்று வகைகளில் குறிப்பிடப்படுகின்றன. அவை**

1. **வாக்கிய முறை அல்லது சொல்லளவை**
   - இம்முறையில் அளவுத்திட்டமானது சொற்களால் விவரிக்கப்படுகிறது.
   - 1 செ .மீ என்பது 1 கி.மீ. அதாவது வரைபடத்தில் 1 செ.மீ என்பது நிலப்பகுதியில் 1 கி.மீ. தூரத்தைக் குறிக்கின்றது.
2. **பிரதிபின்ன முறை (அ) எண்சார் பின்ன முறை (அ) விகிதாச்சார முறை**
   - இம்முறையில் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவும் புவிப்பரப்பில் உள்ள தொலைவும் ஒரே அளவில் குறிப்பிடப்படுகிறது.
   - உதாரணமாக 1: 50,000 என்பது புவிப்படத்தில் 1 அலகு என்பது புவியில் 50,000 அலகுகளைக் குறிக்கின்றது.
3. **வரை கலை அளவை அல்லது நேரியல் அளவை**
   - இந்த அளவை ஒரு சிறிய வரைக்கோல் போன்று வரைபடத்தின் அடிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கோடு மேலும் சிறிய அளவிலான பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.
   - இதன் ஒவ்வொரு சிறு பகுதியும் நிலப்பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்ட தூரத்தை குறிப்பதாக அமைந்துள்ளது.
   - இவ்வளவைகள் மாறாதவை என்பதால் புவிப்பட நகல்கள் எடுத்துக் கொள்ள ஏதுவாக உள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

2. **காணிப் புவிப்படங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விவரி**

- ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க காணிப் புவிப்படங்கள் பயன்படுகின்றன.
- இவ்வகைப்படங்கள் திட்ட புவிப்படங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- இவை பெரிய அளவையைக் கொண்டுள்ளதால் குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் கட்டடங்களின் முழு விவரங்களையும் அளிக்கின்றன.

**காணிப்புவிப்படத்தின் முக்கியத்துவம்**

- காணிப்புவிப்படங்கள், ஒரு நிலத்தின் நில உடமை , எல்லைகள், மாதிரிப் படங்கள், கட்டடத்திட்டப் படங்கள், விளக்கப் படங்கள் ஆகியவை மூலம் ஆவணங்களாக பதிவு செய்கின்றன.
- தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தின் மதிப்பினை அறிந்துகொள்ளவும், வரிவிதிப்பிற்கும் இவ்வகை புவிப்படங்கள், பயன்ப்படுத்தப்பட்டன.

3. **மரபுக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக**

- புவிப்படத்தில் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிடப்படுவதற்கு புவிப்படக் குறியீடு மற்றும் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- இச்சின்னங்கள் புவிப்பட திறவு விசை பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.
- ஒரு சிறிய பகுதியில் அதிக தகவல்களை இக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் அளிக்கின்றன. இதன் மூலம் புவிப்பட கருத்துக்களையும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.
- சில குறியீடுகள் மற்றும் சின்னங்களை பயன்படுத்த சர்வதேச ஒப்பந்தம் அல்லது நடைமுறை பின்பற்றப்படுகிறது. இவை மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் எனப்படுகின்றன.

## குடிமையியல்

## அலகு - 1 மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது?

**I சரியான விடையை தேர்வு செய்க**

1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
   **அ) குடியரசுத் தலைவர்** ஆ) துணைக் குடியரசுத் தலைவர்
   இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர்

2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்
   அ) ஆளுநர் **ஆ) முதலமைச்சர்** இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்

3. மாநில சட்ட மன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்
   அ) உள்துறை அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர் இ) சபாநாயகர் **ஈ) ஆளுநர்**

4. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?
   அ) ஆளுநர் **ஆ) முதலமைச்சர்**
   இ) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஈ) குடியரசுத் தலைவர்

5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது
   **அ) 62** ஆ) 64 இ) 65 ஈ) 58

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை 28 ஆகும்.
2. ஆளுநரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
3. மாவட்ட நீதிபதிகள் ஆளுநர் ஆல் நியமிக்கப்படுகின்றனர்.

4. ஆளுநர் ஒரு மாநிலத்தின் **பெயரளவு தலைமை நிர்வாகி** ஆவார்.
5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக **25** வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

**III. பொருத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆளுநர் | - | அ. | கீழவை |
| 2. | முதலமைச்சர் | - | ஆ. | பெயரளவுத் தலைவர் |
| 3. | சட்ட மன்ற பேரவை | - | இ. | மேலவை |
| 4. | சட்ட மன்ற மேலவை | - | ஈ. | உண்மையான தலைவர் |

**விடைகள் : 1 - ஆ, 2 - ஈ, 3 - அ, 4 - இ**

**IV. சரியா / தவறா?**

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். **- சரி**
2. ஆளுநர் சட்டமன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.- **தவறு**
3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. **- சரி**

**V சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

1. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.

i. குடியரசுத் தலைவர்
ii. துணை குடியரசுத் தலைவர்
iii. ராஜ்ய சபை உறுப்பினர்கள்
iv. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்

அ) i, ii & iii சரி ஆ) i மற்றும் iii சரி **இ) I,iii மற்றும் iv சரி** ஈ) I,ii,iii மற்றும் iv சரி

**VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.**

- மேலவை - சட்டமன்ற மேலவை
- கீழவை - சட்டமன்ற பேரவை

**2. மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை ?**

- இந்திய குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

**3. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?**

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார்.

**4. மாநில அமைச்சரவை குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது?**

- முதலமைச்சர் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சர்களை தேர்வு செய்கிறார்.
- முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் அல்லது அமைச்சரவை குழு எனப்படுகிறது.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.**

**1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?**

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
- மாநில முதலமைச்சர் , அமைச்சரவையை , உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

- ❖ பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார். மேலும் அவர் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- ❖ முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- ❖ மாநில அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.
- ❖ மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளை நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

**2. மாநில சட்டமன்றத்தின் பணிகளை விவரி?**

- ❖ மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்ட மன்றத்தின் முக்கிய பணி ஆகும்.
- ❖ மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது.
- ❖ சட்ட மன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ , அதிகரிக்கவோ,குறைக்கவோ , விலகிக் கொள்ளவோ இயலாது.
- ❖ அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது.

**3. உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் எழுது?**

- ❖ அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் பல்வேறு வகையான நீதிப்பேராணைகளை பிறப்பிக்கிறது.
- ❖ ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார் நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- ❖ உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.

## அலகு - 2 குடிமக்களும் குடியுரிமையும்

**I. சரியான விடையை தேர்வு செய்க**

1. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

அ) பிறப்பின் மூலம் **ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்**
இ) வம்சா வழியின் மூலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

2. அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?

அ) பகுதி II **ஆ) பகுதி II பிரிவு 5 - 11**
இ) பகுதி II பிரிவு 5 - 11 ஈ) பகுதி I பிரிவு 5 - 11

3. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

அ) பிரதமர் **ஆ) குடியரசுத் தலைவர்** இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. ஒரு நாட்டின் **குடிமக்கள்** அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் **ஒற்றைக்** குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.

3. இந்தியக் கடவுச் சீட்டினைப் பெற்று (Passport) வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் **வெளிநாடுவாழ் இந்தியர்** என அழைக்கப்படுகிறார்.

4. மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும் **சலுகைகளையும்** இயற்கையாக பெற்றிருக்கின்றனர் .


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

5. உலகளாவிய குடியுரிமை என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும்.

**III. சரியா ? தவறா ? குறிப்பிடுக**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. - **தவறு**
2. வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு வாக்குரிமை உண்டு. - **தவறு**
3. அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது. - **சரி**
4. நாட்டுரிமையை மாற்ற இயலும். ஆனால் குடியுரிமையை மாற்ற இயலாது. - **தவறு**

**IV. கீழ்க்கண்ட கூற்றுகளில் பொருத்தமான விடைகளை தேர்வு செய்க**

1. ஒரு இந்தியக் குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது.

i) ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமையை பெறும் போது
ii) பதிவு செய்வதன் மூலம்
iii) தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும் போது
iv) போரின் போது எதிரி நாட்டிடம் இந்திய குடிமகன் வணிகம் செய்யும் போது

அ. I மற்றும் II சரி **ஆ. I மற்றும் III சரி** இ. I, II, IV சரி ஈ. I, II, III சரி

2. **கூற்று:** 1962 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர் .

**காரணம்:** 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாகினர்

**அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்** ஆ. காரணம் தவறு
இ. கூற்று தவறு ஆனால் காரணம் சரி ஈ. காரணம், கூற்று இரண்டும் தவறு

**V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி**

**1. குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.**

- இயற்கை குடியுரிமை : பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை
- இயல்புக் குடியுரிமை ; இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை

**2. ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை ?**

- அடிப்படை உரிமைகள்
- மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை
- இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை . இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் உறுப்பினராவதற்கான உரிமை .

**3. நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக**

- அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடத்தல்.
- சமுதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல் மற்றும் குடிமைப் பணியை செயலாற்றுதல்.
- நற்பண்புகளையும், நீதியையும் நிலை நாட்டுதல்
- வேற்றுமைகளை மறந்து நடத்தல்

**4. இந்தியக் குடிமகனாவதற்குரிய ஐந்து வழிமுறைகளை எழுதுக?**

1. பிறப்பால் குடியுரிமை பெறுதல் 2. வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்
3. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல் 4. இயல்புக் குடியுரிமை
5.பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

**5. 1955 ஆம் ஆண்டு இந்திய குடியுரிமைச் சட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?**

- இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955 - இந்தியக் குடிமகன் தன்னுடைய குடியுரிமையை பெறுதலையும், நீக்குதலையும் பற்றிய விதிகளை கூறுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**VI. கீழ்க்கண்டவைகளுக்கு விடையளி**

**1. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?**

**அ.குடியுரிமையை துறத்தல் (தானாக முன்வந்து குடியுரிமையைத் துறத்தல்)**

❖ ஒருவர் வெளி நாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.

**ஆ.குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடை பெறுதல்)**

❖ ஒர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.

**இ.குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்)**

❖ மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெ றும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.

# சமயச் சார்பின்மையை புரிந்துகொள்ளுதல்

**I சரியான விடையை தேர்வு செய்க**

1. சமயச்சார்பின்மை என்பது

அ) அரசு அனைத்து சமயத்திற்கும் எதிரானது

ஆ) அரசு ஒரே ஒரு சமயத்தை மட்டும் ஏற்றுக் கொள்கிறது

**இ) எந்த சமயத்தைச் சார்ந்த குடிமகனும் சகிப்புத்தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்**

ஈ) இவற்றுள் எதுவுமில்லை

2. இந்தியா ஒரு __________ கொண்ட நாடாகும்.

அ) பல்வேறு சமயநம்பிக்கை ஆ) பல்வேறு பண்பாட்டு நம்பிக்கை

**இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்** ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு

அ) 1951 **ஆ) 1976** இ) 1974 ஈ) 1967

4. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

அ) அடிப்படை உரிமைகள் ஆ) அடிப்படை கடமைகள்

இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் **ஈ) அரசியலமைப்பின் முகவுரை**

5. சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொடர்புடையது

அ) நீதித்துறை ஆ) பாராளுமன்றம்

இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை **ஈ) அடிப்படை உரிமைகள்**

6. அரசியலமைப்பின் பிரிவு 28 எந்த வகையான கல்வியை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் தடை செய்துள்ளது?

**அ) சமய போதனைகள்** ஆ) நீதி நெறிக்கல்வி

இ) உடற்கல்வி ஈ) இவற்றுள் எதுவுமில்லை

7. ஒரு நாடு சமயச்சார்பற்ற நாடாக எப்போது கருதப்படும் எனில் அது

அ) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தால்

ஆ) அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் சமய போதனைகளை தடை செய்தால்

**இ) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்**

ஈ) எந்த சமய நம்பிக்கைகளையும் பரப்ப தடை விதித்தால்


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
www.Padasalai.Net

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சமயம் நமக்கு **பகைமையை** போதிக்கவில்லை.
2. சமயச்சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி. அது **சம உரிமையை** அளிக்கிறது.
3. **நாத்திகம்** என்பது கடவுள் மற்றும் கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருப்பதாகும்.
4. நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் **தேசிய ஒற்றுமை** மற்றும் **ஒருமைப்பாட்டை** ஊக்குவிப்பதாகும்.
5. பிரிவு 15 சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் **பாகுபாடு** காட்டுவதை தடை செய்கிறது.

**III. பொருத்துக.**

1. நாத்திகம் - Secularism என்ற பதத்தை உருவாக்கியவர்
2. குழந்தைகள் - சமூகச் சீர்திருத்தவாதி
3. தீன் - இலாஹி - கடவுள் நம்பிக்கையற்றிருப்பது
4. அரசியலமைப்பு - வருங்கால குடிமக்கள்
5. ஹோல் யோக் - தெய்வீக நம்பிக்கை
6. இராஜாராம் மோகன்ராய் - 1950

**விடைகள்: 1. கடவுள் நம்பிக்கையற்றிருப்பது 2. வருங்கால குடிமக்கள் 3. தெய்வீக நம்பிக்கை 4. 1950 5. Secularism என்ற பதத்தை உருவாக்கியவர் 6. சமூகச் சீர்திருத்தவாதி**

**IV. சரியா / தவறா?**

1. இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது. **தவறு**
2. சமயச்சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளது. **தவறு**
3. மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத்தன்மைக் கொள்கையை பின்பற்றினார். **சரி**
4. சமண சமயம் சீனாவில் தோன்றியது. **தவறு**
5. இந்திய அரசாங்கம் அனைத்து சமய விழாக்களுக்கும் விடுமுறையை அறிவிக்கிறது. **சரி**

**V சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

(i) இந்தியா போன்ற சமயப் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு சமயச்சார்பின்மை விலை மதிப்பற்ற ஒன்றாகும்.
(ii) சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.
(iii) அரசியலமைப்பு பிரிவு 26 ஒரு குறிப்பிட்ட சமயத்திற்காக வரி செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறது.
(iv) அக்பரின் கல்லறை ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கந்தராவில் உள்ள து.

அ) i, ii மட்டும் ஆ) ii, iii மட்டும் இ) iv மட்டும் **ஈ) i, ii, iv மட்டும்**

2. **கூற்று** : ஒரு வெளிநாட்டவர் இந்தியாவில் தனது சமயத்தைப் பின்பற்றலாம்.
**கார ண ம்** : அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டவருக்கும் உண்டு.

(i) கூற்று சரி காரணம் தவறு.
**(ii) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**
(iii) கூற்று தவறு, காரணம் சரி
(iv) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

3. **கூற்று** : இந்தியாவில் சமயச்சார்பின்மை என்ற கொள்கை மிக்க மதிப்புள்ளதாகும்
**காரணம்** : இந்தியா பல்வேறு சமயம் மற்றும் பன்முக கலாச்சாரம் கொண்ட நாடாகும்.

**(i) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ii) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
(iii) கூற்று தவறு, காரணம் சரி
(iv) இரண்டும் தவறு

**4. தவறான இணையைத் தேர்க**

(i) **தீன் இலாகி - ஒரு புத்தகம்**
(ii) கஜுராஹோ - இந்து கோவில்
(iii) அசோகர் - பாறைக் கல்வெட்டு
(iv) இக்பால் - கவிஞர்

**VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. சமயச்சார்பின்மையை பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக.**

❖ இராஜாராம் மோகன்ராய், சர் சையது அகமதுகான், இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி மற்றும் B.R. அம்பேத்கர்

**2. சமயச்சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது?**

❖ சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும்.

**3. சமயச்சார்பின்மையின் நோக்கங்களைக் கூறுக**

❖ ஒரு சமயக் குழு மற்றொரு சமயக் குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
❖ ஒரு சமயத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
❖ அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது அல்லது தனி நபர்களின் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது,

**4. அரசிடமிருந்து சமயத்தை பிரிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்?**

❖ இந்தியா பல்வேறு சமயங்களை பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடாகும்.
❖ எனவே அனைத்து சமயங்களுடனும் சகிப்புத் தன்மையுடன் இருப்பது அவசியமாகும்.
❖ ஆகவே அரசிடமிருந்து சமயத்தை பிரிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

**5. சமயச்சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக் கூறுகள் யாவை ?**

❖ **சுதந்திர கோட்பாடு** - எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.
❖ **சமத்துவக் கோட்பாடு** - அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.
❖ **நடுநிலைமைக் கோட்பாடு** - சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்.

**6. சமயச்சார்பின்மை தொடர்பான இந்திய அரசியலமைப்பு பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிடுக**

❖ **பிரிவு** 15 : சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடுத்துவதை தடை செய்கிறது.
❖ **பிரிவு** 16 : பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.
❖ **பிரிவு** 25 (1) : எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.**

**1. சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?**

❖ குறுகிய மனப்பான்மையை போக்குவதற்கும், சக்திவாய்ந்த ஆற்றல் மற்றும் அறிவான நோக்கத்தினை உருவாக்குவதற்கும்
❖ இளைஞர்களை நல்ல குடிமக்களாக்க பயிற்சியளிப்பதற்கும்
❖ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் கூட்டுறவு வாழ்க்கை போன்ற மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துவதற்கும்

- ❖ பிறரை பாராட்டுதல் மற்றும் மற்றவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும்,
- ❖ அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு, சமத்துவம் மற்றும் இரக்க உணர்வை வளர்ப்பதற்கும்
- ❖ பொருள் முதல்வாத மற்றும் ஆன்மிக கொள்கையை ஒருங்கிணைக்கவும் தேவைப்படுகிறது.

**2. இந்தியா போன்ற நாட்டிற்கு சமயச்சார்பின்மை அவசியம் - நிரூபிக்கவும்**

- ❖ இந்தியா பல சமய மற்றும் கலாச்சார, பண்பாட்டு நம்பிக்கைகள் கொண்ட நாடாகும்.
- ❖ பல்வேறு சமயக் கோட்பாடுகளைக் கொண்டுள்ள மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பராமரிக்க நமக்கு சமயச்சார்பற்ற நாடு அவசியமாகும்.
- ❖ அது சம உரிமைகளையும் வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி ஆகும்.
- ❖ எனவே சமயச்சார்பின்மை இந்தியாவில் மக்களாட்சி வளர்ச்சிக்கான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**VIII. உயர் சிந்தனை வினா.**

**1. சில சமயக் குழுக்கள் தங்களது சமயம் நரபலியை அனுமதிக்கிறது என்று கூறினால் அரசாங்கம் அவர்கள் கொள்கையில் தலையிடுமா?**

ஆம். நரபலி என்பது ஒரு சமூகத் தீமை என்பதால் அரசாங்கம் அது சார்ந்த சமயக் கொள்கையில் தலையிடும்.

# மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

**I சரியான விடையை தேர்வு செய்க**

1. இரண்டாம் உலகப் போருக்குப் ................பின்னர் மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**அ) ஐ. நா. சபை** ஆ) உச்ச நீதிமன்றம்
இ) சர்வதேச நீதிமன்றம் ஈ) இவைகளில் எதுவுமில்லை

2. 1995ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் ................இல் கூடினர்.

**அ) பெய்ஜிங்** ஆ) நியூயார்க் இ) டெல்லி ஈ) இவைகளில் எதுவுமில்லை

3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு................

அ) 1990 **ஆ) 1993** இ) 1978 ஈ) 1979

4. ஐ.நா. சபை 1979ஆம் ஆண்டை ........................சர்வதேச ஆண்டாக அறிவித்தது.

அ) பெண் குழந்தைகள் **ஆ) குழந்தைகள்** இ) பெண்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

அ) டிசம்பர் 9 **ஆ) டிசம்பர் 10** இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

6. மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என அழைக்கப்படுவது எது?

**அ) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (UDHRC)**
ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC)
இ) மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) ஈ) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

7. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

அ) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி
**ஆ) ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி**
இ) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஏதேனும் ஒருவர்
ஈ) ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

8. உலக மனித உரிமைகள் அறிவிப்பில் உள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை யாவை ?
அ) 20 **ஆ) 30** இ) 40 ஈ) 50

9. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக் காலம் என்ன?
அ) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை ஆ) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை
இ) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை **ஈ) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை**

10. தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
**அ) புது டெல்லி** ஆ) மும்பை இ) அகமதாபாத் ஈ) கொல்கத்தா

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1 ஒவ்வொரு தனிமனிதனும் கண்ணியமான வாழ்க்கை வாழ **உரிமை** உண்டு.
2. மனித உரிமைகள் என்பது **அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான** உரிமைகள்.
3. மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட 1997 ஆண்டு.
4. இந்திய அரசியலமைப்பின் 24 வது சட்டப்பிரிவு **குழந்தை தொழிலாளர் முறையை** தடைசெய்கிறது.
5. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு **1945**

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. எலினார் ரூஸ்வெல்ட் | - உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம் |
| 2. சைரஸ் சிலிண்டர் | - 1997 |
| 3. பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் | - அடிமைத்தனத்திலிருந்து விடுதலை |
| 4. குழந்தை உதவி மைய எண் | - மனித உரிமைகளுக்கான ஆணையம் |
| 5. வாழ்வியல்உரிமைகள் | - வாக்களிக்கும் உரிமை |
| 6. அரசியல் உரிமை | - 1098 |

**விடை:** 1. மனித உரிமைகளுக்கான ஆணையம் 2. உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம் 3. 1997, 4. 1098, 5. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை 6. வாக்களிக்கும் உரிமை

**IV. சரியா / தவறா?**

1. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை. **தவறு**
2. மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது. **தவறு**
3. 1993ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக வழிவகுத்தது. **சரி**
4. பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது. **சரி**
5. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது. **சரி**

**V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

1. தவறான கூற்றை கண்டறியவும்
அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சட்டரீதியான அமைப்பாகும்.
**ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்**
இ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.
ஈ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டதாகும்.

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்து பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல .
அ) இது 1993 இல் நிறுவப்பட்டது.
ஆ) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியை தண்டிக்க ஆணையத்திற்கு எந்த உரிமையும் இல்லை .

**இ) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.**

ஈ) இந்த ஆணையம் தனது ஆண்டு அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது.

3. **கூற்று:** டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
**காரணம்:** இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.

**அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**
ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது
இ) கூற்று காரணம் இரண்டும் சரி
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

4. பின்வரும் கூற்றை ஆராய்க
1) மாநில மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர்களை கொண்ட அமைப்பு ஆகும்.
2) மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும்
மேற்கூறிய கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் **இ) 1, 2** ஈ) எதுவுமில்லை .

**VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. மனித உரிமைகள் என்றால் என்ன?**

❖ மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.

**2. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பின் (UDHR) முக்கியத்துவத்தை எழுதுக.**

❖ இந்த அறிவிப்பு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஐ.நா. பொதுச்சபையால் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் அறிவிக்கப்பட்டது.
❖ இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்றும் அழைக்கப்படுகிறது.

**3. இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப்பிரிவு எதனை அறிவுறுத்துகிறது?**

❖ பிரிவு 45 - 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது

**4. கல்வி உரிமைச் சட்டம் பற்றி எழுதுக.**

❖ 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கு சட்டப்பிரிவு 21A வாயிலாக கல்வி உரிமைச் சட்டம் வழிவகைச் செய்கிறது.

**5. பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்களைக் குறிப்பிடுக.**

❖ இந்து விதவை மறுமணச் சட்டம் - 1856, இந்து திருமணச் சட்டம் - 1955, வரதட்சணைத் தடைச் சட்டம் - 1961

**6. அரசியல் உரிமைகள் சிலவற்றை குறிப்பிடுக.**

❖ கருத்துச் சுதந்திரம், அமைதியாக கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை

**7. மனித உரிமைகளின் ஐந்து முதன்மைப் பிரிவுகளை குறிப்பிடுக.**

❖ வாழ்வியல் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள், சமூக உரிமைகள், கலாச்சார உரிமைகள்

VII. **கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.**

1. **மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வேறுபடுத்துக.**

| | மனித உரிமைகள் | வாழ்வியல் உரிமைகள் |
|---|---|---|
| 1 | தேசிய இனம், பாலினம், இன, மத, வயது மற்றும் இட வேறுபாடின்றி அனைவருக்கும் உரித்தானது. | குறிப்பிட்ட நாட்டில் அல்லது மாநிலத்தில் குடியுரிமை பெறுவதன் மூலம் ஒருவர் அனுபவிக்கும் உரிமைகள் ஆகும். |
| 2 | உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் நாடுகளுக்கும் உரியதாகும். | அந்தந்த நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களுக்குகேற்றவாறு வேறுபடும். |
| 3 | எந்தவொரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளை பறிக்க முடியாது. | அந்தந்த நாடுகளின் சிவில் உரிமைகள் மூலம் சுதந்திரத்தை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும். |
| 4 | பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமைகள் | சமூகத்தால் உருவாக்கப்படுகின்றன. |

2. **மனித உரிமைகளின் ஏதேனும் ஐந்து அடிப்படைப் பண்புகளை விவரி.**
   - ❖ **இயல்பானவை** : அவை எந்தவொரு நபராலும் அதிகாரத்தாலும் வழங்கப்படுவதில்லை.
   - ❖ **அடிப்படையானவை** : இந்த அடிப்படை உரிமைகள் இல்லையென்றால் மனிதனின் வாழ்க்கையும், கண்ணியமும் அர்த்தமற்றதாகிவிடும்.
   - ❖ **மாற்ற முடியாதவை** : இவைகள் தனிநபரிடம் இருந்து பறிக்க முடியாதவைகள் ஆகும்.
   - ❖ **பிரிக்க முடியாதவை** : மற்ற உரிமைகளை ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருந்தாலும் கூட இந்த அடிப்படை உரிமைகளை மறுக்க முடியாது.
   - ❖ **உலகளாவியவை** : இந்த உலகளாவிய உரிமைகள் ஒருவரின் தோற்றம் அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இந்த உரிமைகள் பொருந்தும்.
   - ❖ **சார்புடையவை** : இவைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவைகள் ஆகும். ஏனென்றால் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

3. **குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?**
   - ❖ **கல்வி உரிமைச் சட்டம்:** 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.
   - ❖ **குழந்தை தொழிலாளர் சட்டம்:** 15 வயது பூர்த்தியடையாத எந்தவொரு குழந்தையும் வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.
   - ❖ **சிறார் நீதிச்சட்டம், 2000:** போதுமான கவனிப்பு இல்லாத குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்திருத்த முயற்சி செய்கிறது.
   - ❖ **போக்சோ சட்டம் (POCSO) 2012:** பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கிறது.

VIII. **உயர் சிந்தனை வினா.**

1. **உலகளாவிய மனித உரிமைகள் அறிவிப்பு யாருக்கு பொருந்தும்? இது உங்களுக்கு ஏன் முக்கியமாக இருக்கிறது?**
   - ❖ உலகளாவிய மனித உரிமைகள் அறிவிப்பு உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும்.
   - ❖ வாழ்வியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை அனைத்து நாட்டு மக்களும் அனுபவிக்கும் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது.

# சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள்

**I சரியான விடையை தேர்வு செய்க**

1. சிவப்பு விளக்கு ஒளிரும் போது
   அ) பாதை தெளிவாக இருக்கும் போது நீங்கள் தொடர்ந்து செல்லல்லாம்
   **ஆ) நீங்கள் வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு ஒளிரும் வரை காத்திருக்க வேண்டும்**
   இ) உன் நண்பனின் குறுந்தகவலுக்கு விரைவாக பதில் அனுப்பலாம்
   ஈ) செல்லிடப்பேசியில் உரையாடலாம்

2. பாதசாரிகள் சாலையை கடக்குமிடம்
   அ) எங்குவேண்டுமானாலும் ஆ) சமிக்ஞைகளுக்கு அருகில்
   **இ) வரிகோட்டு பாதையில்** ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம்
   அ) டிசம்பர் **ஆ) ஜனவரி** இ) மார்ச் ஈ) மே

4. அவசர காலத்தில், அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண்
   **அ) 108** ஆ) 100 இ) 106 ஈ) 101

5. சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?
   அ) அதிவேகம் ஆ) குடிபோதையில் ஓட்டுதல்
   இ) ஓட்டுநர்கள் கவனச்சிதறல் **ஈ) இவை அனைத்தும்**

6. போக்குவரத்து குறியீடுகளின் முதல் வகை
   **அ) கட்டாய குறியீடுகள்** ஆ) எச்சரிக்கை குறியீடுகள்
   இ) தகவல் குறியீடுகள் ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. சேது பாரதம் திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு
   அ) 2014 ஆ) 2015 **இ) 2016** ஈ) 2017

8. ABS என்பதனை விரிவாக்கம் செய்க.
   அ) எதிர் நிறுத்தி ஆரம்பம் (Anti Brake Start)
   ஆ) வருடாந்திர அடிப்படை அமைப்பு (Annual Bare System)
   **இ) பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பு (Anti-lock Braking System)**
   ஈ) இவற்றுள் எதுவுமில்லை

9. வளைவில் முந்துவது
   அ) அனுமதிக்கப்படுகிறது **ஆ) அனுமதியில்லை**
   இ) கவனத்துடன் அனுமதிக்கப்படுகிறது ஈ) நமது விருப்பம்

10. அவசர சிகிச்சை ஊர்தி வரும்பொழுது
    அ) முன்பக்கம் வாகனம் இல்லாத போது கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும்.
    ஆ) முன்னுரிமை எதுவும் அளிக்கத் தேவையில்லை .
    **இ) நம் வாகனத்தினை சாலை ஓரமாக செலுத்தி தடையில்லாமல் கடக்க அனுமதிக்க வேண்டும்.**
    ஈ) அவசர சிகிச்சை ஊர்தியின் பின்புறம் மிகுந்த வேகத்துடன் பின் தொடர வேண்டும்.

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வாகனம் ஓட்டும் பொழுது எப்போதும் **இடது** புறம் செல்லவும்.
2. கட்டாய குறியீடுகள் **வட்ட** வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
3. **பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பு (ABS)** வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்துகின்றது
4. அதிக வேகம்: **அதிக** ஆபத்து.

5. நான்கு சக்கர வாகனத்தில் இருக்கைப் பட்டை அணிவதும் இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிவதும் கட்டாயம் எனச் சட்டம் உள்ளது.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் | - | வரிக் கோட்டு பாதை |
| 2. புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி | - | சாலைப்பாதுகாப்பு குறித்த சித்திர புத்தகம் |
| 3. பாதசாரி | - | ஆறு மாதங்கள் |
| 4. பிரேசிலியா பிரகடனம் | - | 15 வருடங்கள் |
| 5. சுவச்சசே:ஃபர் | - | பன்னாட்டு மாநாடு |

**விடைகள்: 1. ஆறு மாதங்கள் 2. 15 வருடங்கள் 3. வரிக் கோட்டு பாதை 4. பன்னாட்டு மாநாடு 5. சாலைப்பாதுகாப்பு குறித்த சித்திர புத்தகம்**

**IV. சரியா / தவறா?**

1. சாலை விபத்துக்கள் தொடர்பான பிரச்சனை சாலையில் மட்டுமே உள்ளது. **தவறு**
2. பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினை பார்க்க வேண்டும். **சரி**
3. ஒளிரும் மஞ்சள் விளக்கு, வேகத்தினை குறைத்தும் எச்சரிக்கையுடனும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. **சரி**
4. இருசக்கர வண்டியில் ஒருவர் மட்டுமே பின் இருக்கையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள் **சரி**
5. சாலைகள் மனிதனின் மிக மோசமான கண்டுபிடிப்புகளில் ஒன்று. **தவறு**

**V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

1. பின்வரும் கூற்று(களில்) சரியல்லாதது எது?
(i) முன்புற வாகனத்திலிருந்து சரியான இடைவெளியில் தொடரவும்.
(ii) வேக கட்டுப்பாட்டு அளவினை க் கடை பிடிக்க வேண்டும். ஒருபோதும் வேகத்திற்கான எல்லயினை தாண்டக்கூடாது.
(iii) வாகனம் ஓட்டும்பொழுது இருக்கை வார்பட்டை அணியத் தேவையில்லை .
(iv) வளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகத்தினை குறைக்க வேண்டாம்.
அ) i, iii மட்டும் ஆ) ii, iv மட்டும் இ) i, ii மட்டும் **ஈ) iii, iv மட்டும்**

2. **கூற்று:** மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவது விபத்துக்களை ஏற்படுத்துகின்றது.
**காரணம்:** மயக்கம் காரணமாக பார்வை பாதிக்கப்படுகின்றது.
**அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.**
ஆ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல .
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. **கூற்று:** சாலை குறியீடுகள் எளிதில் புரிந்துகொள்ள கூடிய ஒன்று.
**காரணம்:** அவைகள் பெரும்பாலும் படங்களான இருக்கின்றன.
அ) கூற்று சரி, காரணம் தவறு
**ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.**
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல .

4. பொருந்தாத ஒன்றை கண்டுபிடி (சாலை பாதுகாப்பு விதிகள்).
அ) வளைவுகளில் மெதுவாக செல்
ஆ) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடி
**இ) வாகனம் ஓட்டும் பொழுது செல்லிடப் பேசியை பயனபடுத்து**
ஈ) சாலைகளில் நடப்பதை தவிர்க்கவும்


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**5. பின்வரும் குறியீடுகள் எதைக் குறிப்பிடுகின்றன.**

| | | | | |
|---|---|---|---|---|
|  | ஒரு வழிப்பாதை இடதுபுறம் | |  | மருத்துவமனை |
|  | பாதசாரிகள் கடக்குமிடம் | |  | வலப்பக்க வளைவு |
|  | ஒலிப்பான்கள் பயன்படுத்த தடை | |  | ஆட்கள் வேலை செய்கிறார்கள் |

**VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. சாலைப் பாதுகாப்பினை நீவிர் எவ்வாறு உறுதி செய்வாய்?**

❖ சாலை விதிகளை கடைபிடிப்பதன் வாயிலாக சாலைப் பாதுகாப்பினை உறுதி செய்வேன்.

**2. சாலைப் பாதுகாப்பு நமக்கு ஏன் முக்கியமானது?**


❖ சாலை விபத்துக்கள படுகாயங்களுக்கும் இறப்பிற்கும் வழிவகுப்பதோடு மட்டுமல்லாமல் சமூக மற்றும் பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்துகின்றன.

❖ இதனை தவிர்க்க சாலைப் பாதுகாப்பு நமக்கு முக்கியமானது.

**3. சாலைப் விபத்துக்களின நேரடி விளைவுகள் என்ன?**

❖ உயிரிழப்பு, படுகாயம், உடமைகளுக்கு சேதம்

**4. போக்குவரத்து சமிக்ஞைகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடுக.**



**நில் கவனி செல்**

**5. சாலைப் பாதுகாப்பு குறித்த பிரேசிலியா அறிவிப்பைப் பற்றிக் குறிப்பு எழுதுக.**

❖ இது ஐ. நா. உலக சுகாதார அமைப்பு இணைந்து நடத்திய சாலை பாதுகாப்பிற்கான இரண்டாவது உலகளாவிய உயர்மட்ட மாநாடு ஆகும்.

❖ சாலை பாதுகாப்பினை மிக முக்கியமானதாக கருதி இந்தியா, பிரேசிலியா பிரகடனத்தில் 2015ஆம் ஆண்டு கையெழுத்திட்டது.

**6. சாலைப் பாதுகாப்பு வாரம் கடைபிடிப்பதன் நோக்கம் யாது?**

❖ சாலை பாதுகாப்பு அமைப்பு, விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய விழிப்புணர்வினை வலுப்படுத்த சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் சாலை பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகின்றது.

www.Padasalai.Net

**7. ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக.**

- ❖ இருவழி சாலையில் இடப்புறம் மட்டுமே ஓட்டுநர் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.
- ❖ அனைத்து சாலை சந்திப்புகளிலும் மற்றும் பாதசாரி கடக்கும் கோடுகள் உள்ள இடங்களிலும் ஓட்டுநர் கட்டாயமாக வாகனத்தின் வேகத்தை குறைக்க வேண்டும்.
- ❖ தடை செய்யப்பட்ட இடங்களான மருத்துவமனை, பள்ளிக்கூடம், போன்றவைகளின் அருகில் ஓட்டுநர்கள் ஒலிப்பான்களை பயன்படுத்தக் கூடாது.
- ❖ மருத்துவ ஊர்தி (ambulance), தீயணைப்பு வாகனங்கள், இராணுவ பாதுகாப்பு வாகனங்கள் போன்றவைகளுக்கு வழிவிடுவது நமது பொறுப்பாகும்.

**8. மது அருந்துதல் வாகன ஓட்டுதலை எவ்வாறு பாதிக்கின்றது?**

- ❖ மது அருந்துவது கவனத்தைக் குறைக்கும். அதன் காரணமாக வரும் மயக்கத்தினால் பார்வை தடைபடுகின்றது.
- ❖ மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டும் போது விபத்துக்கள் ஏற்படுகிறது.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.**

**1. சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி.**

**அ. ஓட்டுநர்கள்** - அதிக வேகத்தில் செலுத்துதல், கண்மூடித்தனமாக ஓட்டுதல், விதிகளை மீறுதல், குறியீடுகளை புரிந்து கொள்ள தவறுதல், களைப்பு, சோர்வு மற்றும் மது அருந்துதல் போன்றவை .

**ஆ. பாதசாரிகள்** - கவனமின்மை , கல்வியறிவின்மை , தவறான இடங்களில் சாலையைக் கடப்பது, சாலையில் நடப்பது மற்றும் போக்குவரத்து விதிகளை கவனிக்காமல் சாலையின் குறுக்காக செல்பவர்.

**இ. பயணிகள்** - வாகனத்திற்கு வெளியே உடலின் பகுதிகளை நீட்டுவது, ஓட்டுநர்களுடன் பேசுவது, படிக்கட்டுகளில் பயணம் செய்வது, ஓடும் பேருந்தில் ஏறுவது போன்றவை .

**ஈ. வாகனங்கள்** - தடுத்து நிறுத்தும் கருவி (brake) மற்றும் வாகனத் திசை திருப்பி (Steering) பழுதடைவது, சக்கரத்தில் உள்ள டயர் (ரப்பர்) வெடித்தல், போதுமான வெளிச்சம் தராத முகப்பு விளக்குகள், அதிகப்படியான மற்றும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படி சுமை ஏற்றுதல்.

**உ. சாலைகளின் தரம்** - பழுதடைந்த சாலைகள், குழிகளான சாலைகள், நெடுஞ்சாலைகளை இணைக்கும் அரிக்கப்பட்ட ஊரகச்சாலைகள், சட்டத்திற்கு புறம்பான வேகத்தடைகள் மற்றும் திருப்பங்கள் .

**ஊ. வானிலை** - மூடுபனி, பனி, கனமழை, காற்று, புயல் மற்றும் ஆலங்கட்டி மழை.

**2. சாலை விபத்துக்கள் நடக்காமல் இருக்க இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் விளக்குக.**

- ❖ ஒரு பன்முக ஏற்புடைய வியூகம்:(EEEE) மூலம் மேம்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான சாலை பொறியியலையும் மேம்பட்ட வாகன பாதுகாப்பு தரநிலைகளையும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளித்தல், செம்மைப்படுத்தப்பட்ட அவசர சிகிச்சை பராமரிப்பு மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வை உருவாக்குதல் ஆகியவற்றினை மேற்கொள்கிறது.
- ❖ வாகன பாதுகாப்பு தரத்தை உயர்த்துவது: கனரக வாகனங்களில் பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பும் இரு சக்கர வண்டிகளில் நிறுத்தக்கருவியும் தெளிவாக தெரியும் பொருட்டு தானியங்கி முகப்பு விளக்கு ஒளிர்விப்பானும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ❖ சாலை விபத்தில் சிக்கியவர்களுக்கு பணமில்லா பரிவர்த்தனை மூலம் சிகிச்சை அளிக்கும் முன்னோட்டத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ உடனடி விரைவு அவசர சிகிச்சை ஊர்திகள் தேசிய நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 50 கி.மீ தொலைவிலும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நிறுத்தப்பட்டிருக்கின்றது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

- சேது பாரதம்: தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக மற்றும் தடையற்ற பயணம் செய்ய பாலங்களை கட்டுவதற்கான திட்டம் 2016இல் தொடங்கப்பட்டது.
- வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளை பொருத்துவதை கட்டாயமாக்கியுள்ளது.
- போக்குவரத்து நெருக்கடியுள்ள சாலைகளில் பெரிய டிஜிட்டல் பலகைகள் வாயிலாக தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

**3. சாலை விபத்துக்கள் நடக்காமல் இருக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன?**

- எப்பொழுதும் இடதுபுறமாகவே செல்வது
- வளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகம் குறைத்தல்
- நான்கு சக்கர வாகனத்தில் இருக்கைப் பட்டையும் இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிய வேண்டும்.
- வேகவரம்பை ஒருபோதும் மீறக்கூடாது
- சரியான இடைவெளிவிட்டு பின் தொடரவும்
- வாகனம் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும்.
- சாலை குறியீடுகளைப் பின்பற்றுதல்
- பாதசாரிகள் கடக்கும் பாதையில் (வரிக்கோடு) மட்டுமே சாலையை கடக்க வேண்டும்.

**VIII. உயர் சிந்தனை வினாக்கள்.**

**1. இருசக்கர வாகனம் இரவில் ஓட்டும்போது தேவைப்படுவன யாவை?**

- ஒளி எதிரொளிக்கும் உடைகள், தலைக்கவசம், அதிக தூரம் பார்வை செலுத்தும் வகையிலான முகப்பு விளக்குகள்.

**2. ஓட்டுநர்களின களைப்பு மற்றும் சோர்வினைக் குறைக்கும் வழிகளைப் பட்டியலிடுக.**

- தினமும் 6 முதல் 8 மணி நேர தூக்கம், பயணத்தின் இடையே 2 மணி நேரத்திற்கு ஒருமுறை சிறிது ஓய்வு, இரவு நேர பயணங்களை முடிந்தவரை தவிர்த்தல்.

## பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ................
 **அ) குடியரசுத் தலைவர்** ஆ) பிரதம அமைச்சர் இ) ஆளுநர் ஈ) முதலமைச்சர்

2. இந்திய இராணுவப் படையின் முதன்மை நோக்கமானது
 அ) தேசிய பாதுகாப்பு ஆ) தேசிய ஒற்றுமை
 இ) அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காத்தல் **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

3. இராணுவ தினம் அனுசரிக்கப்படும் நாள்
 **அ) ஜனவரி 15** ஆ) பிப்ரவரி 1 இ) மார்ச் 10 ஈ) அக்டோபர் 7

4. அஸ்ஸாம் ரைபிள்ஸ் எதன் கீழ் செயல்படுகிறது?
 அ) பாதுகாப்பு அமைச்சகம் ஆ) தேசிய பாதுகாப்பு ஆலோசகர்
 இ) திட்ட மேலாண்மை நிறுவனம் **ஈ) உள்துறை அமைச்சகம்**

5. இந்தியக் கடலோரக் காவல்படை நிறுவப்பட்ட ஆண்டு
 அ) 1976 ஆ) 1977 **இ) 1978** ஈ) 1979

6. இந்திய வெளியுறவுக் கொள்கையானது பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவைகளுள் ஒன்று

அ) சத்தியமேவ ஜெயதே **ஆ) பஞ்சசீலம்**
இ) மேற்கூறிய இரண்டும் ஈ) மேற்கூறிய எவையுமில்லை

7. பின்வருவனவற்றுள் எந்த தீவுகள் இந்தியாவிற்கு சொந்தமானவை ?
அ) அந்தமான் மற்றும் மாலத்தீவு **ஆ) அந்தமான் மற்றும் லட்சத்தீவுகள்**
இ) இலங்கை மற்றும் மாலத்தீவு ஈ) மாலத்தீவு மற்றும் லட்சத்தீவுகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்**

1. மெட்ராஸ் ரெஜிமெண்ட் பிரிவின் மையம் அமைந்துள்ள இடம் **உதகமண்டலம்**
2. இந்திய கடற்படையின் தலைமை தளபதி **குடியரசுத்தலைவர்** ஆவார்.
3. இந்திய விமானப்படையிலிருந்து ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி **அர்ஜீன் சிங்** ஆவார்.
4. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினை வடிவமைத்த முதன்மைச் சிற்பி **ஜவஹர்லால் நேரு**
5. அணிசேராமை என்ற சொல்லை உருவாக்கியவர் **வி. கே.கிருஷ்ணமேனன்**

**III. பொருத்துக**

1. நெல்சன் மண்டேலா - 8 உறுப்பினர்கள்
2. தேசிய போர் நினைவுச்சின்னம் - பீல்டு மார்ஷல்
3. மானக் ஷா - எரிசக்தி மேம்பாடு
4. சார்க் - இனவெறிக் கொள்கை
5. பி.சி.ஐ.எம் - புது டெல்லி

**விடைகள்:** **1. இனவெறிக் கொள்கை 2. புது டெல்லி 3. பீல்டு மார்ஷல் 4. 8 உறுப்பினர்கள் 5. எரிசக்தி மேம்பாடு**

**IV. சரியா / தவறா என்று குறிப்பிடுக.**

1. மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. **தவறு**
2. மெட்ராஸ் ரெஜிமென்ட் பழமையான காலாட்படைப் பிரிவுகளில் ஒன்று.**சரி**
3. விரைவு அதிரடிப் படையானது, மத்திய ரிசர்வ் காவல் படையின் (CRPF) ஒரு சிறப்பு பிரிவு ஆகும். **சரி**
4. NCC மாணவர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. **சரி**
5. வங்காளதேசம் இந்தியாவின் ஒரு பகுதி ஆகும். **தவறு**
6. இந்தியாவிற்கும், ASEAN என்ற கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் மியான்மர் ஒரு நிலப்பாலமாக செயல்படுகிறது. **சரி**

**V. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

1. ஆயுதப்படைகள் தொடர்பான பின்வரும் கூற்றினை ஆராய்க.
I. இந்திய இராணுவப் படை ஆயுதப் படைகளின் நிலஅடிப்படையிலான பிரிவு ஆகும்.
II. இந்திய இராணுவப் படையின் நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் மனித மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது.
அ) I மட்டும் சரி ஆ) II மட்டும சரி **இ) I மற்றும் II சரி** ஈ) I மற்றும் II தவறு

2. **கூற்று**: குடியரசுத் தலைவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமை தளபதி ஆவார்.
**காரணம்**: குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகவும் மிக உயர்ந்த பதவி நிலையையும் வகிக்கிறார்.
**அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்**
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. **கூற்று**: பன்னாட்டு கூட்டுறவை இந்தியா ஆதரிக்கிறது.
**காரணம்**: நட்பு - கூட்டுறவு மூலம் நாடுகளுக்கிடையே உள்ள அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்று இந்தியா நம்புகிறது.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு
**இ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்**
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

4. இனவெறிக் கொள்கை பற்றி பின்வரும் எந்த கூற்று சரியானவை அல்ல.
I. நிறவெறிக் கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம்.
II. இது மனிதாபிமானத்திற்கு எதிரானது.
III. இனப்பாகுபாட்டுக் கொள்கை இந்தியாவில் நடைமுறையில் உள்ளது.
அ) I மற்றும் II ஆ) II மற்றும் III இ) II மட்டும் **ஈ) III மட்டும்**

5. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
அ) மாலத்தீவு ஆ) இலங்கை இ) மியான்மர் **ஈ) லட்சத்தீவுகள்**

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. தேசிய பாதுகாப்பு மிக அவசியமானது ஏன்?**
- ❖ ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும்.
- ❖ இதுநாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

**2. பின்வருவனவற்றிற்கு விரிவாக்கம் தருக. அ) SFF ஆ) ICG இ) BSF ஈ) NCC**
அ) SFF - சிறப்பு எல்லைப்புற படை (Special Frontier Force )
ஆ) ICG - இந்தியக் கடலோரக் காவல்படை(Indian Coast Guard)
இ) BSF - எல்லை பாதுகாப்புப் படை (Border Security Force)
ஈ) NCC - தேசிய மாணவர் படை(National Cadet Corps)

**3. மத்திய ரிசர்வ் காவல் படை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**
- ❖ அரசியலைமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பதற்கும் சமூக நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் சட்டம், ஒழுங்கு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பினைத் திறம்பட மற்றும் திறமையாக பராமரிப்பதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு உதவுவதே மத்திய ரிசர்வ் காவல் படையின் நோக்கம் ஆகும்.

**4. அணிசேரா இயக்க நிறுவனத் தலைவர்களின் பெயர்களை குறிப்பிடுக.**
- ❖ இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ருமா

**5. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளை எழுதுக.**
- ❖ தேதிய நலனைப் பாதுகாத்தல்
- ❖ உலக அமைதியினை அடைதல்
- ❖ ஆயுதக் குறைப்பு
- ❖ காலனித்துவம், இனவெறி மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றை நீக்குதல்
- ❖ நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- ❖ பொருளாதார வளர்ச்சி

**6. சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.**
- ❖ இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூடான், இலங்கை , மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான்.

**VII. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. இந்திய இராணுவப் படையின் அமைப்பு மற்றும் நிர்வாகத்தினை விவரி.**

- இந்திய இராணுவப் படை என்பது நில அடிப்படையிலான ஒரு பிரிவு ஆகும்.
- இது ஜெனரல் என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது.
- இந்திய இராணுவம் ரெஜிமென்ட் என்ற அமைப்பு முறையைக் கொண்டது.
- இது செயல்பாட்டு ரீதியிலும் புவியியல் அடிப்படையிலும் ஏழு படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாத்தல், நாட்டின் எல்லைக்குள் அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதல் ஆகியன இதன் முதன்மைப் பணிகளாகும்.

**2. துணை இராணுவப் படை பற்றி எழுதுக.**

- உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கவும், கடலோரப் பகுதியை பாதுகாக்கவும்,
- இராணுவத்திற்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் படைகள் துணை இராணுவப் படைகள் என்றழைக்கப்படுகின்றன .
- இரயில் நிலையங்கள், எண்ணெய் வயல்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய முக்கியமான பகுதிகளை பாதுகாக்கும் பணியைச் செய்கிறது.
- இயற்கை மற்றும் மனித பேரழிவுகளிலிருந்து மக்களை மீட்கும் பணியிலும் இப்படைகள் ஈடுபடுகின்றன .
- அமைதி காலங்களில் இந்த துணை இராணுவப் படைகள் சர்வதேச எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கின்றன .
- அவைகள்: 1. அஸ்ஸாம் ரைபிள்ஸ் (AR) 2. சிறப்பு எல்லைப்புறப் படை (SFF)

**3. பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகளை எழுதுக.**

- ஜவஹர்லால் நேரு அவர்கள் பஞ்சசீலம் என்றழைக்கப்பட்ட இந்தியாவின் அமைதிக்கான ஐந்து கொள்கைகளை அறிவித்தார். அவைகள்:

1. ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
4. பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
5. அமைதியாக இணைந்திருத்தல்

**4. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. எப்படி?**

**அண்டை நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு**

- இந்தியா எப்போதும் சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பை கொண்டுள்ளது.
- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது நட்புறவுகளை வளர்ப்பது மற்றும் அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**அண்டை நாடுகளுக்கான முன்னுரிமைக் கொள்கை**

- வளஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சி ஆகிய வடிவில் அண்டை நாடுகளுக்கு தேவையான ஆதரவினை இந்தியா அளித்து வருகிறது.
- பொருட்கள், மக்கள், ஆற்றல், மூலதனம் மற்றும் தகவல்கள் ஆகியவற்றின் தடையில்லா பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்காக அதிக இணைப்பும் ஒருங்கிணைப்பும் அளிக்கப்படுகிறது. - இவை இந்தியாவின் அண்டை நாடுகளுடனான உறவை மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துகிறது.

**VIII. உயர் சிந்தனை வினா (HOTs).**

**1. பாதுகாப்பு படைப் பிரிவுகளில் பணிசெய்வது நாட்டின் மிக மதிப்பு மிக்க மற்றும் மரியாதைக்குரிய நிலையை உறுதிப்படுத்துகிறது. அதன் முக்கியத்துவத்தை பட்டியலிடுக.**

- ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும்.
- தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாத்தல், நாட்டின் எல்லைக்குள் அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு இந்திய குடிமகனும் பாதுகாப்பு படைப் பிரிவுகளில் பணிசெய்வது நாட்டின் மிக மதிப்பு மிக்க மரியாதைக்குரிய நிலையை உறுதிப்படுத்துகிறது.

## நீதித்துறை

**I. சரியான விடையை தேர்ந்தெடு**

1. இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை.
அ) குடியரசுத் தலைவர் ஆ) நாடாளுமன்றம்
**இ) உச்ச நீதிமன்றம்** ஈ) பிரதம அமைச்சர்

2. ...............க்கு இடையே பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு செயல்முறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது.
அ) குடிமக்கள் ஆ) குடிமக்கள் மற்றும் அரசாங்கம்
இ) இரண்டு மாநில அரசாங்கங்கள் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

3. கீழ்க்கண்ட எந்த அதிகார வரம்பின் மூலம் இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனைகளை உச்ச நீதிமன்றம் தீர்க்க வழிவகை செய்கிறது?
**அ) முதன்மை அதிகார வரம்பு** ஆ) மேல்முறையீட்டு அதிகார வரம்பு
இ) ஆலோசனை அதிகார வரம்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4. பின்வரும் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசம் ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது?
அ) பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் மற்றும் வங்காளம்
**இ) பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர்** ஈ) உத்தரபிரதேசம் மற்றும் பீகார்

5. பொதுநல வழக்கு முறை இந்தியாவில் ................ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
**அ) உச்ச நீதிமன்றம்** ஆ) நாடாளுமன்றம்
இ) அரசியல் கட்சிகள் ஈ) அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள்

6. இந்தியாவில் உச்ச நிலையில் உள்ள நீதிமன்றங்கள் எத்தனை?
**அ) ஒன்று** ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

7. உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள இடம்
அ) சண்டிகர் ஆ) பம்பாய் இ) கல்கத்தா **ஈ) புது தில்லி**

8. FIR என்பது
**அ) முதல் தகவல் அறிக்கை** ஆ) முதல் தகவல் முடிவு
இ) முதல் நிகழ்வு அறிக்கை ஈ) மேற்கூறிய எவையுமில்லை

9. குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ...............என அழைக்கப்படுகின்றன .
அ) மாவட்ட நீதிமன்றங்கள் **ஆ) அமர்வு நீதிமன்றம்**
இ) குடும்ப நீதிமன்றங்கள் ஈ) வருவாய் நீதிமன்றங்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. **கல்கத்தா** நீதிமன்றம் இந்தியாவின் பழமையான நீதிமன்றம் ஆகும்.
2. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் **சுதந்திரம்** மற்றும் **நடுநிலைத்தன்மை** உடன் இந்திய நீதித்துறையை நிறுவினர்.
3. புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவஞானியான **மாண்ட்டெஸ்கியு** "ஒரு சுதந்திரமான நீதித்துறை" என்ற கருத்தை முன்மொழிந்தார்.
4. **உரிமையியல் சட்டங்கள்** பணம், சொத்து, சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது.
5. பழங்காலத்தில் பெரும்பாலான அரசர்களின் நீதிமன்றங்கள் **தர்மத்தின்படி** நீதியை வழங்கின.

**III. பொருத்துக.**

1 உச்ச நீதிமன்றம் - சமூக கடமைகள்
2 உயர் நீதிமன்றம் - விரைவான நீதி
3 லோக் அதாலத் - இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம்
4 சர் எலிஜா இம்ஃபே - மாநிலத்தின் உயர்ந்த நீதிமன்றம்
5 ஸ்மிருதி - முதல் தலைமை நீதிபதி

**விடைகள்:** **1. இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம் 2. மாநிலத்தின் உயர்ந்த நீதிமன்றம் 3. விரைவான நீதி 4. முதல் தலைமை நீதிபதி 5. சமூக கடமைகள்**

**IV. சரியா / தவறா என குறிப்பிடுக.**

1. 1951ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் இந்திய உச்ச நீதிமன்றம் தொடங்கப்பட்டது. **தவறு**
2. துக்ளக் ஆட்சிக்காலத்தில் சட்ட நடைமுறைகள் அரபுமொழியில் எழுதப்பட்டன. **சரி**
3. 1773ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச்சட்டம் உச்ச நீதிமன்றம் அமைப்பதற்கு வழிவகுத்தது. **சரி**
4. சதர் திவானி அதாலத் ஒரு குற்றவியல் நீதிமன்றமாகும். **தவறு**
5. இந்தியாவில் மிகப்பெரிய நீதிமன்றம் அலகாபாத் நீதிமன்றம் ஆகும். **சரி**
6. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கான நீதியை பாதுகாக்கிறது. **சரி**

**V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

1. பின்வரும் கூற்றை ஆராய்க.

i) மெக்காலே பிரபுவால் ஒரு சட்ட ஆணையம் அமைக்கப்பட்டது.
ii) இது இந்தியச் சட்டங்களை நெறிமுறைப்படுத்தியது.

மேலே கொடுக்கப்பட்ட எந்த கூற்று/ கூற்றுகள் சரியானவை

அ) i மட்டும் ஆ) ii மட்டும் **இ) i மற்றும் ii** ஈ) இரண்டும் இல்லை

2. பின்வரும் கூற்றை ஆராய்க

i) இந்திய தண்டனைச் சட்டம் 1860 இல் உருவாக்கப்பட்டது.
ii) கல்கத்தா உயர்நீதிமன்றம் 1862 இல் நிறுவப்பட்டது.
iii) 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கூட்டாட்சி நீதிமன்றத்தை உருவாக்கியது.

மேலே கொடுக்கப்பட்ட எந்த கூற்று / கூற்றுகள் சரியானவை

அ) i மட்டும் ஆ) ii மற்றும் iii மட்டும் இ) i, iii மட்டும் **ஈ) அனைத்தும்**

3. இந்திய உச்ச நீதிமன்றம் பற்றிய பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல.

i) இந்தியாவின் உச்ச நீதிமன்றம் நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் ஆகும்.
ii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் பகுதி V-இன்படி நிறுவப்பட்டது.
iii) ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு வழக்குகளை உச்ச நீதிமன்றத்தால் மாற்ற முடியாது.
iv) இதன் முடிவுகள் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.

அ) i ஆ) ii **இ) iii** ஈ) iv

4. **கூற்று**: உச்ச நீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றமாகும்.
**காரணம்**: இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளைப் பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ் நீதிமன்றங்களை கட்டுப்படுத்தும்.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று காரணம் இரண்டும் தவறு
**இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.**
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

5. ஆம் / இல்லை எனக் கூறுக.
அ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் உச்ச நீதிமன்றத்தை அணுகலாம். **ஆம்**
ஆ) பணக்காரர் மற்றும் சக்தி படைத்த மக்கள் நீதித்துறை அமைப்பை கட்டுப்படுத்துகின்றனர். **இல்லை**
இ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நீதிமன்றங்களின் மூலம் நீதியைப் பெற உரிமை உடையவராவர். **ஆம்**
ஈ) அரசியல்வாதிகள் நீதிபதிகளைக் கட்டுப்படுத்த முடியாது. **ஆம்**

**VI. பின்வருவனவற்றிக்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.**

**1. நீதித்துறை அமைப்பு நமக்கு ஏன் தேவைப்படுகிறது?**
- அனைவருக்கும் முறையான நீதி கிடைப்பதை உறுதி செய்ய நீதித்துறை அமைப்பு நமக்கு தேவைப்படுகிறது.

**2. இந்திய நீதிமன்றங்களின் பல்வேறு படிநிலைகள் யாவை?**
- இந்திய உச்ச நீதிமன்றம் - உயர் நீதிமன்றம் - மாவட்ட நீதிமன்றம் - துணை நீதிமன்றங்கள்

**3. சட்டம், நீதித்துறை - வேறுபடுத்துக.**

| | சட்டம் | நீதித்துறை |
|---|---|---|
| 1 | இது மக்களை ஆள்வதற்கு ஓர் அரசாங்கத்தாலோ (அ) நிறுவனத்தாலோ விதிக்கப்படும் விதிகளின் அமைப்பு ஆகும். | சட்டப்பபடி, ஒரு நாட்டின் பெயரால் நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்களின் அமைப்பு நீதித்துறை எனப்படுகிறது. |

**4. மக்கள் நீதிமன்றம் பற்றி குறிப்பு எழுதுக.**
- விரைவான நீதியை வழங்க லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது.
- இது மக்கள் முன்னிலையில் மக்கள் பேசும் மொழியிலேயே பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது.

**5. நடமாடும் நீதிமன்றங்களின் நன்மைகள் யாவை?**
- கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து, அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கிறது.

**VII. பின்வருவனவற்றிக்கு விரிவான விடையளி.**

**1. நீதித்துறையின் பங்கு பற்றி எழுதுக.**
- ஒரு நாட்டின் நீதி அமைப்பு அனைவருக்கும் முறையான நீதி கிடைப்பதை உறுதி செய்ய திறனுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.
- இந்தியா ஒன்றிணைந்த மற்றும் ஒருங்கிணைந்த நீதித்துறை அமைப்பைக் கொண்டுள்ளது.
- அரசாங்கத்தின் ஓர் அங்கமாக நீதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

❖ இது நீதியை நிர்வகித்தல், தகராறுகளை தீர்த்தல், சட்டங்களுக்கு விளக்கம் அளித்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

**2. உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம் - வேறுபடுத்துக.**

| | உரிமையியல் சட்டம் | குற்றவியல் சட்டம் |
|---|---|---|
| 1 | இது பணம், சொத்து மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது. எ.கா. நிலம், வாடகை , திருமணம் தொடர்பான பிரச்சனைகள் . | குற்றம் என சட்டம் வரையறுக்கும் நடத்தைகள் அல்லது செயல்களை இது விசாரிக்கிறது. எ.கா. திருட்டு, கொலை , பெண்களைத் துன்புறுத்துதல் ஆகியன. |
| 2 | உரிமையியல் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும் | இது வழக்கமாக காவல்துறை விசாரணையுடன் முதல் தகவல் அறிக்கை(FIR) பதிவு செய்வதன் மூலம் தொடங்குகிறது. அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. |
| 3 | மனுதாரரின் கோரிக்கையின்படி பணம் செலுத்தும்படியான தண்டனைகள் வழங்கப்படுகிறது | குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் சிறைக்கு அனுப்பப்படுவார். |

**3. உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விவரி.**

**அ. முதன்மை அதிகார வரம்பு:**

இது மத்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் , இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் ஆகியன முதன்மை அதிகார வரம்புக்குள் அடங்கும்.

**ஆ. மேல் முறையீட்டு அதிகார வரம்பு:**

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

**இ. ஆலோசனை அதிகார வரம்பு:**

குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்படும் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி குறித்து ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

**ஈ. நீதிப் பேராணை அதிகார வரம்பு:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32ன் படி உச்ச நீதிமன்றமும் சட்டப்பிரிவு 226ன் படி உயர்நீதிமன்றமும் நீதிப் பேராணைகளை வழங்குகின்றன .

**உ. ஆவண நீதிமன்றம்:**

இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளை பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ்நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும்.

**ஊ. சிறப்பு அதிகாரங்கள்:**

இது கீழ் நீதிமன்றங்களின் செயல்பாட்டை கண்காணிக்கிறது.

# பொருளியியல்

## அலகு - 1 பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வெண்கலம் **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

2. காகித பணத்தை அறிமுகப்படுத்தியது யார்?

**அ) பிரிட்டிஷ்** ஆ) துருக்கியர் இ) முகலாய பேரரசு ஈ) மௌரியர்கள்

3. பணத்தின் மதிப்பு
அ) அக பணமதிப்பு ஆ) புற பண மதிப்பு **இ) அ மற்றும் ஆ** ஈ) எதுவுமில்லை

4. வங்கி பணம் என்பது எது?
**அ) காசோலை** ஆ) வரைவு
இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். முதலீட்டுக் கருவி போன்றவைகள்
அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள் இ) பரஸ்பர நிதி **ஈ) வரி செலுத்துவது**

6. பணவியல் மற்றும் நிதித்தகவல் சேகரிப்பு மற்றும் வெளியீட்டுக்கு பொறுப்பானவர் யார்?
அ) நிதிக்குழு ஆ) நிதியமைச்சகம்
**இ) இந்திய ரிசர்வ் வங்கி** ஈ) இந்திய தணிக்கை மற்றும் தலைமை கணக்காயர் அலுவலர்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. நிகழ்நிலை வங்கியை **இணைய வங்கி** என்று அழைக்கலாம்.
2. பணம் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே **பணம்**
3. வங்கி என்ற சொல் **ஜெர்மானிய** வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
4. பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் **பண்டம் மற்றும் பணிகளை வாங்கும் சக்தி.**
5. இந்திய வங்கியியல் கட்டுப்பாட்டுச் சட்டம் **1949**

**III பொருத்துக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | **பண்டமாற்று முறை** | - | **அ.** | **வரி ஏமாற்றுபவர்கள்** |
| 2. | இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் | - | ஆ. | மின்னணு பணம் |
| 3. | மின் - பணம் | - | இ. | நுகர்வு தவிர்த்த வருமானம் |
| 4. | சேமிப்பு | - | ஈ. | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 5. | கருப்பு பணம் | - | உ. | 1935 |

**விடைகள் : 1 - ஈ, 2 - உ, 3 - ஆ, 4 - இ, 5 - அ**

**IV கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி**

1. 'பணம்' என்ற வார்த்தை எதன் மூலம் பெறப்பட்டது? **"மொனேட்டா ஜுனோ "**
2. குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்கள் எந்த வங்கி வழங்குகிறது? **வணிக வங்கிகள்**

**V சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்**

1. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன
I. இருமுகத்தேவை பொருத்தமின்மை
II. செல்வத்தை சேமிக்க சிரமமில்லை
III. பொதுவான மதிப்பின் அளவுகோல்
IV. பொருட்களின் பகுபடாமை
அ) I மற்றும் II சரி ஆ) I மற்றும் IV சரி **இ) I, III மற்றும் IV சரி** ஈ) மேற்கூறிய அனைத்தும்

**VI. தவறான ஒன்றினை கண்டுபிடிக்க**

1. பரிமாற்றத்திற்கு பணத்தின் சமீபத்திய வடிவங்கள்
அ) பற்று அட்டை **ஆ) பண்டமாற்று முறை** இ) கடன் அட்டை ஈ) நிகழ் நிலை வங்கி

2. பொருளாதாரத்தில் இருப்புப் பணத்தின் விளைவுகள்
அ) இரட்டை பொருளாதாரம் ஆ) சமத்துவம் வலுவிழத்தல்
**இ) உற்பத்தியில் விளைவுகள் இல்லை** ஈ) ஆடம்பர நுகர்வுச் செலவு

**VII கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி.**

**1. பண்டமாற்று முறை என்றால் என்ன?**

❖ பணத்தை பயன்படுத்தாமல் மனிதர்கள் பண்டங்களுக்கு, பண்டங்களை பரிமாற்றம் செய்வது பண்டமாற்று முறை ஆகும்

**2. அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?**

❖ நெகிழிப் பணம், மின்னனு பணம், நிகழ்நிலை வங்கி (இணைய வங்கி), மின் வங்கி,

**3. மின் - வங்கி மற்றும் மின் - பணம் - சிறு குறிப்பு வரைக.**

❖ **மின் வங்கி** - மின்னனு வங்கியை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT) என்றும் அழைக்கலாம் . காசோலை அல்லது ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.

❖ **மின்னனு பணம்** - மின்னனுப் பணம் என்பது வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னனு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.

**4. உங்கள் வாழ்க்கையில் பணத்தின் அத்தியாவசியங்கள் யாவை?**

❖ பண்ட மற்றும் பணிகளை வாங்க பணம் அவசியம்.

❖ மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் சேவைகளை சேமித்து வைத்து எதிர்காலத்தில் செல்வத்தையும், வர்த்தகத்தையும் நாம் பெற முடியும்.

**5. பணத்தின் மதிப்பு என்றால் என்ன?**

❖ பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும்.

❖ இது பண்ட பணிகளின் விலை அளவை சார்ந்திருக்கும்.

**6. வணிக வங்கி என்றால் என்ன? மற்றும் வைப்புகளின் வகைகள் யாவை?**

**வணிக வங்கி** :

❖ ஒருவருக்கு காசோலை வரைவதன் மூலம் தனது வைப்புகளை மீளப்பெறும் உரிமையினை வழங்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

❖ **வைப்புகளின் வகைகள்** :

1. மாணவர் சேமிப்பு கணக்கு
2. சேமிப்பு வைப்பு
3. நடப்பு கணக்கு வைப்பு
4. நிரந்தர வைப்பு

**7. சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன ?**

**சேமிப்பு** :

❖ வருவாயில் நடப்பு நுகர்விற்கு பயன்படாத ஒரு பகுதி சேமிப்பாகும். அவை எதிர்கால பயன்பாட்டிற்கு ஒதுக்கி வைக்கப்படுகிறது.

**முதலீடு** :

❖ இலாப நோக்கோடு பணத்தை அல்லது செல்வத்தை ஏதேனும் ஒரு பொருளாதார செயல்பாட்டில் ஈடுபடுத்துவது முதலீடு ஆகும்.

**8. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன ?**

❖ கருப்பு பணம் என்பது நாட்டின் ஒழுங்கு கட்டுப்படுத்துகையில் சட்ட விரோதமாக சம்பாதிக்கும் அல்லது பதுக்கப்படும் பணமாகும்.

**9. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை ?**

1. இரட்டை பொருளாதாரம்
2. உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**VIII கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி**

**1. பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை ?**

1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. பொருட்களின் பகுபடாமை
4. செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்

**2. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக.**

- காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பணம் பல நிலைகளில் உருவானது.
- பணத்தின் பரிணாமம் பல நிலைகளை கடந்துள்ளது.
- பண்டப் பணம், உலோக பணம், காகித பணம், கடன் பணம், நிகர் பணம் போன்றவைகள் சமீப கால பணத்தின் வடிவங்கள் ஆகும்.
- ஆரம்ப மற்றும் பழங்கால நிலைதான் பண்டமாற்று முறையாகும்.
- மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தில் பண்ட பணம், உலோக பணமாக மாறியது.
- காகித பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாக கருதப்படுகிறது.

**3. பணத்தின் பணிகள் யாவை ? அவற்றை விளக்குக.**

- **முதன்மை அல்லது முக்கிய பணிகள்**
  1. பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை
  2. மதிப்பின் அளவுகோல்
- **இரண்டாம் நிலை பணிகள்**
  (i) எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு
  (ii) மதிப்பின் நிலை கலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்
  (iii) மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி

**4. வங்கி வைப்புகளின் வகைகளை விவரி.**

**1. மாணவர் சேமிப்பு கணக்கு** - பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கான சேமிப்பு கணக்குகள் ஆகும். பூஜ்ஜிய இருப்புத் தொகை கொண்டது .

**2. சேமிப்பு வைப்பு** - வாடிக்கையாளர்கள் தன்னுடைய நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பிக்கும் கணக்கு ஆகும்.

**3. நடப்பு கணக்கு வைப்பு** - நடப்பு கணக்குகள் பொதுவாக வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ள நடப்பு கணக்கு உதவுகின்றது.

**4. நிரந்தர வை ப்பு**

நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும், விரும்புவார்கள். அவை குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

**6. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை ?**

1. இரட்டை பொருளாதாரம் 2. உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
6. ஆடம்பர நுகர்வு செலவு
7. உற்பத்தி முறையில் விலகல்
8. பற்றாக்குறை பணத்தை விநியோகித்தல்
9. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்
10. உற்பத்தி மீதான விளைவுகள்


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**5. சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?**

| ஒப்பீட்டின் அடிப்படை | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|
| பொருள் | சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும். | முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல்முறையை குறிக்கிறது. |
| நோக்கம் | சேமிப்பு குறுகிய கால அல்லது அவசரகால தேவைகளை நிறைவேற்றும் | மூலதன உருவாக்கத்திற்கும், வருவாய்க்கும் முதலீடு உதவுகிறது. |
| இடர்பாடு | குறைந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட அளவு | மிக அதிகம் |
| வருவாய் | இல்லை அல்லது குறைவு | ஒப்பீட்டளவில் அதிகம் |
| நீர்மை நன்மை | அதிக நீர்மை | குறைந்த நீர்மை |

## பொது மற்றும் தனியார் துறைகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. இந்தியாவில் பொதுத்துறைகளின் தோற்றத்திற்கு காரணமான இந்திய அரசின் தொழில் கொள்கையின் தீர்மானம் .................ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

அ) 1957 ஆ) 1958 இ) 1966 **ஈ) 1956**

2. கலப்புப் பொருளாதார நன்மைகளின் கலவை என்பது

அ) முதலாளித்துவம் ஆ) சமதர்மம் **இ) அ மற்றும் ஆ சரி** ஈ) அ மற்றும் ஆ தவறு

3. ..............நிறுவனச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் முதன்மையான முக்கிய பங்குதாரர்.

அ) தனியார் துறை ஆ) கூட்டு துறை **இ) பொதுத்துறை** ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. பொதுத்துறை .............உடையது.

அ) இலாப நோக்கம் **ஆ) சேவை நோக்கம்**

இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1..**பொதுத்துறை** மற்றும் **தனியார் துறை** ஆகியவை சமூகத்தின் அனைத்து பிரிவினரின் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அந்தந்த பணிகளை மேற்கொள்வதில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. தனியார் துறை **இலாப** நோக்கத்தில் செயல்படுகிறது.

3. **சமூக பொருளாதார மேம்பாடு** என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

4. தனியார் துறையின் முக்கிய செயல்பாடுகளை தோற்றுவிப்பது **புதுமை** மற்றும் **நவீனமாதல்** ஆகும்.

5. குடிமக்கள் மத்தியில் **சமூக பொருளாதார மேம்பாடு** மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

**III. பின்வருவனவற்றை பொருத்துக.**

1. மதியுரையகக் குழு - முதன்மை துறை
2. வேளாண்மை - மொத்த உள்நாட்டு உற்பத்தி
3. தொழில்கள் - நிதி ஆயோக்
4. GDP - நவரத்னா தொழில்
5. BHEL - இரண்டாம் துறை

**விடைகள்: 1. நிதி ஆயோக் 2. முதன்மை துறை 3. இரண்டாம் துறை 4. மொத்த உள்நாட்டு உற்பத்தி 5. நவரத்னா தொழில்**

**IV. பொருத்தமற்றதை கூறு.**

1. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட பின்வருவனவற்றில் எந்த குறியீடு பயன்படுத்தப்படுவதில்லை .

**அ) கருப்புப் பணம்** ஆ) ஆயுட்காலம்
இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஈ) வேலைவாய்ப்பு

**V. பின்வருவனவற்றுள் எது சரியான விடை .**

1 i) அரசுக்கு மட்டுமே சொந்தமான தொழில்கள் அட்டவணை - A என குறிப்பிடப்படுகின்றன.
ii) தனியார் துறையானது மாநில துறையின் முயற்சிகளுக்கு துணை புரியக் கூடிய தொழில்கள் புதிய அலகுகளை தொடங்குவதற்கான முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்வது அட்டவணை - B என குறிப்பிடப்படுகின்றன.
iii) தனியார் துறையில் இருந்த மீதமுள்ள தொழில்கள் அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை.

அ) அனைத்தும் சரி ஆ) i மற்றும் iii சரி
**இ) i மற்றும் ii சரி** ஈ) இவற்றில் எதுவும் இல்லை

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. பொதுத் துறைகள் குறித்து சிறு குறிப்பு எழுதுக?**

- ❖ அரசு, பொது மக்களுக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள துறை பொதுத்துறை ஆகும்.
- ❖ இது அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது.

**2. சமுதாய தேவை என்றால் என்ன?**

- ❖ கல்வியறிவு, வேலைவாய்ப்பு, சமூக பொருளாதார மேம்பாடு, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியனவாகும்.

**3. பொதுத்துறையின் நோக்கங்களை எழுதுக?**

- ❖ விரைவான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- ❖ வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களை உருவாக்குதல்.
- ❖ வருமானம் மற்றும் செல்வங்களை மறுபகிர்வு செய்வதை ஊக்குவித்தல்.
- ❖ வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- ❖ சமச்சீர் வட்டார வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- ❖ சிறிய அளவிலான மற்றும் துணைத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- ❖ ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் இறக்குமதிக்கு மாற்றீடை துரிதப்படுத்துதல்.

**4. பொதுத் துறைகளின் மூன்று உறுப்புகள் யாவை?**

1. அரசுத்துறைகளால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள்
2. கூட்டுத் துறை நிறுவனங்கள் 3. பொதுக் கழகம்

**5. சமூக -பொருளாதார மேம்பாட்டை அளவிடும் சில குறியீடுகளின் பெயர்களை கூறுக.**

- ⁕ மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP),
- ⁕ ஆயுட்காலம்,
- ⁕ கல்வியறிவு,
- ⁕ வேலைவாய்ப்பின் அளவு


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**6. தனியார் துறை குறித்து சிறு குறிப்பு எழுதுக?**

- ❖ தனியார் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு சொந்தமான, அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படும் ஒரு தேசிய பொருளாதாரத்தின் பிரிவு தனியார் துறை என்று அழைக்கப்படுகிறது.

**7. தனியார் துறை நிறுவனங்களில் ஏதேனும் மூன்றினை கூறுக.**

- இன்போசிஸ் நிறுவனம்
- ஆதித்யா பிர்லா நிறுவனம்
- ரிலையன்ஸ்
- டாட்டா குழும நிறுவனங்கள்
- விப்ரோ நிறுவனம்
- இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம்
- ஐசிஐசிஐ வங்கி நிறுவனம்

**VII. பின்வருபவைகளுக்கு விரிவான விடை தருக.**

**1. பொதுத்துறையின் உறுப்புகள் பற்றி விளக்குக.**

**1. அரசுத்துறைகளால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள்**

- ❖ ஒரு அரசாங்க துறையின் நிர்வாகம் என்பது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் பொதுவானதாகும்.
- ❖ **எடுத்துக்காட்டு:** தபால் மற்றும் தந்தி, இரயில்வே , துறைமுக அறக்கட்டளை

**.2. கூட்டுத்துறை நிறுவனங்கள்**

- ❖ இது ஒரு நிறுவன சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் அரசாங்கம் ஒரு பிரதான பங்குதாரராக இருந்து கட்டுப்படுத்தப்படுகிறது.
- ❖ **எடுத்துக்காட்டு:** இந்தியன் ஆயில் பெட்ரோனாஸ் தனியார் நிறுவனம், இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம், ரத்னகிரி கேஸ் அண்ட் பவர் தனியார் நிறுவனம், இந்தியன் செயற்கை ரப்பர் நிறுவனம்.

**3. பொதுக் கழகம்**

- ❖ பொதுக் கழக அமைப்பானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தினால் பொதுக் கழகத்தினை நிறுவுவதே ஆகும்.
- ❖ **எடுத்துக்காட்டு:** ஆயுள்காப்பீட்டு நிறுவனம் (LIC), ஏர் இந்தியா, இந்திய ரிசர்வ் வங்கி, மின்சார வாரியம்.

**2. பொதுத்துறையின் வரலாற்றை சுருக்கமாக விளக்குக.**

- ❖ 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, அது பலவீனமான தொழில்துறை தளத்தைக் கொண்ட வேளாண்மையை முதன்மையாக கொண்ட நாடாகும்.
- ❖ 1948ஆம் ஆண்டு முதல் தொழில்துறை கொள்கை தீர்மானத்தின் அறிவிப்பில் தொழில்துறை வளர்ச்சியின் யுக்திகளை பரந்த வரையறைகளைக் கொண்டு வகுத்தது.
- ❖ தொழில்துறை வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் 1951ஆம் ஆண்டில் தொழில்துறை சட்டம் இயற்றப்பட்டது.
- ❖ இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் (1956-60), 1956ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானமும் நேருவின் தேசிய தொழில்மய மாக்கல் கொள்கையை பூர்த்தி செய்ய பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியை வலியுறுத்தியது.
- ❖ அவரது பார்வையை "இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களின் தந்தை " என்று அழைக்கப்படும் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி முன்னெடுத்துச் சென்றார்.

**3. சமூக - பொருளாதார மேம்பாட்டினை அளவிடும் குறியீடுகள் ஏதேனும் ஐந்தினை பற்றி விளக்குக.**

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) சமூக- பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் துணைபுரிகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**ஆயுட்காலம்**

- ❖ 2011ஆம் ஆண்டு இந்தியாவின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சராசரி ஆயுட்காலம் ஆண்களுக்கு 65.80 ஆண்டுகள் மற்றும் பெண்களுக்கு 68.33 ஆண்டுகள் ஆகும்.
- ❖ பல்வேறு திட்டங்கள் மூலம் அரசாங்கம் அதிக அளவு சுகாதார நடவடிக்கைகளை வழங்குகிறது.

**கல்வியறிவு**

- ❖ சமூக பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), அனைவருக்கும் இடைநிலை கல்வித்திட்டம் (RMSA), கல்வியில் தரத்தின் அளவை அதிகரிப்பதற்காக அரசால் வழங்கப்படுகிறது.

**வேலை வாய்ப்பு**

- ❖ வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதற்காக குறைந்த கட்டணத்தில் மின்சார வரிச்சலுகை போன்ற பல சலுகைகளை வழங்குவதன் மூலம் பின்தங்கிய பகுதிகளில் தொழில் துறையை தொடங்க தனியார் துறைகளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.
- ❖ இதனால் வட்டார ஏற்றத்தாழ்வுகளை நீக்குகிறது.

**வீடு, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் வழங்குதல்**

- ❖ அரசுத் துறையானது வீட்டு வசதிகள், சுத்தமான குடிநீர் வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வழங்குகிறது.
- ❖ இது போன்ற வசதிகளை வழங்குவதால், மக்களின் வாழ்க்கை சுழற்சி அதிகரிக்கிறது.

**4. பொதுத் துறையின் முக்கியத்துவம் யாது?**

- ❖ பொதுத்துறை மற்றும் மூலதன உருவாக்கம்
- ❖ பொருளாதார மேம்பாடு
- ❖ சமச்சீரான வட்டார வளர்ச்சி
- ❖ வேலை வாய்ப்பு உருவாக்கம்
- ❖ ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் அந்நிய செலாவணி வருவாய்
- ❖ நலிவடைந்த தொழில்களுக்கு பாதுகாப்பு
- ❖ இறக்குமதி மாற்று

**5. பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக?**

| | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1 | தொழில்களின் உரிமையானது அரசாங்கத்திடம் உள்ளது | தொழில்களின் உரிமையானது தனிநபர்களிடம் உள்ளது |
| 2 | பொதுத்துறை தொழிலாளர்களுக்கு முறையான ஊதியத்தை உறுதி செய்கிறது | தனியார் துறை தொழிலாளர்களை சுரண்டுகிறது |
| 3 | வரி ஏய்ப்பு இல்லை | வரி ஏய்ப்பு உண்டு |
| 4 | இது சேவை நோக்கமுடையது | இது இலாப நோக்கமுடையது |
| 5 | இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது | இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை |
| 6 | எ.காட்டு: **NLC, SAIL, BSNL** | எ.காட்டு: **TVS Motors, TATA Steel, Ashok Leyland** |

**6. தனியார் துறையின் பணிகளைப் பற்றி எழுதுக**


- ❖ தனியார் துறையின் முக்கிய செயல்பாடு புதுமை மற்றும் நவீனமயமாதலை உருவாக்குவதாகும். இலாப நோக்கத்தோடு இயங்க கண்டறிவதற்கும், உற்பத்தியின் புதியநுட்பங்களை கண்டுபிடிப்பதற்கும், உற்பத்தி நடவடிக்கைகளை விஞ்ஞான முறையில் நிர்வகிப்பதற்கும் அவர்களை தூண்டுகிறது.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

- உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- இருக்கின்ற வணிகங்களை ஊக்குவித்தல், விரிவுபடுத்துதல்.
- மனித மூலதன வளர்ச்சியை ஊக்குவித்தல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு குறிப்பாக தொழிலாளர் சந்தையில் பங்கேற்க உதவுதல் மற்றும் சமூக வணிக மற்றும் கூட்டுறவு, உள்ளூர் பரிமாற்ற அமைப்புகள் மற்றும் முறைசாரா கடன் போன்றவற்றை ஊக்குவிப்பதன் மூலம் சமூக வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- சிறு, நுண் மற்றும் நடுத்தர நிறுவனங்களை (*SMME*) வழங்குவதன் மூலம் அளிப்பு பக்க நடவடிக்கைகள் மற்றும் தேவை பக்க நடவடிக்கைகளை கோருதல் மற்றும் நகரத்தில் முதலீட்டை ஈர்த்தல்.

## பயிற்சி வரைபடங்கள்


**1.இந்தியா**



2. உலக வரைபடம்




3. ஆஸ்திரேலியா



www.Padasalai.Net

## 4. ஆப்பிரிக்கா


வ
Tropic of Cancer
20°N
Equator
0°
20°S
Tropic of Capricorn
Mountain Peak
Mountains
0 300 600 miles
0 300 600 kilometers
Lambert Azimuthal Equal-Area Projection
20°W
0°
20°E
40°E

www.Padasalai.Net